ஸ்ரீ

॥ 𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃 ॥

வேதாந்த தீபிகை.

ஸம்பாதகர்:—ஸ்ரீவாஸுதேவாசார்யர்.

ஸம்புடம் 21.] சுக்லஹூ தை-மாசிமீ [ஸஞ்சிகை 4-5

𑌤𑍍𑌰𑌿𑌭𑍁𑌵𑌨𑌕𑌮𑌨𑌂 𑌤𑌮𑌾𑌲𑌵𑌰𑍍𑌣𑌂 𑌰𑌵𑌿𑌕𑌰𑌗𑍌𑌰𑌵𑌰𑌾𑌮𑍍𑌬𑌰𑌂 𑌦𑌧𑌾𑌨𑍇 ।
𑌵𑌪𑍁𑌰𑌲𑌕𑌕𑍁𑌲𑌾𑌵𑍃𑌤𑌾𑌨𑌨𑌾𑌬𑍍𑌜𑌂 𑌵𑌿𑌜𑌯𑌸𑌖𑍇 𑌰𑌤𑌿𑌰𑌸𑍍𑌤𑍁 𑌮𑍇𑌽𑌨𑌵𑌦𑍍𑌯𑌾

[ஸ்ரீ பாகவதம். 1-9-23]

ஸ்ரீ

ஸ்ரீஸங்கல்ப ஸூர்யோதயம்

(ஸ்ரீ. உப. வித்வான் ஏ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, திருச்சி.

(ஸஞ்சிகை 3, பக்கம்—44 தொடர்ச்சி.)

ப்ரவேசகம் முடிந்ததும், விவேக மஹா ராஜரும் ஸேநாபதியாகிய வ்யவஸாயனும் ப்ரவேசிக்கிறார்கள். பரமத நிரஸந வ்ருத்தாந்தம் ப்ரதிமுக ஸந்தி யாகுமென்று முன்பே காட்டினோம். ஆநுஷங்கிகமான கார்யத்தால் நஷ்டம் போயிருந்த பீஜத்தை மறுபடியும் வெளிப்படுத்துவது ப்ரதிமுகம். பரமதங்களுடன் வாதம் நமக்கு ஆநுஷங்கிகம். இந்த ஸந்தியில் வ்யவஸாயம் என்பது ஓர் அங்கம். ப்ரதிஜ்ஞா ஹேதுக்களோடு கூடிய வார்த்தையை நாடகத்தில் வ்யவஸாயமென்பர். இங்கு, வ்யவஸாயனையே பாத்ரமாக வைத்திருக்கிற சாதுர்யத்தை எப்படிப் புகழ்வதோ அறிகிலோம். ப்ரதிஜ்ஞா ஹேது முதலியவை வாத ப்ரகரணத்தில் அத்யந்தம் ஸுஸங்கதம். வேதாந்த ஸித்தாந்தத்திற்கு விரோதமாகப் பல பரமதங்கள் ஏற்பட்டு, அந்த வாதங்களால் ஏற்படும் மனக் குழப்பத்தினால் கலங்கி, வெகு காலமாய் த்ருடமாய்ச் சேர்ந்திருக்கும் கர்ம பாசத்தினால் கட்டுப்பட்டிருப்பதால், ஆத்ம யாத்ரைக்கு அநுகூலமில்லாத வீணான வ்யாபாரங்களைச் செய்துகொண்டு, மஹாமோஹனுக்கு உட்

224

பட்டு, எப்பொழுதும் மோஹ மடைந்துகொண்டே யிருக்கும் ஜீவனைக் கர்ம பாசத்தினின்றும் விடுவித்து, கலங்காப் பெரு நகரைச் சேரும் பாக்யத்தை அடைவிக்க வேண்டுமென்று கங்கணம் கட்டிக்கொண்டு வ்யவஸாயம் செய்கிற மஹாராஜர், பரமதங்கள் கணக்கில்லாமல் லோகத்தில் பரவியிருப்பதைப் பற்றித் துயரப்படுகிறார்.

இவ்வுலகமோ ஜடமதிகளால் நிறைந்திருக்கிறது. புத்திமான்களால் நிறைந்திருந்தால் ப்ரபலமான பரமதங்கள் அநேகம் ஏற்பட்டாலும், புத்திமான்களுடைய மனத்தைக் கலக்க முடியாது. "லோக: ஸர்வஸ்ததீய நேயப்ரவ்ருத்தி:" என்கிற ந்யாயப்படி ஜடமதிகள் பிறர் போன வழியாய் கதாநுகதிகர்களாய்ச் செல்வர். புத்திமான்களான ஸத்துக்களாயிருந்தால், அவர்கள் தாங்களே பரீக்ஷித்து, சீர்தூக்கிப் பார்த்து, பாரமார்த்திகமான வேதாந்த ஸித்தாந்தத்தை த்ருடமாய் அவலம்பிப்பார்கள். புத்திக் குறைவானவர்களை ஏமாற்றித் தங்கள் வசமாக்குகிறார்களே என்று அநுதாபம். பரமதங்கள் ஒன்று இரண்டல்ல; பல. அநேக தீர்த்தகாரர்கள் ஜனித்து இத்தர்சநங்களை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். பகவானால் உபதேசிக்கப்பட்ட வைதிக தர்சநத்திற்கு விரோதமாகப் பகவானை மீறி, அவருக்கு எதிரிகளாக இவர்கள் பிறந்தார்கள் என்றால், இவர்கள் பகவதிச்சைக்கு விரோதமாக அவனுடைய கர்த்ருத்வ மன்றியில் பிறப்பவர் என்று ஏற்பட்டு, இவர்களை உத்தேசித்து ஈச்வரனுக்குக் காரணத்வம் இல்லாமல் போகுமே என்கிற சங்கை வர, இவர்கள் தெய்வத்தினுடைய கோபத்திலிருந்து பிறந்தவரென்று ஸமாதாநம் செய்யப்படுகிறது. தெய்வ கோபத்திலிருந்து பிறந்தவரென்று சொல்வதினால், ஜாயமாந தசையில் குளிர்ந்த கடாக்ஷத்தினால் பிறப்பவர் ஸாத்விகர் ஆவதைப் போலில்லாமல், கோப த்ருஷ்டியால் பிறந்தவர் என்று பாவம். கோபத்தினால் உதயமானவர்கள் ஜகத்தின் பேரில் கோபத்தையே செலுத்துகிறார்கள். இவர்களுடைய வைரம் யாதொரு அபராதம் என்கிற காரணத்தையும் எதிர்பார்க்கமாட்டாது.

நிரபராதிகளான ஜனங்களிடத்தில் இவர்களுடைய வைரம் நிர்ஹேதுகமானது. ஸத்ஸம்ப்ரதாயத்தில் உள்ள ஸதாசார்யர்கள், அபராதிகளாயிருக்கும் ஜனங்களிடத்திலும் நிர்வ்யாஜமான ஸௌஹ்ருதத்தை உடையவராயிருப்பர். பரஸமயத்தார் இதற்கு நேர் எதிர்த்தட்டாய் இருப்பர். இவர்கள் ஸித்தாந்தங்கள் ஏற்படுத்துவது, கலஹத்திற்காக மட்டுமே யொழிய ஒரு பேற்றை ஸாதிக்க வேண்டியல்ல. வைதிக மதத்தோடு கலஹம் செய்வதில் மட்டும் அவர்களுக்கு நோக்கு. ஸ்வபக்ஷ ஸ்தாபநத்தில் அவர்களுக்கு அவ்வளவு நோக்கில்லை. க்லுப்த ஸித்தாந்தங்கள் என்பதனால், அந்த மதங்கள் கல்பிதங்களே யொழிய ஸ்வதஸ் ஸித்தமல்ல. ஸித்தாந்த பேதங்கள் என்று பேர் வைத்துக்கொண்டாலும் அவைகள் பேற்றல் பேதங்களேயாகும். பேற்றுவதில் ப்ரகார பேதங்களேயாகும். ஸித்தாந்தம் என்றால் ஸித்தமான அந்தம் அல்லது நிச்சயத்தை உடைய மதமாகும். அது ஸநாதநமாய் அநாதியாய் ஸித்தமாயிருந்தால் தான்

பாரமார்த்திக ஸித்தாந்தம் என்னும் பெயருக்கு உரியதாகும். கல்பிதமானல், அது ஸித்தாந்தமாகாது. க்லுப்தம் ஸித்தமாகாது என்கிற விரோதத்தைக் காட்ட "ஸூஷுவிஸாஜ ஹெஷாஃ" என்று ப்ரயோகிக்கப்பட்டது. இவர்கள் மதங்கள் கல்பநம் செய்து, அதோடு நிற்காமல், லஜ்ஜை முதலியவை இல்லாமல் ப்ரகல்பர்களாய்த் தங்களைச் சேர்ந்தவர்களுக்குத் தங்கள் ப்ரலபநங்களைப் பாடம் சொல்லி வைக்கிறார்கள். பிறர்க்குப் பாடம் சொல்லிவைத்து, அதை ப்ரசாரப் படுத்துவது பெரிய அநர்த்தம். ப்ரஹ்லாதர், முதலில் தாம் மட்டும் ஹரி பஜநம் செய்து கொண்டிருந்தது ஹிரண்யனுக்கு அத்தனை ஸங்கடமாயில்லை. பாலர்களுக்குத் தம்முடைய தர்சநத்தை உபதேசஞ் செய்து, அவர்களைத் தமது வசம் ஆக்கிக்கொள்வதைக் கேட்டதும், 'இனி அவரைத் தன் ராஜ்யமாகிய உலகத்திற்குள் வைக்கக்கூடாது' என்று ஹிரண்யன் நிச்சயஞ் செய்தானென்று பராசரர் கூறுகிறார்.

துர்மதங்கள் சப்பாத்திக் கள்ளிகளைப் போல், பூமியைக் கொத்திவிடுதல், ஜலம் பாய்ச்சுதல், முதலிய யாதொரு ப்ரயத்நமன்றியில் எங்கும் வ்யாபித்து விஸ்தாரமாய் தானாகவே பரவி விடும். களைகள் மண்டிப்பயிரை ஓங்கவொட்டாமல் அடிப்பதுபோல், வைதிக ஸித்தாந்த மென்னும் ஸஸ்யத்தைப் பரமதங்களாகிய முட்செடிகள் எங்கே பார்த்தாலும் பரவி, தானாகவே வ்யாபித்திருக்கும். ம்ருத ஸஞ்ஜீவிநியான ஓஷதிகள் தேடிக் காணவேண்டிய தசையை அடைந்துவிட்டதென்று மஹாராஜர் சோகிக்கிறார். இங்கே ம்ருத ஸஞ்சீவிநி என்கிற பதத்தினால் "ஷ்ருவமதவ்ராணாதஸஞ்ஜீவிநீ" என்று வர்ணிக்கப்பட்ட பாராசர்ய வசஸ்ஸுதையான வேதாந்த ஸித்தாந்தம் ஸூசிக்கப்படுகிறது. ஸ்ரீபாஷ்யத்திற்கு அந்த ச்லோகம் ப்ரவேசகமாவது போல், இந்த நாடகத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் ப்ரவேசிப்பதற்கு இந்த நிர்த்தேசம் ப்ரவேசகமாகும். ஸித்தாந்தத்தை ம்ருத ஸஞ்ஜீவிநி என்று சொல்லுவதால், பரமதங்கள் ப்ராணவாங்களையும் ம்ருதப்ராய ராக்குமென்று ஸூசிதம். இப்படித் துயர்க்கடலில் ஆழ்ந்திருக்கும் மஹாராஜர், பரவாதிகளுடன் தமது ஸபாரங்கத்தில் வாத யுத்தம் நடக்கப்போகுந் தருணத்தில், "ஜிமீஷதொ ஜெ கவிதாகிஷுகெஷுராஜு ஜிஹ்வாமு விஂஹாஸநஹ்யூவெயா:" என்கிறபடி வெள்ளைப் பரிமுகரை அக்ர ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளப்பண்ணி, ஜயத்தை த்ருடப் படுத்திக்கொள்ள, அவரை இவ்விரண்டு ச்லோகங்களால் த்யாநம் செய்கிறார். வாத க்ரந்தமாகிய சததூஷணியும் "ஸாஹாரவஷா ஸநு" என்கிற ஹயக்ரீவ த்யாந ச்லோகத்தோடு ஆரம்பிக்கப்பட்டது. ஸ்ரீமாத்வ மத க்ரந்தங்களில், "முகக்ஷீ ஹயமீ வவாரவஹனெ நஃ" என்று சொல்லிக்கொண்டே ஆரம்பம் செய்யப்பட்டிருக்கிறது. ராமாநுஜ தர்சநத்தை அவலம்பித்து, அப்பய்ய தீக்ஷிதரால் செய்யப்பட்ட நயமயூகமாலிகையில் "ஹெஷாரவெ:" என்று "ஹயமீவஹெஷாஹஹுஹ" த்யாநத்தோடு ஆரம்பிக்கிறார். இங்கே நடக்கப்போகும் யுத்தம் சாஸ்த்ர யுத்தமல்ல; ஜ்ஞாந யுத்தம். யஜ்ஞங்களில் ஜ்ஞாந யஜ்ஞம் என்று சொல்வது போல், யுத்தங்களில், இது ஜ்ஞாந யுத்தம். இதில்

சத்ரு வத மில்லை; ரக்தம் சிந்துவது மில்லை; உயிர்ச்சேத மில்லை. இதில், போன உயிர் திரும்பி வரும். இங்கு ஜ்ஞாநபல மொன்றே அபேக்ஷிதம். அதற்காக, ஜ்ஞாந ப்ராதாநத்திற்காகவே அவதரித்த ஜ்ஞாந மூர்த்தியைத் தொழுகிறார். அவரை அஜ்ஞாந இருட்டை அகற்றும் தேஜஸ்ஸாகவே த்யாநம் செய்கிறார். ஸாமாந்ய தேஜஸ்ஸுக்கு, மனத்திற்குள்ளே யிருக்கும் இருட்டை அகற்ற வலிமை யிராது. சப்த மென்கிற பெயரையுடைய ஜ்யோதிஸ்ஸானது இல்லாமற் போனால், ஜகத் முழுவதும் அஜ்ஞாநம் என்கிற இருளினால் மூடியே யிருக்கும் என்று பெரியோர் சொல்லுவர். ஜ்ஞாநத்தைக் கொடுக்கும் சப்தம் காதின் வழியாய் மனத்திற்குள்ளே சென்று அங்குள்ள இருட்டைப் போக்கும். இதைத் திருவுள்ளம் பற்றி "ஹேஷாஹலஹலம்" [கனைப்பின் ஒலி உடையது] என்று இந்தத் தேஜஸ்ஸை விசேஷித்தார். ஜ்ஞாநாநந்த மய ரென்றும், நிர்மலமான ஸ்படிகத்தைப் போன்ற ஆகாரமுடையவ ரென்றும், ஸர்வ வித்யைகளுக்கும் ஆதார மானவர் என்றும், ஹயக்ரீவ ஸ்தோத்ரத்தில் முதல் ச்லோகத்தில் ஹயக்ரீவனை அநுஸந்தாநம் செய்தார். அவரை ஜ்ஞாநமய ரென்று வர்ணிக்கவே, "மூன்று நான்கு க்ஷணங்கள் தானே ஜ்ஞாநம் நிற்கும்; அது உண்டாய்க்கொண்டும் போய்க் கொண்டும் இருக்குமே" என்று ஆக்ஷேபம் வர, 'இந்த ஜ்ஞாந மூர்த்தி ஸ்வதஸ்ஸித்தமான ஜ்ஞாந ஸ்வரூபர்; இது நித்யஸித்தமான ஜ்ஞாநம்" என்று 'ஸ்வதஸ்ஸிதம்' என்கிற முதல் விசேஷணத்தால் சங்கா பரிஹாரம் செய்கிறார். ஜ்ஞாநவிசேஷமான ஆநந்தத்தில் இப்படியே உதிக்கும் சங்கையும் இதனால் பரிஹ்ருதம். பச்சை மாமலைபோல் மேனியையுடைய மூர்த்தியைப் போலல்லாது, வெள்ளை மலையான சுத்த ஸ்படிக மலையை ஒக்கும் இவர் திருமேனி. இங்கு ஸாத்ருச்யத்தைக் காட்ட 'ப்ரதிபடம்' என்ற சப்தம் ப்ரயோகித்தது அழகு.

ப்ரக்ருதமான வாதயுத்தத்தில் எதிரிகளுக்கு ப்ரதிபடமாக யுத்தம் செய்யக் கூடிய வீரபடாபேக்ஷை உண்டு. இந்த ப்ரதிபடர், யாரை ஹநநம் செய்வார் என்று கேட்டால் இவர் ஒரு சத்ருபுருஷரையுங் கொல்லார். ஆனால் அசேஷ அவத்யங்களையும், அதாவது அவர்களுடைய மதிதோஷங்களை மட்டும் கொல்வார் என்று "ஹதாசேஷாவத்யம்" என்கிற விசேஷணத்தால் வேடிக்கையாய் ஸூசிக்கிறார். இந்த ஹயக்ரீவ ப்ரஹ்மம், தான் ப்ருஹத்தான வெள்ளைப்படிகத்தைப்போல் இருப்பது மன்றியில், மூவுலகத்தையும் வெண்மையான தன் ஸத்வ் காந்திகளினால் நிரப்பி, நம் ஆகாரத்தைப்போல் ப்ரஹ்மணம் செய்கிறார். ப்ருந்தாவநத்தை நீலமேக ச்யாமளனான கண்ணன் மேகமயமாகச் செய்தது போல், இவர் தீப்தமான தம்முடைய ஒளியால் உலகத்தை அம்ருதத்தைப்போல் வெண்மையாகச் செய்கிறார். பச்சை மாமலைபோல் மேனியையுடைய கடவுளர், தங்கள் திருக்கண்களிலிருந்து உதிக்கும் நீண்ட வெண்மையான கடாக்ஷ தேஜஸ்ஸுக்களினால் உலகத்தை வெண்மை யாக்குவர். பெரிய பெருமாள் விஷயத்தில், நயந மஹஸ்ஸினுடைய வெண்மை ப்ரவாஹத்தால் பாபாக்நி மண்டி எரிவதால், கரி கனமாய்ப் படிந்த ஜகத்தினின்றும் மாஸிகை

ஸயைக் கரி தெரியாமல் கெட்டியாய் அழியாத வெள்ளைப் பூச்சினல் பூசுகிரு ரென்று உத்ப்ரேக்ஷை. இந்த ஜ்ஞாந மூர்த்தி முழுவதும் வெண்மையான தால், திருமேனி முழுவதிலுமிருந்து வெண்மையான கிரணங்கள் பரவி, மூவுலகும் வ்யாபிக்கிறது. இங்கே 'ஸுதயா' சப்தத்தால் வெண்மை மட்டு மல்லாமல், அம்ருதத்வம் என்பதும் ஸூசிக்கப்படுகிறது. வெண்மையாலும் அம்ருதத்வத்தாலும் நிரப்புகிருர். "ஸுதயா" சப்தத்தால் ஸ்ரீபாஷ்யமங்கள ச்லோகமான "வாராஸயஅுவ அஹ்ஸுயாம்" என்கிற ச்லோகம் புத்திஸ்தம் என் றும் ஸூசிக்கிருர். ஸ்ரீபாஷ்ய ஸித்தாந்தமே ஸ்ரீபாஷ்யகார வேஷத்தைத் தரித்துக்கொண்டு இதோ ப்ரவேசிக்கப் போகிறது. இந்த ஸந்தர்ப்பத்தில் ஸ்ரீபாஷ்ய மங்கள ச்லோகங்களை ஸ்மரிப்பது உசிதம். இங்கே, 'த்ரஹுவநம்' என்பதினல், வாதத்தில் ஸித்தாந்தியான வாதியையும், ப்ரதிபக்ஷர்களான புறச்சமயத்தாரையும் ப்ராச்நிகர்களான மத்யஸ்தர்களையும் கொள்ளலாம். இவர்கள் எல்லோரையும் ஜ்ஞாந ரச்மிகளினல் பூசுகிருர். ப்ரதிபக்ஷர்களைத் தோற்கடித்து வெளியே துரத்தி விடுவதில் நோக்கில்லை. அவர்கள் புத்தியையும் தெளிவித்து, அவர்களையும் ஜ்ஞாநிகளாய்த் திருப்புவதில் நோக்கு. இந்தத் தேஜஸ்ஸில் அநந்தமான சப்தம் உளது.

பகவானென்னும் ஜ்யோதிஸ்ஸினுடைய மூச்சுக்காற்று வேதங்களென்று ச்ருதி. ஹயக்ரீவ தேஜஸ்ஸினுடைய கனைப்பு வேதமாகும். வேதாந்த வாதம் நடக்கப்போகிறபடியாலும், இந்த அத்யாத்ம நாடகத்தில் ஜ்ஞாநமயமான இவ ருடைய ஆத்ம ஜ்ஞாநாநுக்ரஹம் ப்ரதாநமானபடியாலும், இவருடைய கனைப்பு அநந்தங்களான வேதாந்தமயமென்று கூறப்படுகிறது. அடுத்த ச்லோகத்தில் வேதங்கள் இவர் முகத்திலிருந்து கிளம்பும் கனைப்பில் அடங்கியதென்று கூறு கிருர். வேதங்களின் பூர்வ பாகத்தைப் பின்பும், கடைசி பாகத்தை முன்பும் இங்கு நிர்த்தேசித்திருப்பதற்குக் காரணம், இங்கே வேதாந்த ஸித்தாந்தத்தைப் பற்றி வேதாந்தங்களே அவச்யாபேக்ஷிதமானது பற்றியே வேதாந்தங்கள் வேதங் களுக்கு முடிவானலும், அவைகளுக்கு முடிவு கிடையாது. முடிவுகளுக்கு முடி வில்லை என்று வேடிக்கை. இவர் கனைப்பை வேதாந்தங்கள் அநுஸரிக்கும். இப்படி வேதாந்தங்களை மட்டும் சொல்லவே, எல்லா வேதங்களாலேயும் பகவானே அறி யப்படுகிருனென்கிற ப்ரமாண வசநப்படிக்கும், ராஹு மீமாம்ஸகரைப் போலல் லாமல் இரண்டு காண்டங்களும் ஒரே சாஸ்த்ரமென்கிற உங்கள் ஸித்தாந்தத் தின்படிக்கும், வேதங்களையும் வேதாந்தங்களையும் சேர்த்துக் கொள்ளாமல், இந்த முதலாசிரியர் வேதங்களை மட்டும் எப்படிச் சொல்லலாமென்று ஆக்ஷே பிக்க இடம் வந்தது. அந்த ஆக்ஷேபத்தைப் பரிஹரிக்க, வேதங்களையும் இவ ரால் ப்ரவர்த்திதமாக அடுத்த ச்லோகத்தில் கூறுகிருர்.

ஹயக்ரீவனுடைய கனைப்பின் 'ஹலஹல' வென்ற ஒலி ஸாமங்களின் ஸமா ஹாரமாகும்; ருக்குகளின் ப்ரதிபதமாகும்; யஜுஸ்ஸுக்களின் நிவாஸஸ்தாநமும் ப்ரபையுமாகும். குழந்தைப் பருவத்திலேயே காநரஸிகனுகிய கண்ணன், தேர்

தட்டில் கீதையைப்பாடும் அவஸரத்தில், காநத்திற்கு உபயோகமான கீதிகளான ஸாமவேதம் எல்லா வேதங்களிலும் உயர்ந்ததாக நிரூபிக்கப்பட்டது உசிதம். பகவதபிப்ராயத்தை அநுஸரித்து இங்கே ஸாமங்களை முதலில் கூறியது. ஸகல ஸாமகாநங்களின் சேர்த்தியாகும் இந்தக் கனைப்பு. ‘ப்ரதிபதம்’ என்றால் பர்யாயம் அல்லது வேறு பெயரென்று அர்த்தம். ஸாம கீதிகளைச் சேர்த்துச் சுருட்டியது இந்தக் கனைப்பொலி. இந்த ஒலியையே ருக்குக்களென்றும் சொல்லலாம். ருக்வேதத்திலுள்ள ஒவ்வொரு ருக்கின் ஒவ்வொரு பதத்தையும் இந்தக் கனைப்பில் ஸ்பஷ்டமாகக்காணலாம். ருக்குக்களின் ப்ரதிபதமும் இதில் தெரியும். ஒவ்வொரு ஸாமப் பாட்டின் எல்லா காநபக்திகளையும் இதில் காணலாம். யஜுர் வேதத்திலுள்ள யஜுஸ்ஸுக்கள் முழுவதும் இதில் குடிகொண்டு உஜ்வலமாய் ப்ரகாசிக்கும்; காநமாகவும் இதை அநுபவிக்கலாம். நாடகத்திற்கு இந்த ஒலி உபயோகப்படுமென்கிற க்ரமங்களை முன்பேகாட்டினோம். ப்ரத்யூஹங்களென்கிற விக்நங்களுக்கு இது லயமாகும். பாட்டில் இதுலயமாகும். ‘தாம’ வென்பது கீதத்தில் ச்ருதியாகும். ஸகலமநோ துக்கங்களும் காநரஸத்தினால் லயத்தையடையும்; ப்ரதிவாத விக்நங்களும் லீநமாகும். காநத்தில் ராக ஸமுத்ரத்திற்கு முன்னும் பின்னும் ஆரோஹாவரோஹத்தோடு வீசும் அலைகளாகிய ஆலாபநங்களாகும். வாதிக்கு ஜ்ஞாநம் பொய் ஜ்ஞாநமாகும். இந்த ஒலியிலிருந்து உண்டாகும் ஜ்ஞாந ஒளி அந்த:கரண குஹைக்குள்ளே ப்ரதிவாதிகளின் வாதி கோலாஹல சப்தங்களினாலுண்டாகும் இருட்டையகற்றும். ஹயக்ரீவனை த்யாநம் செய்து, அவருடைய அநுக்ரஹத்தை ப்ரார்த்தித்தவுடன், ஸேநாபதியான வ்யவஸாயர் அவருக்குத் தைர்யம் சொல்லுகிறார். ஹயக்ரீவனுடைய கனைப்பில் ப்ரகாசிக்கும் வேதாந்தமென்னும் ஆரண்யகம், ஜீவனைத் தகையும் மோஹம் விவேகத்தால் த்வம்ஸமடையுமென்று ஆணையிடுகிறது வீண்போகுமா? ஸீதையைத் தகைந்த மோஹமயனான ராவணனுடையத்வம்ஸத்தில் அநரண்யனுடைய சாபம் எப்படி வீண்போகவில்லையோ, அப்படியே இந்த ஆரண்யக ப்ரதிஜ்ஞையும் வீண்போகாது. ஆரண்யவாஸிகளான ருஷிகளுடைய பாஷிதங்கள் அந்ருதமாகா வென்றும், ருஷிகள் சாபம் வீண்போகாதென்றும் ப்ரஸித்தம். அரண்ய ஸம்பந்தமில்லாத அநரண்யன் வார்த்தைக்கே அஸுர வித்வம்ஸநத்தில் இவ்வளவு வீர்யமிருக்க, அரண்ய பவமான ஆரண்யகங்களின் தீர்மாந ப்ரதிஜ்ஞை வீணாகாதென்பதில் ஸம்சயஹேது வில்லை என்பது கருத்து. ‘வேதாந்த விஜ்ஞாநம் ஜீவனுக்கு ஏற்பட்ட போதிலும் அதில் ச்ரத்தை சலிக்காமலிருக்க, பரமத தோஷங்களைத் தெரிந்து கொண்டு அவற்றின் அஸாரதையைத் தெளிந்துகொள்வதற்காக வாதம் செய்கிறோமேயல்லது, வீதராகரான நாம் அவர்களோடு க்ரோதத்தினால் எதிர்வாதம் செய்யவில்லை. நமது மதத்தில் நம்மைச் சேர்ந்தவருடைய ச்ரத்தைக் குறைவைச் சமநம் செய்வதற்காகமட்டும் நம்முடைய வாதஸம்ரம்பம். பரஸமயத்தாரை ஜயித்து அவர்களைச் சமநம் செய்ய நாம் ஸம்ரம்பப்படவில்லை’ யென்று “ஸ்ருஜாவெகஷ்யூராத் ருஷு ஸுநீப” என்று காட்டுகிறார்.

ஸ்ரீ:

இரண்டாந் திருவந்தாதி.

(உரையாசிரியர்: ஸ்ரீ. உப வித்வான் வை மு. கோபால க்ருஷ்ணமாசார்யம்)

(ஸம்புடம் 20, ஸஞ்சிகை 2-3, பக்கம் 63 தொடர்ச்சி)

91. பின்னு லருநரகஞ் சேராமற் பேதுறுவீர்
முன்னல் வணங்க முயன்மினோ—பன்னூ
லளந்தானிக் கார்க்கடல்சூழ் ஞாலத்தை யெல்லா
மளந்தா னவன்சே வடி.

(இ—ள்) பேதுறவீர்—'பாபபலமான நரகம் வரிற் செய்வதென்?' என்று அஞ்சி, அறிவு கலங்கி நிற்குமவர்களே!—பல் நூல் அளந்தான் - (ஶ்ருதி ஸ்ம்ருதி முதலான) பலவகைப்பட்ட சாஸ்திரங்களாலும் (உள்ளபடியாக) அறுதியிடப்பட்டிருக்குமவனும், கார் கடல் சூழ் இ ஞாலத்தை எல்லாம் அளந்தான்—கறுத்த கடலாலே சூழப்பட்ட இத்தப் பூமியையெல்லாம் அளந்து கொண்ட (ஸௌலப்ய குணத்தையுடைய) வனுமான, அவன் - அந்த ஸர்வேஶ்வரனுடைய, சே அடி - சிவந்த திருவடிகளை, பின்னல் (ஶரீராவஸாநத்திற்குப், பின்பு, அரு நரகம் - பொறுக்கவொண்ணாத நரகங்களில், சேராமல் - சென்று கிட்டாதபடியாக,—(பின்னைச் செய்கிறோமென்று ஆறியிராமல்), முன்னல்- முற்பட, வணங்க - வணங்கும்படி, முயன்மின் - உற்சாகங்கொள்ளுங்கள்; (எ—று.)

ப்ரக்ருதி பரவசராகிப் பாபத்தைச் செய்வதால் ஶரீரவிஶ்லேஷத்தின் பிறகு நரகம் ஒருவகையாலும் தப்பாது. ஆகையால் அவன் திருவடிகளை முற்பட வணங்கப் பாருங்கோளென்கிறார்.

சரீர காரியமே விஞ்சியிருப்பதால் பகவானை வணங்குவதென்பதைப் பின்னலே பார்த்துக்கொள்வோமென்று ஆறியிருப்பின், அது நடவாதாகையால், முந்தற வணங்கிப் பிறகு தேஹயாத்திரையைப் பார்த்துக்கொள்ளுங்கோளென்று உலகோர்க்கு உபதேசிக்கிறாரென்க. வேதாதி ப்ரமாண ப்ரஸித்தனைக் கிட்டுதற்கு அரியனென்று விட்டிட வேண்டாதபடி யாவர் தலையிலும் தனது திருப்பாதங்களை ஊன்றிய ஸுலபனென்பதற்காக, பன்னூலளந்தா னென்பதன் பின், இக்கார்க்கடல்சூழ் ஞாலத்தை யெல்லாமளந்தா னென்கிறார். (கக)

92. அடியால்முற் கஞ்சனைச் செற்றமர ரேத்தும்
படியான் கொடிமேற்புட் கொண்டான்—நெடியான்ற
னமமே யேத்துமின்க ளேத்தினற் றும்வேண்டுங்
நாமமே காட்டுங் கடிது.

(இ—ள்.) அடியால் - ("பாதபங்கயமே தலைக்கணியால்" என்றளன்போல்வார் ஆசைப்படுகிற ஸுகுமாரமான) திருவடிகளாலே, முன் - தன்னை வஞ்சிப்பதற்கு, முன்னே, கஞ்சனை, (அவ்வண்ணம் தன்னை வஞ்சிக்க நினைத்த) கம்ஸனை, செற்று - (கெடுநினைவு அவனோடே போகும்படி அவன் மார்விலே யேறி யுதைத்து) முடித்து,—அமரர் ஏத்தும் - (அந்தக் கம்ஸவதஞ் செய்வதி லீடுபட்டு ப்ரஹ்மாதி) தேவர்கள் ('தேவராலே எங்கள் குடியிருப்புப் பெற்றோம்' என்று) வாய்விட்டுப் புகழும்படியான, படியான் - ஸ்வபாவத்தையுடையவனும், கொடிமேல் புள் கொண்டான் - ரக்ஷணத்துக்காகக் கட்டிய) கொடிமீது பெரிய திருவடியையுடையவனும், நெடியான்தன் - (ஒருநாள் ஒரு திருநாமஞ் சொன்னவனை) நெடுக நினைத்துக்கொண்டிருக்கும் ஸ்வபாவமுடையவனுமான எம்பெருமானுடைய, நாமமே - திருநாமங்களையே, ஏத்துமின்கள் - வாய்விட்டுச் சொல்லிப் புகழுங்கள்; ஏத்தினல் - (அப்படிப்) புகழ்ந்தால், தாம் வேண்டும் - தந்தாம் வேண்டுகின்ற, காமம் - புருஷார்த்தங்களை, கடிது - விரைவாக, காட்டும் - (கைப்படும்படி அவன்) காட்டித் தருவான்; (எ—று.)

கீழ்ப் பாசுரத்தில் நரகஞ் சேராமலிருப்பதற்காக எம்பெருமானை வணங்கி முற்படுங்க ளென்றார்: அங்ஙனம் முற்பட்டு வணங்கி, அவன் திருநாமங்களை யேத்தினல், அநிஷ்ட நிவ்ருத்தியே யன்றி, அப்பரமன் உமக்கு வேண்டியவெல்லாமும் தரு மென்கிறார். வேண்டுங் காமம் - ஐஸ்வர்ய கைவல்ய பகவல்லாபங்கள். ஏத்துமின்கள், கடிதுகாட்டும்' என்றதனல் - தேவதாந்தர பஜநம்போல ஆஸ்ரயணம் அருமைப்படாது; பயனும் விளம்பியா தென்பது பெறப்படும். (கூஉ)

93. கடிது கொடுநரகம் பிற்காலுஞ் செய்கை
கொடிதென் றதுகூடா முன்னம் - வடிசங்கங்
கொண்டானைக் கூந்தல்வாய் கீண்டானைக் கொங்கைநஞ்
சுண்டானை யேத்துமினோ வுற்று

(இ—ள்.) 'கொடு நரகம் - கொடிய நரகம், கடிது - (காண்பதற்கே) கொடுமையானது; பிற்காலும் - பின்னும், செய்கை - (யமபடர் அந்நரகத்தை அடைந்தவரைச் செய்யுமதான) செயல், கொடிது - கொடுமையானது; என்று - என்று நினைத்து, அது கூடா முன்னம் - அந்த நரக ப்ராப்தி யேற்படுத்துவதற்கு முன்னமே, வடி சங்கம் கொண்டானை (கிட்டுவதற்கு முன்னம் எதிரிகளை முடிக்கவல்ல) கூரிய இசையையுடைய ஸ்ரீ பாஞ்சசனியமென்ற சங்கத்தைக் கொண்டவனும், கூந்தல் வாய் கீண்டானை - கேசியென்னும் அசுரனது வாயைக் கீண்டவனும், கொங்கை நஞ்சு உண்டானை. (தாயாய் வந்த பூதனையென்னும் பேய்ச்சியின்) முலையில் நச்சுப் பாலை அவளுயிருடன் உண்டவனுமான எம்பெருமானை, உற்று - (மேலெழ வல்லாமல்) மனப்பூர்வமாக உறைத்து நின்று, ஏத்துமின் - வணங்கி ஸ்துதியுங்கள்; (எ—று.)

231

"கீழிரண்டு பாசுரங்களால், நரகவேதனையைத் தப்பவும் புருஷார்த்தங்களைப் பெறவும் எம்பெருமானை முந்தற வணங்கி யேத்துமி னென்றார்; இந்தப் பாசுரத்தில், நரகத்தின் கொடிய தன்மையையும் அதிலே யமபடர்கள் படுத்தும் பாட்டையும் நினைத்துப் பார்த்தால், விளம்பியாமல் அவனை யாஶ்ரயிக்கத் தோன்றுமென்று ஆஶ்ரயிக்கைக்கு ஒருபாயம் அருளிச்செய்கிறாரென்க. வடி சங்கங் கொண்டானை என்பது முதலியன - அப்பெருமான் நிரதிஶய போக்யனாகி ப்ரதிகூல நிராஸகனென்பதைப் புலப்படுத்தும். பிற்சாலுஞ் செவசய்கை சூலத்தைப் பாய்ச்சுகை துடை வழியிலே நாயைக் கௌவ விடுகை இரத்தவாறுகளிலே போகடுகை வாட் கோரைகளிலே யிடுகை முதலியன. கூந்தல், கேசம் - இலக்கணையால் கேசி யென்ற அசுரனைக் காட்டிற்று. பரிபாடலிலும் "கூந்தலெரிசினங் கொன்றோய்" என்று வருதல் கண்க. வடிசங்கம் அழகிய சங்கமுமாம் (கூ௩)

94. உற்று வணங்கித் தொழுமி னுலகேழு
முற்றும் விழுங்கும் முகில்வண்ணன்—பற்றிப்
பொருந்தாதான் மார்பிடந்து பூம்பா டகத்து
ளிருந்தானை யேத்துமென் னெஞ்சு.

(இ—ள்.) உலகு ஏழும்முற்றும் - பூமி முதலான எல்லா லோகங்களையும். விழுங்கும் - உட்கொண்டு வயிற்றிலேவைத்துக் காப்பவனும், (அங்ஙனம் காக்கநேர்பட்ட மகிழ்ச்சி வடிவிலே தோன்றும்படி,) முகில் வண்ணன் - (பெய்யும் நிலையிலுள்ள) மேகம்போன்ற திருநிறத்தை யுடையவனும், பற்றி -(பிடித்த பிடியிற் பிணமாம்படி) பிடித்து, பொருந்தாதான் மார்வு இடந்து - பகைவனான ஹிரண்யனுடைய மார்பை, இரண்டு கூறுகப்பிளந்து பொகட்டு,பூம் பாடகத்துள் இருந்தானை-(பின்னும் ஆஶ்ரித விரோதிகளைப் போக்குகைக்காக) அழகிய திருப்பாடகத்திலே எழுந்தருளியிருந்தவனுமான ஸர்வேஶ்வரனை,—என்-என்னுடைய நெஞ்சு—நெஞ்சானது, - ஏத்தும் - (கீழ்ச்சொன்ன அவ்வத்தன்மைகளைச் சொல்லிப்) புகழா நிற்கும்; (நீங்களும் உங்கள் அயோக்கியதையை யெண்ணிப் பின்னிடாமல் என்னெஞ்சைப் போலவே), உற்று - கிட்டி நின்று, வணங்கி - (அபிமான ஶூந்யராய் அப்பரமனுடைய) திருவடிகளிலே விழுந்து, தொழுமின் - அஞ்சலி செய்து ஆஶ்ரயியுங்கோள்; (எ-று.)

'கொங்கை நஞ்சுண்டானை யுற்று ஏத்துமின்' என்றார் கீழ்: என்னவும், 'எங்கள் அயோக்கியதை கிடக்க, எவ்வாறு உற்று ஏத்துவது?' என்று அவ்வுலகத்தவர்கள் சங்கித்துப் பிற்காலிக்கக் கூடு மென்று கருதி, தான் நமஸ்கரித்துக் காட்டி ப்ரஜையை நமஸ்கரிப்பிப்பாரைப்போலே, தம்முடைய நெஞ்சு பிற்காலியாமல் உற்று ஏத்துகிறபடியைக் காட்டி, 'என்னுடைய நெஞ்சு ஏத்துகின்றதுபோலவே நீங்களும் ஏத்துங்கோள்' என்கிறார். எம்பெருமானுடைய பக்தனான ப்ரஹ்லாதனை த்வேஷித்தானதலால், ஹிரண்யனைப் பொருந்தாதான் என்கிறார். கூச

95. என்னெஞ்ச மேயானென் சென்னியான் றானவனை
வன்னெஞ்சங் கீண்ட மணிவண்ணன் - முன்னஞ்சே
யூழியா னூழி பெயர்த்தா னுலகேத்து
மாழிய னத்தியூ ரான்.

(இ—ள்.) முன்னம் - (ஸ்ருஷ்டிக்கு) முற்பட்ட காலத்திலே, சேய் ஊழி யான்-அழகிய காலோபலக்ஷிதமான ஸூக்ஷ்மசித் அசித் வஸ்துக்களை ஶரீரமாகக் கொண்டு நின்றவனும், (பிறகு அவற்றை ஸ்ருஷ்டித்தவளவில் அவை தன்னை வழிபடாமற் போயினவாகக் காலமே மிச்சமாகும்படி), ஊழி பெயர்த்தான் - (சித் அசித் ரூபமான) இவ்வுலகத்தை ஸம்ஹரித்தவனும், உலகு ஏத்தும் ஆழி யான் - ஸ்ருஷ்டிக்குமிடத்து அந்த ஜகத்தை ரக்ஷிக்கைக்காக) லோகத்திலுள்ள வர்கள் ஸ்தோத்ரஞ் செய்யும்படி திருப்பாற் கடலிலே (அநிருத்த ரூபியாய்க் கொண்டு) கண்வளர்ந்தருளுகிறவனும், தானவனை வல் நெஞ்சம் கீண்ட மணி வண்ணன்—(அங்கு நின்றும் நரஸிம்ஹ ரூபியாய் வந்து அவதரித்து அஸுர னை ஹிரண்யனுடைய கொடிய நெஞ்சத்தைக் கிழித்துப் போகட்டு (சிறுக்கன் விரோதிபோகப்பெற) கையாலே) நீலமணிபோலப் புகர் பெற்றுத்தோன்றுகின்ற வடிவையுடையவனும், அத்தியூரான் - (அவ்வடிவைக் காலத்தாற்பிற்பட்டாரும் ஸேவித்து உஜ்ஜீவிக்கும்படி) திருவத்தியூரிலே யெழுந்தருளிய நீர்மையையுடை யவனுமான எம்பெருமான்,—என் நெஞ்சம் மேயான் - என்னுடைய ஹ்ருத யத்திலே நித்யவாஸம் பண்ணா நின்றான்; என் சென்னியான் - என்னுடைய சிரசில் விரும்பியிரா நின்றான் ; (எ-று.)

கீழ்ப் பாசுரத்தில், தாம் வணங்கி உலகத்தோரை யுற்று வணங்கித் தொழக் காட்டின ஆழ்வார் இப்பாசுரத்தில் தம்முடைய வணக்கத்தைக் கண்டு உகந் தருளின ஊரினின்று தம்முடைய ஸர்வாவயவங்களிலும் ஸர்வேஶ்வரன் புகுந் தருளினபடியைப் பேசுகின்றார். நம்மாழ்வார் “இவையும் வையு முவையும்”- என்ற திருவாய்மொழியிற் பரக்கப் பேசினபடியை இங்கு, இவ்வாழ்வார் சுருக் கியருளிச்செய்கிறார் என்க.

வல்நெஞ்சம் உக்ரமான நரஸிம்ஹ ரூபத்தைக் கண்டும் இளகாத நெஞ்சம். ‘செம்மை + ஊழி’ யென்றது ‘சேயூழி’ என்று ஆகி‘ஆன்’ விகுதிபெற்று, சேயூழி யான் என்று நின்றது. உலகு என்னும் பொருளுள்ள ஊழி என்ற சொல் - இலக்கணையால் சிதசித்துக்களைக் காட்ட ஊழியானென்றது- சிதசித்துக்களைச் சரீரமாக வுடையவனென்ற பொருளைக் காட்டிற்று. ஊழியென்பது உலகு என்னும் பொருளில் வருதலை, “ஊழியேழான வொருவா” என்ற விடத்திலும் காணலாம். இனி, சேயூழியான் என்பது - செய் ஊழியான் என்பவற்றின் விகாரமாக வந்த தொடரெனக்கொண்டு-செய்த உலகத்தை யுடையவன் [ஜகத் தை ஸ்ருஷ்டித் தவன்] என்று பொருளாகவுமாம். இனி, சேயூழியான்என்ப தற்கு- செய்த [ஸ்ருஷ்டித்த] உலகிலிருப்பவ னென்றும், ஊழி பெயர்த்தான் என்பதற்கு உலகை மீண்டும் உண்டாக்கினவ னென்றும் பொருள்கூறுவது

முண்டு. 'என்னெஞ்ச மேயான் என் சென்னியான்' என்று, ஸர்வேஸ்வரன் தமது உடலில் அபிநிவேஶங் கொண்டிருப்பது கண்டு விஸ்மயப்பட்டுக் கூறுகின்றா ரென்க. கூ௫

96. அத்தியூ ரான்புள்ளை யூர்வா னணிமணியின்
துத்திசேர் நாகத்தின் மேற்றுயில்வான்—முத்தி
மறையாவான் மாகடனஞ் சுண்டான் றனக்கு
மிறையாவா னெங்கள் பிரான்.

(இ—ள்.) புள்ளை ஊர்வான்-பெரியதிருவடியை (வாகனமாகக் கொண்டு) நடத்துமவனும்,—அணி மணி - இன் துத்தி சேர் - அழகிய மாணிக்கங்களும் அழகிய புள்ளிகளும் சேர்ந்த, நாகத்தின்மேல் - திருவனந்தாழ்வான் மேலே, துயில்வான் - பள்ளிகொண்டருளுமவனும்,-முத்தி மறை ஆவான் - மோட்சத்தை ப்ரதிபாதிக்கும் வேதாந்த பாகங்களாலே ப்ரதிபாதிக்கப்படுபவனும், மா கடல் நஞ்சு உண்டான்தனக்கும் இறையாவான் - பெரிய கடலில் தோன்றிய விஷத்தை உட்கொண்டு அந்த ஶக்தியோகத்தாலே (தன்னை) ஈஸ்வரனென்று அபிமானித்திருக்கிற ருத்ரமூர்த்திக்கும் ஈஸ்வரனுமான எம்பெருமான்,எங்கள்-பிரான்- (இப்படித் தான் உபயவிபூதி யுடையனுய் வேதாந்த வேத்யனுன தன் பெருமை பாராதே) எங்களுக்கு உபகாரம் பண்ணுபவனுகி, அத்தியூரான்-திருவத்தியூரில் வந்து எழுந்தருளி யிருப்பவனுனன் ; (எ-று.)

'கீழ்ப் பாசுரத்தில் 'அத்தியூரான்' என்னெஞ்ச மேயான் : என் சென்னியான்' என்றார். இங்கு, எங்கட்கு உபகரித்தற்காகவே, அத்தியூரில் ஸர்வேஸ்வர னெழுந்தருளிய தென்கிறார். 'உபயவிபூதி நாதன் என்னை யிப்படி விரும்புகின்றானே! இது என்ன ஆஶ்சர்யம்' என்ற கருத்தும் இங்கு வெளியாம். 'புள்ளையூர்வான், நாகத்தின்மேல் துயில்வான் என்பன, அவனுடைய ஸர்வேஸ்வரத்வத்தை யுணர்த்தும். இவ்விஶேஷ்யங்கள் நித்ய ஸூரிகளில் தலைவரான திருவடி திருவனந்தாழ்வான்களை எம்பெருமான் ஶேஷமாகக் கொண்டமையைத் தெரிவித்தலால், அந்தப் பரமனது நித்ய விபூதிக்குத் தலைமை கூறியதாயிற்று. 'நஞ்சுண்டான் தனக்கு இறையாவான்' என்ற விஶேஷ்யத்தால், இந்த லீலா விபூதியில் தலைவனுன ருத்திர மூர்த்திக்குத் தலைவ னென்று கூறியமையால், அவனது லீலாவிபூதிக்குத் தலைமை கூறியதாயிற்று: ஆகவே, உபய விபூதி நாதன் அவன் என்பது பெறப்பட்டது. 'முத்தீ மறையாவான்' என்ற பாடத்துக்கு - கார்ஹபத்யம் ஆஹவநீயம் தக்ஷிணாக்நி என்கிற த்ரேதாக்நி ப்ரதிபாதகமான வேதத்தாலே ஸர்வகர்மஸமாராத்யனுக ப்ரதிபாதிக்கப்பட்டவ னென்றபடி.

97. எங்கள் பெருமா னிமையோர் தலைமகனீ
செங்க ணெடுமா றிருமார்பா - பொங்கு
படமூக்கி னாயிரவாய்ப் பாம்பணைமேற் சேர்ந்தாய்
குடமூக்கிற் கோயிலாக் கொண்டு.

(இ—ள்.) திருமார்பா - (எங்களை அடிமை கொள்ளும்படி புருஷகாரஞ் செய்கிற) பெரிய பிராட்டியாரைத் திருமார்பிலுடையவனே! இமையோர் தலைமகன் - நித்யஸூரிகட் கெல்லாந் தலைவனும், செம் கண் நெடுமால்- (அந்த நித்ய ஸூரிகட்குப் போக்யமாய்ச்) சிவந்த திருக்கண்கள் படைத்த ஸர்வாதிகனான ஸர்வேஸ்வரனும், எங்கள் பெருமான் - (ஆஶ்ரிதரான) எங்களுக்கு ஸ்வாமியுமான, நீ,—எங்களை அங்கீகரிக்கைக்காக(குடமூக்கு)திருக்குடந்தையை,கோயில் ஆ கொண்டு - வாழுமிடமாகக் கொண்டு,—பொங்கு படம் மூக்கின் -(உனது திருமேனி ஸ்பர்ஶத்தாலே) விரிகிற படத்தையும் மூக்கையுமுடையனும், ஆயிரம் வாய் - (உனது அனுபவத்தா லுண்டான மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாக வாய்விட்டு ஏத்துகைக்கு) ஆயிரம் வாய்களையுமுடைய, பாம்பு அணை மேல் - திருவனந்தாழ்வானாகிய படுக்கையின் மேலே, சேர்ந்தாய்- பள்ளி கொண்டருளினாய்; (எ-று.)

அத்தியூரி லெழுந்தருளியது தம்மை யங்கீகரித்தற்காகவே யென்று அருளிச்செய்த ஆழ்வார், திருக்குடந்தையில் அப்பெருமான் ஆதிஶேஷ ஶயநத்திற் பள்ளிகொண்டிருப்பதும் எம்மைப் போன்றவர்களை அங்கீகரித்தற்காகவேயென்கின்றார்; இதனால், எம்பெருமான் பல திவ்யதேஶங்களில் பலபடியான திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருப்பது ஆஶ்ரிதஸம்ரக்ஷணத்தின் பொருட்டேயென்க. கும்பகோணம் என்பதையே குடந்தை யென்பவாதலால், இங்கு 'குடமூக்கு' என்றார்.

௯எ

98. கொண்டு வளர்க்கக் குழவியாய்த் தான்வளர்ந்த
துண்ட துலகேழு முள்ளொடுங்கக்—கொண்டு
குடமாடிக் கோவலனாய் மேவியென் னெஞ்ச
மிடமாகக் கொண்ட விறை.

(இ—ள்.) கோவலன் ஆய் - இடையனாய் வந்து பிறந்தருளி, குடம் கொண்டு ஆடி- (ஐஸ்வர்யச் செருக்காலே ஜாத்யுசிதமாகக்) குடமெடுத்துக் கூத்தாடி, மேவி - (அந்தக் கோலத்தோடே) பொருந்தி, என் நெஞ்சம் இடம் ஆக கொண்ட - என் ஹ்ருதயத்தை (த்தனக்கு) இருப்பிடமாகக் கொண்ட, இறை- ஸர்வ ஸ்வாமியானவன்,—கொண்டு வளர்க்க-(சிலர் கையில்) எடுத்துக்கொண்டு சீராட்டி வளர்க்குமாறு, குழவி ஆய்- சிறு குழந்தையாய், வளர்ந்தது- வளர்ந்த நிலையிலே, உள் ஒடுங்க- (தன்) வயிற்றினுள்ளே ஒரு புடையிலே அடங்கிக் கிடககுமபடி, உலகு ஏழும்.—ஏழுலகங்களையும், உண்டது- அமுது செய்த செயல் நிகழ்ந்தது! இது (என்ன ஆச்சர்யம்!!) (எ-று.)

இந்தப் பாசுரத்தால், தமது மனத்தி லெழுந்தருளிய பெருமானது அகடிதகடநாஸாமர்த்யத்தையும் குடக்கூத்தாடுகை முதலான திவ்ய சேஷ்டிதங்களையும் அநுபவிக்கின்றார் ஆழ்வா ரென்க. அப்பரமன் கொண்ட வடிவின் சிறுமையையும், உண்ட உலகங்களின் பெருமையையும், அவைதாம் திருவயிற்றின் ஏக

தேசத்திலே ஒடுங்கினபடியையும் அநுஸந்தித்து இவ்வாஸ்சர்யங்கள் இருக்கும் படியே'! என்று ஈடுபடுகின்றாரென்க- "ப்ராஹ்மணர் ஐஸ்வர்யம் விஞ்சினால் யாகாதிகள் பண்ணுமாபோலே, இடையர் ஐஸ்வர்யம் விஞ்சினால் செருக்குக்குப் போக்குவிட்டு ஆடுவதோடு கூத்தாய்த்து குடக் கூத்தாவது: தலையிலே அடுக்குக் குடமிருக்க, இரண்டு தோள்களிலும் குடங்களிருக்க, இரண்டு கைகளிலும் குடங்களை யேந்தி ஆகாசத்திலே யெறிவது ஏற்பதாய் ஆடுவது ஒரு கூத்தாய்த்துக் குடக் கூத்தாவது" கூஅ

99. இறையெம் பெருமா னருளென் றிமையோர்
முறைநின்று மொய்ம்மலர்க டூவ—அறைகழல
சேவடியான் செங்க ணெடியான் குறளுருவாய்
மாவடிவின் மண்கொண்டான் மால்.

(இ—ள்.) இமையோர்-(தங்களையே ஈஸ்வரரென்று துர்மாநங் கொண்டு காளமூதித் திரிகிற பிரம ருத்திராதியரான) தேவர்கள், (அந்தத் துர்மாநம் நீங்கிக் காளத்தையும் போகட்டு எம்பெருமானைக் கிட்டி), 'எம் பெருமான்-எங்களுக்கு வகுத்த ஸ்வாமியான, இறை-ஸர்வேஸ்வரனே! அருள்-(எங்களுக்குத்) திருவருள் புரியவேணும்;' என்று-என்று ப்ரார்த்தித்துக் கொண்டு, முறை நின்று-(தாங்கள் ஸேஷரும் அவன் சேஷியுமான) முறைமை தோன்றநின்று, மொய் மலர்கள் தூவ-அழகிய புஷ்பங்களை க்ரமமின்றிப் பணிமாறி யாஸ்ரயிக்க, அறை கழல சேசுடியான்-த்வனிக்கின்ற வீரக்கழலை யணிந்த அழகிய திருவடிகளை யுடையவனும், செம் கண் நெடியான்-('இவன்தான் ஸர்வேஸ்வரன்' என்பதை ஸூசிப்பிக்கிற) சிவந்த திருக்கண்களையுடைய ஸர்வாதிகனுமான ஸர்வேஸ்வரன், மால்-(அந்தத் தேவதைகளிடத்தி லிருக்கிற) வ்யாமோஹத்தாலே, குறள் உரு ஆய்-வாமன ரூபியாய் வந்து திருவவதரித்தருளி [தன் திருமேனியைச் சுருக்கிக்கொண்டு], மா வடிவின்-(உலக மடங்கத் தன்னுள்ளே யடங்கும்படி ஸங்கோச மில்லாமல் வளர்ந்த) பெரிய வடிவத்தோடு, மண்-(மகாபலி கவர்ந்த) லோகத்தை, கொண்டான்-(அளந்து) கைப்பற்றிக்கொண்டான்: (எ.—று.)

கீழ் தமக்கு ஸர்வேஸ்வரன் உதவினமையைப் பேசிய ஆழ்வார், ப்ரயோஜநாந்தரபரரான தேவர்க்கு அப்பெருமான் உதவினபடியை இங்கு அருளிச் செய்கிறார். இதனால், ஸர்வேஸ்வரன் அநந்யப்ரயோஜநரோடு ப்ரயோஜநாந்தரபரரோடு வாசியற யாவர்க்கும் உதவுபவனென்பது, பெறப்பட்டது. கழலைக் கூறியது-மற்றைத் திருவாபரணங்கட்கும் உபலக்ஷணம். முறை நின்று-மாறி மாறி நின்று என்று உரைத்தலு மொன்று. ஈற்றடியை, 'மாவலியை மண் கொண்டான் மால்' என்று கொள்வாரு முளர். கூகூ

100. மாலே நெடியோனே கண்ணனே விண்ணவர்க்கு
மேலா வியன்றுழாய்க் கண்ணியனே—மேலாய்
விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே யென்ற
னளவன்றால் யானுடைய வன்பு.

(இ—ள்.) மாலே ஸ்வரூபரூப குணங்களால் வந்த பெருமையை யுடைய வனே! நெடியோனே-(உபயவிபூதி யோகத்தால் வந்த) வைபவத்தை யுடைய வனே! கண்ணனே-(ஸமஸ்த வஸ்துக்களுக்கும்) நிர்வாஹகனே! விண்ணவர்க்கு மேலா- பரமபதவாஸிகட்கும் அப்பாற்பட்டிருப்பவனே! வியன் துழாய் கண்ணியனே-(அவ்விண்ணவர்கள்க்கும்படி) சிறந்த துழாயை முடிமாலையாகப் புனைந்தவனே! மேல் ஆய்-(இவற்றுக்கெல்லாம்) மேலாக, (க்ருஷ்ணனுய்த் திருவவதரித்து),—விளவின் காய்-(அஸுராவிஷ்டமான) விளாவின் காயை, கன்றினால்-(அப்படியே அஸுராவிஷ்டமான) கன்றைக் கொண்டு, வீழ்த்தவனே- விழச் செய்தவனே! யான் உடைய-(உன் பக்கல்) யான் கொண்டுள்ள, அன்பு ப்ரேமமானது, என் தன் அளவு அன்று-(ஆஸ்ரயமான) என்னளவிலே யடங்கியிருப்பதொன்றன்று; (எ-று.)

கீழே ப்ரயோஜநாந்தரபரர் ஆஸ்ரயிக்கும் ப்ரகாரத்தை ஆழ்வார் அருளிச் செய்தது கேட்ட ஸர்வேஸ்வரனுக்கு, 'பிறர்படி சொல்லுகிறீரே: உமக்கு வேண்டுவது என்?' என்று திருவுள்ளமாக, என்னுர் ரயித்தை மூடும்படி வளர்ந்த அன்பை ஆஸ்ரயந் தாங்கும்படி அகஞ்சுரிப் படுத்தித் தர வேணும் என்று ப்ரார்த்திக்கின்ருரென்க. என்றனளவன்ருல் யானுடைய வன்பு' என்று அருளிச் செய்கையால், தம்முடைய அளவாக ஆக்கித் தரவேணுமென்ற பர்யம் ஸூசித மாகும். இனி, ஆஸ்ரயத்தை ப்ரேமத்தைத் தாங்கும்படி புரிய வேணுமென்று அருளிச் செய்தனரெனக் கொள்ளினுமாம். 'மாலே நெடியோனே' என்பவற்றிற்கு- ஆஸ்ரித வ்யாமோஹத்தை யுடையனுய், அந்த ஆஸ்ரித வ்யாமோஹத்துக்கு எல்லையில்லா திருக்குமவனே! என்றுமாம். 'வியந்துழாய் என்ற பாடத்துக்கு - வியப்பைத் தரும் துழாயைக் கண்ணியனே! என்று பொருளாம். 'விளவின்காய் கன்றினால் வீழ்த்தவனே' என்ற விஶேஷ்யம்- கபித்த வத்ஸாஸுரர்களை முறித்துப் போகட்டாற் போல, என்னுடைய விரோதிகளை யெல்லாம் போக்கி அடிமை கொள்ளவேணு மென்ற தாத்பர்யத்தைக் காட்டும். கOO

இரண்டாந் திருவந்தாதி உரையுடன் முற்றிற்று.

ஸ்ரீமத் அதிகரண ஸாராவளி.

(ஸ்ரீ. உப. வித்வாந். எ. வி. கோபாலாசார்ய ஸ்வாமி, திருச்சி)

[ஸஞ்சிகை 1—பக்கம் 8 தொடர்ச்சி.]

நான்காம் ச்லோகம்.

" 𑌸𑌂𑌹𑍀𑌨𑍇 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌧𑍍𑌯𑌾𑌯𑍇 𑌗𑍍𑌰𑌥𑌯𑌿𑌤𑍁𑌂 𑌕𑌃 𑌪𑍍𑌰𑌵𑍀𑌣𑌃 𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑌂
𑌵𑌿𑌜𑍍𑌞𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌉𑌪𑌪𑌾𑌦𑌯𑌨𑍍𑌤𑍍𑌯𑌾𑌹𑌿𑌤𑍇𑌹 𑌨𑌿𑌵𑌾𑌰𑌣𑍈𑌃 𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍋𑌽𑌯𑌮𑌪𑍇𑌕𑍍𑌷𑌣𑍀𑌯𑌃 ।
𑌸𑌾 𑌹𑌨𑍍𑌤𑍍𑌰𑍀𑌃 𑌶𑍇𑌷𑌵𑌿𑌦𑍍𑌯𑍁𑌤𑍍𑌤𑌵𑌿 𑌸𑌾𑌣𑌵𑌿𑌷𑌃 𑌹𑍀𑌤𑍍𑌤𑍍𑌰𑍀𑌃 𑌵𑍀𑌕𑍍𑌷𑌨𑍍𑌤𑍇
𑌉𑌦𑍍𑌯𑌾𑌹𑌾𑌰𑌂 𑌤𑍍𑌰𑌿𑌯𑌂 𑌉𑌹𑌤𑌿𑌜𑌹𑌤𑌿 𑌕𑌿𑌂 𑌉𑌲𑍍𑌤𑍍𑌕𑌂 𑌬𑍍𑌰𑌬𑍍𑌭𑌵 𑌬𑍍𑌯𑌲 ॥"

இந்த ச்லோகத்தின் அழகை அப்பய்ய தீக்ஷிதர் ஸம்பூர்ணமாக அநுப வித்து, ஹ்ருதயத்தில் தரித்துக்கொண்டா ரென்பது நிச்சயம். 'கல்பதரு' வென்னும் பாமதீவ்யாக்யாநத்திற்குப் 'பரிமளம்' என்கிற விஸ்தாரமான வ்யாக் யாநம் அவர் செய்திருக்கிருர். அதன் ஆரம்பத்தில், இந்த ச்லோகத்தையே ஹ்ருதயத்தில் தரித்துச் சுருக்கிக் கீழ்க் காணப்படும் ஒரு ச்லோகத்தை எழுதி யிருக்கிருர்.

" உத்ருதிஹாதிமஹீரெ ஶ்ரியமாஶ்ரயவணஞ்ருநஂ யயா ஶ்ரீயதெ |
தஂஷ்ரூஷ்டி ததொ விபஂயாஃ குதிவயுரந்த்ர ஹாதிவாஂபஂயெஃ"||

இந்த இரண்டு ச்லோகங்களையுங் கவனித்தால், ஸ்வாமி ச்லோகத்திற்குத் தீக்ஷிதர் ச்லோகம் ப்ரதிபலநமென்று ஸுவிசதமாகும். தீக்ஷிதரை மீமாம்ஸ மூர்த்தந்யரென்று கண்டதேவாதிகள் ச்லாகிப்பர். அவருக்கு ஸ்வாமியி னிடம் இப்படிக் கௌரவ மிருந்ததைத் தெரிந்துகொள்வது நமக்கு ஸந் தோஷத்தை அளிக்கிறது. முன் ச்லோகத்தில், ஸம்சயங்க ளுண்டாகி வழி தெரியாத இடங்களில் இந்த க்ரந்தம் திக்ப்ரதர்சநம் செய்யுமென்று கூறினுர். 'அதனுல், அபேக்ஷிக்கக் கூடிய எல்லா அம்சங்களையும் இந்தச் சுருக்கமான க்ரந் தத்தில் ஸங்க்ரஹித்து விட்டதுபோல் நினைக்கிறீரா?' வென்ருல், "திங்மாத்ரம் காட்டுகிறே"னென்று கூறுகிருர். திக் என்பதால் திக்கையும் ஸூசந மாத்ரத் தையும் சொல்லும். ப்ரதாநார்த்த ஸூசநமே காட்டுகிறே மென்கிருர்.

போதாயநருடைய வ்ருத்தி, பத்து லக்ஷ க்ரந்த மென்பர். அவ்வளவு விஸ் தாரமாயிருப்பதைப் பூர்வாசார்யர்கள் ஸங்க்ஷேபித்ததை அநுஸரித்து ஸ்ரீபாஷ்ய காரர் ஒன்பதினுயிரம் க்ரந்தத்தில் ஸ்ரீபாஷ்யம் செய்தருளினுர். முப்பத்தாறு யிரம் க்ரந்தத்தில் ஸ்ரீவ்யாஸார்யர் ச்ருத ப்ரகாசிகையை அநுக்ரஹித்தார். இந்த க்ரந்தம் மொத்தம் 561 பாட்டுகள். நம்முடைய ஸம்ப்ரதாயப்படிக்கு ஸூத் ரங்கள் மொத்தம் 545; பாதங்கள் 16. இரண்டும் சேர்ந்து மொத்தம் 561. ஒவ் வொரு பாதமுடிவிலும், பதார்த்தம் முழுவதும் ஒவ்வொரு ச்லோகத்தில் அதிஸுந்தரமாக ஸங்க்ரஹிக்கப்பட்டிருக்கிறது. சராசரிக்கு ஒரு ஸூத் ரத்திற்கு ஒரு ச்லோகமும், ஒரு பாதத்திற்கு ஒரு ச்லோகமுமாக மொத்தம் 561 ச்லோகமாக அமைக்கப்பட்டதாக நினைக்கலாம். 'இந்த 561 பாட்டுக் களில், தீராத ஸம்சயங்களையும் தெளியாத சங்கைகளையும் இந்த க்ரந்தத் தினின்றும் உதிக்கும் ஜ்ஞாந ப்ரபையால் தெளிவித்துத் தீர்க்கிறோம் என்று எப்படிக் கெட்டியாய் கூறுகிறீர்?' என்று வினவ, பதில் கூறுகிருர்.

வேதாந்தங்கள் அநந்தம்; அவை அகாத கம்பீரமான மஹா ஸமுத்ரமா கும். அநந்த ரத்நங்களும் முத்துக்களும் நிறைந்தது ரத்நாகரம்; அதன் ஆழம் அகாதம். அதிலுள்ள அநந்த ப்ரமேய ரத்நங்களை யார்தான் உள்ளே மூழ்கி வெளியே கொண்டுவந்து காட்டவல்லவர்? ஒருவராலும் அவற்றை முழுவதும் வெளிப்படுத்த இயலாது. ப்ரஹ்மத்தினிடமிருந்து ஸாக்ஷாத்தாக "யோ

வெ வெஷாஂஹூவ ஹி ணொதி தவெஷ்ஃ" என்று நேரில் வேத வேதாந்தங்களின் பொருள்களை ச்ரவணம் செய்த ப்ரஹ்மம தேவனாலும் அவற்றை வெளிப்படுத்த இயலுமோ? ஸர்வலோக பிதாமஹரான, ப்ரதம குருவின் சிஷ்யரான சதுர்முகருக்கும் முழுவதும் உரைக்க இயலா விஷயத்தில், 'முழுவதும் உரைக்கவில்லை' என்கிற தோஷத்தை என் க்ரந்தத்தில் ஒரு தோஷமாக எண்ணக்கூடாது. முழுவது முரையாமை யாவர்க்கும் ஸாதாரணம். ஸர்வ வித மஹாங்களுட்பட அது அசக்யமான விஷயம். இந்த விஸ்தீர்ண அகாத ஸமுத்ர விஷயத்தில் முழுகும் அணுவுக்கும் குல பர்வதத்திற்கும் பேதமில்லை என்கிற ந்யாயத்தை ஸ்மரணம் செய்கிறார். "஗ஂஹீரெ ஸஹூஹாகெ." கர்ம பாகம் தேவதா பாகம் என்னும் பாகங்களை கஹநமாயிருக்கும். அவைகளின் பொருள்களை உள்ளபடி யறிய மீமாம்ஸை செய்யவேண்டும்; ந்யாயங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யவேண்டும். வேதாந்தங்கள், குகையில் மறைந்துள்ள பொருளென்றும் கஹநத்தில் இந்த வித்யை ஸம்ப்ரதிஷ்டிதமென்றும் கஹ்வரத்திலிருக்கும் பொருளென்றும் வாக்குக்களுக்கும் மனத்திற்கும் எட்டக்கூடாதென்றும் உத்கோஷிக்கின்றன.

ஸ்வல்பமே கண்டெடுத்து இந்த முக்தாஹாரத்தில் நடுநடுவே வைத்துக் கோத்தோ மென்றால் அது நமது தோஷமாகாது. விஷயத்தின் அளவில்லாமையே இதற்குக் காரணமாகும். விஷய காம்பீர்யமே காரணமென்று பரிஹாரஹேதுவைக் காட்டும் பதத்தை முதலில் வைத்தது மிகவழகு. வேதாந்தங்களாகிய ப்ரமாணமே இதை வாய் விட்டுச் சொல்வதையும் இந்தச் சப்தம் காட்டுகிறது. அகாதமான ஆழத்தையும் ப்ரௌடிமையையும் இந்தச் சப்தம் காட்டும். "஗ஂஹீரெ ஊஹதி ஸுஜுஸ" என்று முதலையும் முடிவையும் சேர்த்துப் பார்த்தால் 'அகாதமான மகாஸமுத்திரம், நான் என்ன செய்வேன்? யார்தான் என்ன செய்வார்?' என்று விஷயத்தின் காம்பீர்யத்தையும் மஹத்வத்தையுமே ஹேதுவாகக் காட்டுவதில் இந்த ச்லோகத்திற்கு நோக்கென்று ஸூசிக்கிறார். ப்ரஹ்மபாகமென்பதால், ஓரே சாஸ்த்ரமான இருபது அத்யாயங்களடங்கியுள்ள மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் ஒருபாகத்தையே இங்கே விஷயமாகக்கொண்டோம். ப்ரஹ்மமீமாம்ஸையை மட்டும் உபபாதிப்பதால் இது மட்டும் தனியாக வேறு சாஸ்த்ரம் என்று நினைக்கவேண்டாம். மொத்த மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் இது ஒரு ஏகதேசமே என்று காட்டுகிறார். "ஸவிஷஂ வுஜெயஂ ஗ணயிதுஂ"- ப்ரமேயமான எல்லா வம்சங்களையும் ஒன்று விடாமல் காணக்கிட்டு உரைக்க. ஸ்ரீபாஷ்யங்களை ஸங்க்ரஹிக்க வாரம்பிக்கையில் அதன் மங்கள ச்லோகத்தின் ஆரம்பத்திலுள்ள பதத்தை இங்கேயும் ப்ரயோகிப்பது அழகு. "கஃ வுவீணஃ" யாவர்தான் வல்லவர்? 'கஃ' என்பது ப்ரஹ்மாவையும் சொல்லும். ஒருக்கால் அவர் வல்லவராவர். காகு வை வைத்து அவர்தான் வல்லவரோவென்றும் கொள்ளலாம். சிந்தாமணியில் இந்த அர்த்தம் கூறப்பட்டுள்ளது. வேதாந்த சாஸ்த்ரத்தை ஒரு காவ்யமாய்ச் செய்யக் கோரி, வேதாந்தங்களை உத்தமமான காவ்யமாக ஸ்தோத்ர ரூபமாகப் பாடிய கவி

239

ச்ரேஷ்டரான ஆளவந்தாருடைய ஸ்தோத்ராரம்பத்தின் உக்தியை இங்கே அநு ஸரித்தால் இப்படியும் அர்த்தம் சொல்வது உசிதமாகும். முழுவதையும் ப்ரஹ்ம தேவன் கூட உரைக்க முடியாமையால் அவர் ஸ்வல்பமே உரைக்கவல்லவர். "கிஞ்சாஹம் உபதர்சயந் ஸகவி"- வழியை ஸூசநமே செய்துகாட்டும் நானும்; சிலவற்றைக் காட்டக் கூடிய மற்றவரைப் போல நானும்; 'இஹ'—இந்த சாஸ்த்ர காவ்ய நிர்மாண விஷயத்தில்; "நிபுணை:"— காவ்ய சாஸ்த்ரரச னையில் அப்யாஸம் செய்து அதன் அருமையை யறிந்த சதுரரான பெரியோர் களால். இங்கே "சக்திர் நிபுணதா" யென்கிற காவ்யப்ரகாச ச்லோகத்தின் ரீதியாய் காவ்ய நிர்மாணரசனை நைபுண்ய சக்தியையும் விவக்ஷிக்கிறது. அந்த ச்லோகத்திற் கூறிய கவிதா ஸாமக்ரிக்கு இந்த நிபுண சப்தத்தால் உபலக்ஷணம். "ஸாநுகூலமத்யக்ஷணீய:" அநுகூலமான த்ருஷ்டியோடு என்னுடைய நிர்மாணத் தை நிபுணர்கள் அத்யக்ஷர்களாக விருந்து திருச்செவி சாற்றி க்ரஹிக்க வேணும். பெரிய பெருமாள் ஸந்நிதியில் பெரியோர்கள் திருவோலக்கத் திலிந்த க்ரந்தம் ரசநம் செய்திருக்கக்கூடும். முதல் ச்லோகத்தில், பஹுஜ் ஞர்களான பெரியோர்கள் கூட்டம் அவஹிதராய்த் திருச்செவி சாற்ற, அவர்கள் முன் பெரிய பெருமாள் அநுக்ரஹித்த திருநாமத்தை யதார்த்தமாகச் செய்வதாகக் கூறினர். இங்கும் பெரியோர்கள் ஸபாத்யக்ஷர்களாக இருந்து க்ருபையாய்த் திருவுள்ளம் பற்றவேணு மென்கிறார். பரம வ்யோம மென்னும் ஸ்ரீ வைகுண்டத்தில் பகவான் அத்யக்ஷரா யிருக்கிறாரென்பது ச்ருதி. அந்த அத்யக்ஷரே இங்கே பூலோக வைகுண்டத்தில் அரங்கனாய் எழுந்தருளியிருக்கிறார். அவரை அத்யக்ஷராக வைத்துக் காவ்யங்களை யெல் லாம் அவர் முன் கவிகள் அரங்கேற்றுவர். அவரை அத்யக்ஷராக நிர்த்தேசிக் காமல் ஸப்யர்களை அத்யக்ஷராகக் கூறலாமோ வென்றால், பெரிய பெருமாளே இவர் நெஞ்சிற் புகுந்து, இந்தக் காவ்யத்தைப் பாடுவதாக அநுஸந்தாந மாதலால் கவியான அவரையே அத்யக்ஷராக நிர்த்தேசிப்பது உசிதமல்ல வென்று திருவுள்ளமா யிருக்கலாம். "ஸாகல்யந்நி:சேஷவித்யை:"—அகிலமென்று முதல் பாதத்தில் சொன்னதை நிச்சேஷம் என்று அநுவதிக்கிறார். முழுவதும் வித்தியாதிருக்கட்டும். "தத்வி" யாதாயினும் - அப்படிக்கிருந் தும், "ஹி தநீ:வீசஸந்தே" - சிறந்த கணக்கில்லாத ரத்நங்கள் நிரம்பக் கிடைக் கும். "உததி கஹநை" மிகப் பெரிய ஸமுத்ரத்தில்;"ஹ்ருதயஹாரம் நியெயம்"- மார்பிலணியும் ஹாரத்தின் மத்தியில் நடு நாயகமாய் வைக்க யோக்யமான இந்த அதிகரண ஸாராவளியை ஹ்ருதய தேசத்தில் தரிக்கவேணும். ஹாரத் தை அணியும் மார்பின் மத்யம் ஹ்ருதயமாகும். ஆசார்யவான்களால் இந்த ஸாராவளியும், தத்வமுக்தாகலாபமும் தார்யமென்று கடைசியில் கூறுகிறார். முதல் பாதத்தில் ஸ்ரீபாஷ்யம் முதல் மங்கள ச்லோகத்தின் முதல் பாதத்தை வைத்தார். நான்காம் பாதத்தில் இரண்டாம் ச்லோகத்தின் மத்யத்திலுள்ள மத்ய பாகத்தை வைக்கிறார். "நியெயம்" என்று நிதியைப் போல வேணுமென்று நாம் கொள்ளலாம். உததி கஹநௌஜ்வலம்,-மஹாஸமுத்ரத்தில் கைக்கு அகப்பட்ட, ஜளக்திகம் முத்தை, மாணவிஷ: குணத்தை க்ரஹிப்

வெ வெஷாஂஸூவ ஹி ணொதி தவெ்ஷ '' என்று நேரில் வேத வேதாந்தங்களின் பொருள்களை ச்ரவணம் செய்த ப்ரஹ்மம தேவனாலும் அவற்றை வெளிப்படுத்த இயலுமோ? ஸர்வலோக பிதாமஹரான, ப்ரதம குருவின் சிஷ்யரான சதுர்முகருக்கும் முழுவதும் உரைக்க இயலா விஷயத்தில், 'முழுவதும் உரைக்கவில்லை' என்கிற தோஷத்தை என் க்ரந்தத்தில் ஒரு தோஷமாக எண்ணக்கூடாது. முழுவது முரையாமை யாவர்க்கும் ஸாதாரணம். ஸர்வ வித மஹான்களுட்பட அது அசக்யமான விஷயம். இந்த விஸ்தீர்ண அகாத ஸமுத்ர விஷயத்தில் முழுகும் அணுவுக்கும் குல பர்வதத்திற்கும் பேதமில்லை என்கிற ந்யாயத்தை ஸ்மரணம் செய்கிறார். "மஂஹீயெ ஸஹஹாமெ." கர்ம பாகம் தேவதா பாகம் என்னும் பாகங்களே கஹநமாயிருக்கும். அவைகளின் பொருள்களை உள்ளபடி யறிய மீமாம்ஸை செய்யவேண்டும்; ந்யாயங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யவேண்டும். வேதாந்தங்கள், குகையில் மறைந்துள்ள பொருளென்றும் கஹநத்தில் இந்த வித்யை ஸம்ப்ரதிஷ்டிதமென்றும் கஹ்வரத்திலிருக்கும் பொருளென்றும் வாக்குக்களுக்கும் மனத்திற்கும் எட்டக்கூடாதென்றும் உத்கோஷிக்கின்றன.

ஸ்வல்பமே கண்டெடுத்து இந்த முக்தாஹாரத்தில் நடுநடுவே வைத்துக் கோத்தோமென்றால் அது நமது தோஷமாகாது. விஷயத்தின் அளவில்லாமையே இதற்குக் காரணமாகும். விஷய காம்பீர்யமே காரணமென்று பரிஹாரஹேதுவைக் காட்டும் பதத்தை முதலில் வைத்தது மிகவழகு. வேதாந்தங்களாகிய ப்ரமாணமே இதை வாய் விட்டுச் சொல்வதையும் இந்தச் சப்தம் காட்டுகிறது. அகாதமான ஆழத்தையும் ப்ரௌடிமையையும் இந்தச் சப்தம் காட்டும். "மஂஹீயெ ஊஹதி ஸுஙுஷ" என்று முதலையும் முடிவையும் சேர்த்துப் பார்த்தால் 'அகாதமான மகாஸமுத்திரம், நான் என்ன செய்வேன்? யார்தான் என்ன செய்வார்?' என்று விஷயத்தின் காம்பீர்யத்தையும் மஹத்வத்தையுமே ஹேதுவாகக் காட்டுவதில் இந்த ச்லோகத்திற்கு நோக்கென்று ஸூசிக்கிறார். ப்ரஹ்மபாகமென்பதால், ஒரே சாஸ்த்ரமான இருபது அத்யாயங்களடங்கியுள்ள மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் ஒருபாகத்தையே இங்கே விஷயமாகக்கொண்டோம். ப்ரஹ்மமீமாம்ஸையை மட்டும் உபபாதிப்பதால் இது மட்டும் தனியாக வேறு சாஸ்த்ரம் என்று நினைக்கவேண்டாம். மொத்த மீமாம்ஸா சாஸ்த்ரத்தில் இது ஒரு ஏகதேசமே என்று காட்டுகிறார். "ஸுவிஶும் வ ஜெயம மணயிதூம"- ப்ரமேயமான எல்லா வம்சங்களையும் ஒன்று விடாமல் காணக்கிட்டு உரைக்க. ஸ்ரீபாஷ்யங்களை ஸங்க்ரஹிக்க வாரம்பிக்கையில் அதன் மங்கள ச்லோகத்தின் ஆரம்பத்திலுள்ள பதத்தைஇங்கேயும் ப்ரயோகிப்பது அழகு. "கஃ வ வீணஃ" யாவர்தான் வல்லவர்? 'கஃ' என்பது ப்ரஹ்மாவையும் சொல்லும். ஒருக்கால் அவர் வல்லவராவர். காகுவை வைத்து அவர்தான் வல்லவரோவென்றும் கொள்ளலாம். சிந்தாமணியில் இந்த அர்த்தம் கூறப்பட்டுள்ளது. வேதாந்த சாஸ்த்ரத்தை ஒரு காவ்யமாய்ச் செய்யக் கோரி, வேதாந்தங்களை உத்தமமான காவ்யமாக ஸ்தோத்ர ரூபமாகப் பாடிய கவி

239

ச்ரேஷ்டரான ஆளவந்தாருடைய ஸ்தோத்ராரம்பத்தின் உக்தியை இங்கே அநுஸரித்தால் இப்படியும் அர்த்தம் சொல்வது உசிதமாகும். முழுவதையும் ப்ரஹ்ம தேவன் கூட உரைக்க முடியாமையால் அவர் ஸ்வல்பமே உரைக்கவல்லவர். "ஜிஜ்ஞாஸூநாம் ஸம்ப்ரதர்ஶயந் ஸ்ரீஹரி"- வழியை ஸூசகமே செய்துகாட்டும் நானும்; சிலவற்றைக் காட்டக் கூடிய மற்றவரைப் போல நானும்; 'இஹ'—இந்த சாஸ்த்ர காவ்ய நிர்மாண விஷயத்தில்; "நிபுணை:"— காவ்ய சாஸ்த்ரரசனையில் அப்யாஸம் செய்து அதன் அருமையை யறிந்த சதுரரான பெரியோர்களால். இங்கே "ஶக்திர் நிபுணதா" யென்கிற காவ்யப்ரகாச ச்லோகத்தின் ரீதியாய் காவ்ய நிர்மாணரசனை நைபுண்ய சக்தியையும் விவக்ஷிக்கிறது. அந்த ச்லோகத்திற் கூறிய கவிதா ஸாமக்ரிக்கு இந்த நிபுண சப்தத்தால் உபலக்ஷணம். "ஸாநுகூலாத்யக்ஷணீய:" அநுகூலமான த்ருஷ்டியோடு என்னுடைய நிர்மாணத்தை நிபுணர்கள் அத்யக்ஷர்களாக விருந்து திருச்செவி சாற்றி க்ரஹிக்க வேணும். பெரிய பெருமாள் ஸந்நிதியில் பெரியோர்கள் திருவோலக்கத்திலிந்த க்ரந்தம் ரசகம் செய்திருக்கக்கூடும். முதல் ச்லோகத்தில், பஹுஜ்ஞர்களான பெரியோர்கள் கூட்டம் அவஹிதராய்த் திருச்செவி சாற்ற, அவர்கள் முன் பெரிய பெருமாள் அநுக்ரஹித்த திருநாமத்தை யதார்த்தமாகச் செய்வதாகக் கூறினர். இங்கும் பெரியோர்கள் ஸபாத்யக்ஷர்களாக இருந்து க்ருபையாய்த் திருவுள்ளம் பற்றவேணு மென்கிறார். பரம வ்யோம மென்னும் ஸ்ரீ வைகுண்டத்தில் பகவான் அத்யக்ஷரா யிருக்கிறாரென்பது ச்ருதி. அந்த அத்யக்ஷரே இங்கே பூலோக வைகுண்டத்தில் அரங்கனாய் எழுந்தருளியிருக்கிறார். அவரை அத்யக்ஷராக வைத்துக் காவ்யங்களை யெல்லாம் அவர் முன் கவிகள் அரங்கேற்றுவர். அவரை அத்யக்ஷராக நிர்த்தேசிக்காமல் ஸப்யர்களை அத்யக்ஷராகக் கூறலாமோ வென்றால், பெரிய பெருமாளே இவர் நெஞ்சிற் புகுந்து, இந்தக் காவ்யத்தைப் பாடுவதாக அநுஸந்தாந மாதலால் கவியான அவரையே அத்யக்ஷராக நிர்த்தேசிப்பது உசிதமல்ல வென்று திருவுள்ளமா யிருக்கலாம். "ஸாகல்யேந நி:ஶேஷவித்பி: "—அகிலமென்று முதல் பாதத்தில் சொன்னதை நிச்சேஷம் என்று அநுவதிக்கிறார். முழுவதும் விசித்தியாதிருக்கட்டும். "தஸ்மி" யாதாயினும் - அப்படிக்கிருந்தும், "ஸ்ரீ தநீ:ஸீமமுக்தை" - சிறந்த கணக்கில்லாத ரத்நங்கள் நிரம்பக் கிடைக்கும். "மஹதி ஜலதௌ" மிகப் பெரிய ஸமுத்ரத்தில்;"மத்யேஹாரம் நிதேயம்"- மார்பிலணியும் ஹாரத்தின் மத்தியில் நடு நாயகமாய் வைக்க யோக்யமான இந்த அதிகரண ஸாராவளியை ஹ்ருதய தேசத்தில் தரிக்கவேணும். ஹாரத்தை அணியும் மார்பின் மத்யம் ஹ்ருதயமாகும். ஆசார்யவான்களால் இந்த ஸாராவளியும், தத்வமுக்தாகலாபமும் தார்யமென்று கடைசியில் கூறுகிறார். முதல் பாதத்தில் ஸ்ரீபாஷ்யம் முதல் மங்கள ச்லோகத்தின் முதல் பாதத்தை வைத்தார். நான்காம் பாதத்தில் இரண்டாம் ச்லோகத்தின் மத்யத்திலுள்ள மத்ய பாகத்தை வைக்கிறார். "நிதேயம்" என்று நிதியைப் போல வேணுமென்று நாம் கொள்ளலாம். மஹதி ஜலதௌ லப்தம்,-மஹாஸமுத்ரத்தில் கைக்கு அகப்பட்ட, மௌக்திகம் முத்தை, குணவித்பி: குணத்தை க்ரஹிப்

பவர், ஜஹதி கிம் எறிந்து விடுவார்களா? மஹத்தான ஸமுத்ரத்திலேயே எறிந்து விடுவார்களா? மௌக்திகம் என்பதற்கு முக்தியை ப்ரயோஜனமாக வுடையது என்று அர்த்தம். இதில் ஸங்க்ரஹித்த விஷயங்கள் முக்தி யென்னும் ப்ரயோஜனத்தை அளிக்கு மென்று ஸூசநம். கல்பதருவில் ந்ருஸிம்ஹன் விஷயமான மங்களச் ச்லோகத்தில் "மௌக்திக" என்கிற பதத்திற்கு தீக்ஷிதர் இப்படியே வ்யாக்யாநம் செய்தார். இந்த ஸ்ரக்தரைகளிலுள்ள விசேஷார்த்தங்கள் முக்தியை ப்ரயோஜனமாகவுடையன. பாற்கடலில் அநந்த ரத்நங்களிலிருந்தும் எத்தனையோ ப்ரயாஸத்தினால் அதைக் கலப்பதில் கௌஸ்துபம் முதலிய சில ச்ரேஷ்ட வஸ்துக்களே அகப்பட்டதை எறிந்துவிட்டார்களென்று த்ருஷ்டாந்த ஸ்வாரஸ்யம் சிந்தாமணியில் காட்டப் பட்டது. இங்கே "உபஶயாநு" என்பதால் ஸநத்குமாரர் நாரதருக்குப் பூமவித்யையில் தமஸ்ஸின் பாரத்தை ப்ரதர்சநம் செய்கிறாரென்று கூறியதைப் போல இந்த ச்லோகங்கள் ஸந்தேஹத்தின் பாரத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போலக் காட்டுகின்றன என்று நாம் அர்த்தம் கொள்ளலாம்.

யார் கணநை செய்யக் கூடுமென்பது, சார்ங்கியின் குணங்கள் அநந்தமாகையால் எண்ணவே முடியாது என்கிற ப்ரமாணவசநத்தை ஒத்தது. கணயிதும். என்பது விஷயங்களை எண்ணவே முடியாதே, அவைகளை நன்றாக உபபாதநம் பண்ணுவதற்கு ப்ரஸக்தி யேதென்கிற கைமுத்யத்தையும் ஸூசிக்கிறது. "கம்பீரே" என்பதற்கு அதி கம்பீரமென்று சிந்தாமணியின் கருத்தைக் கூறினதை அநுஸரித்துத் தீக்ஷிதர் அதிகபீரே என்று வைத்தார். சிந்தாமணியையும் அவர் பார்த்திருக்கலாம்.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ குண ரத்ந கோசம்.

[ஸ்ரீ உப. வித்வான் ஏ. வி. கோபாலாசார்யர், திருச்சி.]

"ஸ்ரீ பராஶர பட்டார்ய: ஸ்ரீரங்கேஶ புரோஹித: ।
ஸ்ரீவத்ஸாங்க ஸுத: ஸ்ரீமாந் ஶ்ரேயஸே மேஸ்து பூயஸே ।"

'ஸ்ரீ குணரத்ந கோசம்' என்னும் இந்த க்ரந்தத்தின் திருநாமத்தின் அர்த்தத்தைப் பத்தாவது ச்லோகத்தில் பட்டரே ஸாதித்திருக்கிறார். வேதம் லக்ஷ்மீயினுடைய கல்யாண குணங்கள் என்கிற ரத்நங்களால் நிறைந்த பொக்கிஷ க்ருஹமென்றும், அதன் கதவுகளைத் திறந்து அதிலுள்ளே மறைந்து பூட்டப் பட்டிருக்கும் குணங்களாகிய ரத்நங்களை வெளிப்படுத்தி எல்லோரும் யதேஷ்டமாய் க்ரஹணம் செய்து அநுபவிக்கும்படி இதிஹாஸம் புராணம் முதலிய க்ரந்தங்கள் செய்விக்கின்றன வென்றும் அந்த ச்லோகத்தில் ஸாதித்

241

திருக்கிறார். வேதத்தைப்போல் இந்த க்ரந்தமும் லக்ஷ்மியின் குணரத்நங்கள் நிறைந்த பொக்கிஷமாகும் என்பது அர்த்தம். வேதத்தின் கருத்து மறைந் திருப்பதும், மஹர்ஷிகளின் க்ரந்தங்களால் மறையின் கூடமான கருத்துக்களை அறியக் கூடுமேயல்லது நாம் ஸ்வதந்த்ரமாய் அறிய முடியாதென்பதும் ப்ர ஸித்தம். இந்த க்ரந்தமும் மறையைப்போல் கூடமான பாவங்களையுடையது. ரிஷிகளின் அபிப்ராயத்தை அவர்களைப் போன்ற ரிஷிகளே அறிவர்.

பராசரரென்று பட்டருக்குப் பெரியபெருமாள் தாமே திருநாமம் சாற்றி, அந்தத் திருநாமத்தை உச்சரித்துப் பலகால் அருளிப்பாடு செய்ததும் ப்ரஸித்தம். லக்ஷ்மியின் குணரத்நங்கள் ச்ருதியில் மறைந்து கிடப்பதைப் பராசர மஹர்ஷி, தம்முடைய புராண ரத்நத்தில் தெளிவாய் வெளிப் படுத் தியிருப்பதும் ப்ரஸித்தம். பட்டரும் பிராட்டியின் குணரத்நங்களை ஒரு பொக்கிஷமாகச் சேர்த்துத் திரட்டி வைத்திருக்கிறார். இதையிட்டே இவருக் குப் பராசர மஹர்ஷியின் திருநாமம் சாத்தினது உசிதமென்று சொல்லலாம்.

விஷ்ணுபுராணம் ஒரு ஸ்ரீ குணரத்ந கோசமாகும். கோசமென்பது பொக்கிஷத்தையும், மூடியிருக்கும் தாமரைமொக்குப் போன்ற மொக்கையும் சொல்லும். இதில் பாவங்கள் த்வநி மர்யாதையினால் கூடமாயிருப்பதால் இரண்டு அர்த்தங்களும் தோன்றும்படி கோசக்ருஹமென்று திருநாமமிடா மல் கோசம் என்று பெயர் வைக்கப்பட்டது. இந்த ரத்நகோசம் ஒரு ஸ்ரீ கோ சம் என்கிற உத்தம ரத்நமாகும். ஸ்ரீ கோசமென்கிற பெயர் இந்த க்ரந்தத்துக் குத்தான் தகும். உத்தம காவ்யத்தின் குணரத்நங்களுக்கு இது ஒரு பொக்கிஷ மாகும். 'தேவதேவ திவ்யமஹிஷீ' என்றும், 'ஸாந்தே தேவதேவஸ்ய ருக்மிணீம்' என்றும் வர்ணிக்கப்படும் அளாவிலா அழகினும் பிராட்டியின் உயர்ந்த கல்யா ணகுணங்கள் சிறந்ததென்பதை அவள் குணங்களையும் அழகையும் நித்யம் அநுபவிக்கும் பெருமாள், 'குணாந் ரூபவதோ ஹ்ருத்யா ஸ்ரீ ஸுர்ப்பத ஏவ ஹ்ருத்யத' என்று குணங்களை முன்பும் ரூபத்தைப்பின்பும் ப்ரீதியின் வ்ருத் திக்குக் காரணமாக நிர்த்தேசிப்பதனால் வெளிப்படுத்துகிறார். பிராட்டியும் தான் ருக்மிணியான பொழுது, 'கந்யா வரயதே ரூபம்' என்று கந்நிகைப் பருவத் தில் நாயகனுடைய ரூபத்தை அதிகமாகப் பஹுமாநிக்க வேண்டியிருந்தும் 'ச்ருத்வா குணாந்' என்று முதலில் குணங்களையும், பின்பு 'ரூபம் ச ஸுந்தர ஸ்ருதம் த்வயி நிவிசதே' என்று அழகையும் நிர்த்தேசிப்பதால் ரூபத்தினும் குணங்கள் உயர்ந்தன வென்று காட்டுகிறார். ஸ்த்ரீ ரத்நமாகிய லக்ஷ்மியின் குண ரத்நங்களைத் திரட்டிய கோசம் இந்த ஸ்ரீ கோசம் என்று பாவம். இதன் பாவங்களை ரிஷிகளே அறியக்கூடும்.

'ஸ்ரீயை ஸமஸ்த சிதசிந் நிதாந ஹேதவே ।
அசேஷ லோக ஜனந்யை ஸாநந்த கரந்த்வஜாய ॥'

242

ஸ்தோத்ரம் என்பது த்யாநம். மூலகாரணத்தைத்தான் த்யாநம் செய்ய வேண்டுமென்று சாஸ்த்ர விதி. பெருமாள் மூலகாரணமாவர். அவரை ஸ்தோத்ரத்தினுல் த்யாநம் செய்வது உசிதம். லக்ஷ்மியை த்யானம்செய்து ஸ்தோத்ரம் செய்வதற்கு அவள் ஜகத்காரணமென்று உபபாதித்தாலல்லது ஒவ்வாது. இப்படி ஆக்ஷேபம் வர பெருமாளுடைய ஜகத்காரணத்வம் இவளுடைய அங்கீகாரகடாக்ஷங்களால் ஸார்த்தகமாகிற தென்றும், அதனுல் ஜகத்காரணத்வத்தில் இவள் பெருமாளுக்கும் மேலதிகாரியான தால் இவளுக்குக் காரணத்வத்திற்குத் தட்டில்லை என்றும் இந்த ச்லோகத்தின் கருத்து. இதில் லக்ஷ்மியின் ஆதி மூர்த்தியைப் பற்றி த்யாநம். இந்த ஸ்தோத்ரம் ஸ்ரீரங்கநாயகி விஷயமாயிருந்தும், ஆதிலக்ஷ்மியின் மூர்த்திக்கும், அடுத்த ச்லோகத்தில் முதல் த்யாந விஷயமாக நிர்த்தேசிக்கப்படும் ஸ்ரீரங்கநாயகி மூர்த்திக்கும் பேதமில்லை யென்றும், இரண்டும் ஒன்றேயென்றும் காட்டுவதற்காக இங்கே முதலில் ஆதிமூர்த்தியை நிர்த்தேசிக்கிறுர். லக்ஷ்மியின் நிர்வ்யாஜமான க்ருபையை விளக்குவது இந்த க்ரந்தத்தின் முக்ய கருத்து. முடிவில் யாதொரு ஹேதுவன்றியிலும் அகஸ்மாத்தாக க்ருபையை ஸ்வீகரிக்க வேணுமென்று ப்ரார்த்திக்கிறுர். இங்கே ஆரம்பத்திலும் க்ருபாப்ரசுரமான ஸ்ருஷ்டியைக் கூறுகிறுர். ஸ்ருஷ்டியில் யௌகபத்யம் கேவலம் அநுக்ரஹ கார்யம். அது நிர்ஹேதுக க்ருபாமூலம். தாயாருடைய ஸ்நேஹத்துக்கும் க்ருபைக்கும் யாதொரு ஹேதுவும் அபேக்ஷையில்லை. ஸாமாந்ய ஸ்நேஹத்தைப் பற்றியே. ஸ்நேஹம் நிமித்த ஸவ்யபேக்ஷம் என்று சொல்லுவது விப்ரதிஷித்தமாகுமென்று மஹாகவி பவபூதியின் வார்த்தை. தருணவத்ஸையான தேநு கன்றைத் தேடுவதுபோல என்று வேதம் உபமாநம் கூறும். ஜகத்ஸ்ருஷ்டியை என்ன ப்ரயோஜநத்தைக் குறித்து ஈச்வரன் செய்கின்றுனென்றும், அதற்கு யாதொரு ப்ரயோஜநமும் சொல்லமுடியாதென்றும், அது வ்யர்த்த மென்றும் ஆக்ஷேபம் வர, அதற்கு 'லோகவத்து லீலாகைவல்யம்' என்று ஸூத்ரகாரர் ஸமாதாநம் செய்தார். இங்கே பிராட்டியின் அங்கீகார ரூபமான கடாக்ஷங்களால் ஸ்ருஷ்டி வ்யாபாரம் வ்யர்த்தமாகாமல் ஸார்த்தகமாகிறதென்று அந்த விஷயத்தில் அழகாக ஸமாதாநம் கூறுகிறுர்.

ஸ்ரியை-ஸ்ரீயின்பொருட்டு. நாராயணனுக்கு எப்படி அகாரம் முதற்பெயராகுமோ. அப்படியே லக்ஷ்மிக்கு ஸ்ரீ என்பது முதற் பெயர். இவளைப்பற்றிய வேதஸூக்தம் ஸ்ரீஸூக்தமெனப்படும். ஸ்ரீயென்பதற்கு மேல் உயர்ந்த பெயரில்லை-'ஸ்ரீரித்யேவ ச நாம தே' என்பது ஆளவந்தார் பாசுரம். ஸ்ரீசப்தம் ஆறு விதமான வ்யுத்பத்திகளால் ஆறு உத்தம குணங்களைச் சொல்லு மென்று ப்ரமாணங்களால் நிர்வசநம் செய்யப்பட்டது. இவை ஸ்ரீக்கு ஒரு ஷாட்குணயமாகும். இந்த ஆறு குணங்களையும் தசகுணமாகப் பெருக்கி அறுபது ச்லோகங்களால் இந்த ஸ்தோத்ரம் அமைந்தது. ஸர்வேச்வரனும் ஸகல பல ப்ரதனுமான பர்த்தாவை இணைபிரியாமல் ஆச்ரயித்துத் தட்டக் கூடாத நிரதிசய வால்லப்யத்தை ஸம்பாதித்து ப்ரஜைகளுக்குப் புருஷகாரம் செய்து உஜ்ஜீவிக்கச் செய்கிறுள். எல்லா ப்ரஜைகளாலும் தாங்கள் கோரும் பலங்களுக்

காக ஆச்ரயிக்கப்படுகிறாள். ப்ரஜைகளின் ஸகலதோஷங்களையும் போக்குகிறாள் ப்ரஜைகளுக்கு ஜ்ஞானம் முதலிய ஸகல க்ஷேமங்களையும் விஸ்தாரப் படுத்து கிறாள். ப்ரஜைகளின் ப்ரார்த்தனைகளைக் காதுகொடுத்துக் கேட்கிறாள். ப்ரஜை களைத் தன் நன் மொழியாகிய உபதேசத்தைக் கேட்கச் செய்து திருத்துகிறாள். "ஸ்ரியை நம:" என்று லக்ஷ்மீ ஸஹஸ்ரநாமம் அர்ச்சனா ஸ்தோத்ரத்தில் முதல் திருநாமம். ஸ்ரீயின் அர்ச்சாவதாரமான ரங்கநாயகியின் வைபவத்தை வர்ணிக் கப் போகிறபடியால் பெருமாளுடன் கூட அவதரிப்பதைச் சொல்லும் ஸ்ரீயம் தெளகேசவஜுஷ்டாம் என்கிற ச்ருதியிலும், "அந்யேஷு சாவதாரேஷு விஷ்ணோ: ஸ்ரீரநபாயிநீ" என்கிற பராசரவசனத்திலும் ஸ்ரீ சப்தம் ப்ரயோகித்ததை இங்கே அனுஸரிப்பது யுக்தம். நம் ஸம்ப்ர தாய க்ரந்தங்களில் மட்டும் "ஸ்ரிய:பதி" என்று ஆரம்பிக்கிறோமென்பதில்லை. மாகமென்னும் மஹாகாவ்யம் "ஸ்ரிய:பதி" என்று ஆரம்பிக்கப்பட்டு ஸ்ரீமத் தாய் விளங்குகிறது. அந்த ச்லோக வ்யாக்யானத்தில் மல்லிநாதர் ஸ்ரீசப்த ப்ரயோ கத்தால் வர்ணகணதி சுத்தியின் அப்யுச்சரயம். என்றார். ஸ்ரீ சப்தத்தை அவரவர் கள் பேருக்கு முன்பு நிவேசனம் செய்தே அவர்களிடம் ப்ராசஸ்த்ய புத்தி உண் டாகுமென்பது ஸர்வலோக ப்ரஸித்தம். 'ஸ்ரீசங்கரா சார்ய நவாவதாரம்' என்று அத்வைத க்ரந்தங்களில் ஸ்ரீ சப்தத்தை முன்னிட்டே அவர்கள் மத ப்ரவர்த்தனத்தை நிர்த்தேசம் செய்வர். உமையை இட்டாவது ஸரஸ்வதியை யிட்டாவது மஹிமவான்களுடைய பெயர்களில் ப்ரதம நிவேசம் செய்வதில்லை. இது சைவவைஷ்ணவம் அத்வைதம் முதலிய எல்லா ஸம்ப்ரதாயங்களுக்கும் பொது. தங்கள் பேர்களும் தாங்களும் ஸ்ரீயினால் வ்யாப்தமாக வேண்டுமென்றே கோருவர். உத்க்ருஷ்ட விபூதிகளைச் சொல்வதிலும் பகவான் 'ஸ்ரீமத்'என்று வர் ணித்தார். ஸ்ரீயினால் எல்லாம் வ்யாப்தமாவது எல்லோருக்கும் இஷ்டம். ஸ்ரீயின் வ்யாப்தி ஸுலபமாய் அநுபவாரூடமாகும். பெருமாளுடைய வ்யாப்தி சாஸ்த்ரத்தால் மட்டும் தெரியும். "த்வயைதத் விஷ்ணுநா சாம்ப ஜகத் வ்யாப்தம் சராசரம்" என்று ப்ரஸித்தமான ஸ்ரீவ்யாப்தியை த்ருஷ்டாந்தமாக முதலில் சொல்லி அதைப்போல் விஷ்ணுவின் வ்யாப்தி உபதேசம் செய்யப்பட்டது. ஜாதுநாஸம் என்கிற கீதா சாஸ்த்ராரம்ப ச்லோகத்தில் அர்ஜுனனுக்கு ப்ரஸித்தமான கண்ணன் நித்யத்வத்தை த்ருஷ்டாந்தமாகக் காட்டி, கண்ணனைப் போல் ஜீவன்களும் நித்யமென்று கூறியதுபோல், இங்கேயும் முதலில் எடுத்த ஸ்ரீ வ்யாப்தியைப் பெருமாள் வ்யாப்திக்கு த்ருஷ்டாந்தமாய்க் கூறப்பட்ட தென்று அர்த்தம் கொள்வது ஸ்வரஸம். "யத்யத் ஸ்ரீமத் ... தத்தத் தேஜோம்ஸஸம்பவம்" என்றும் வ்யாப்தியை ப்ரதர்சனம் செய்யும் கண்ணன் ஸ்ரீமத்த்வத்தை அநுவாதம் செய்து தன்னுடைய தேஜோம்சம் இருப்பதை உபதேசித்தார். அணுவான ஸ்ரீ ஸ்வரூபத்தின் வ்யாப்தி குணத்தாலும் விக்ரஹங்களாலும் எல் லா வஸ்துக்களிலும் அஹமர்த்தமாக வ்யாபித்திருக்கும் பெருமாளுக்குள் அஹந்தையாக இருப்பதாலும், வ்யாபிக்கும் சக்தியாலும் நிர்வாஹம். இங்கே நான்காம் வேற்றுமையினால் இவளுக்கு உத்தேச்யத்வம் சொல்லப்படுகிறது.

"க்ஷிப்ரம் ப்ரஸீதஸ்வ" என்கிற இடத்தில்போல் இங்கே செய்யப்படும் அஞ்சலிக்கு உத்தேச்யத்வம். எந்தத் தேவதையின் பொருட்டு ஹவிஸ் க்ரஹணம் செய்யப்படுமோ அந்தத் தேவதையை மனஸ்ஸினால் த்யானம் செய்ய வேண்டுமென்று வேதத்தின் விதி. ப்ரணவத்தில் "ஆய" என்று முதலெழுத்தால் சொல்வது போல இங்கே "ச்ரியை" என்று சதுர்த்தி. "ஹரேஃ ச்ரியை" என்று அந்வயித்துக்கொண்டு தவ ப்ரியா என்பது போலும் "விஷ்ணுபத்நீ" என்பது போலும் பர்த்ரு ஸம்பந்தத்தையும் சேர்த்து அநுஸந்திக்க வேணும்.

ஜகத் விசித்ர விந்யாஸம் என்று சொன்னதும் அவளை த்யானம் செய்யும் மந்த்ரமான 'ஆத்ரீம் புஷ்கரிணீம் புஷ்டிம் ஸுவர்ணாம் ஹேமமாலினீம்' என்கிற ருக்கில் ஸர்வ ப்ராணிகளையும் ஆள்வது புத்திஸ்தமானதால், முதலில் ஸர்வ பூதஸ்ருஷ்டியையும், அடுத்த ச்லோகத்தில் பாலந நிர்வாஹங்களையும் கூறுகிறார். ப்ரளயமென்கிற பெரிய ஆபத்து ஸமயத்தில் தமஸ்ஸினால் வேஷ்டிதராய் அசேதந ப்ராயராய் நிச்சேஷடராயிருக்கும் ப்ரஜைகளுக்குப் போக மோக்ஷங்களாகிய புருஷார்த்தங்களை அடைய ப்ரவ்ருத்திக்கக் கரண களேபரங்களைக் கொடுப்பதற்காகப் பரம காருணிகனான பகவான் இவளுடைய திருமுகத்தை வீக்ஷணம் செய்து கொண்டு இவளுடைய இங்கித பராதீநனாய் ஸ்ருஷ்டி செய்வதை உபபாதிப்பதால், இவளுடைய க்ருபையும் செல்வாக்கும் இவள் ஸர்வ ப்ராணிகளுக்கும் தாயாயிருப்பதும் தெளிவாகுமென்று ஸ்ருஷ்டியை விவரிக்கிறார். 'ஜகத்' என்பது ஸமஷ்டியைச் சொல்லும். ஹிரண்யகர்ப்பரென்னும் ப்ரஹ்மாவை ஸமஷ்டி சித் புருஷனென்று சொல்லுவர். அசித்தின் ஸமஷ்டிஸ்ருஷ்டி பகவானால் நேரில் செய்யப்படும். ஹிரண்ய கர்ப்ப சரீரகனான பகவானால் அண்ட ஸ்ருஷ்டிக்குப் பிறகுள்ள வ்யஸ்தமான வ்யஷ்டி ஸ்ருஷ்டி செய்யப்படும். 'யார் முதலில் ப்ரஹ்மாவை விதானம் செய்தாரோ; யார் அந்த ப்ரஹ்மாவுக்கு வேதங்களைப் பாலிக்கும்படி செய்தாரோ, ஆத்மபுத்தி ப்ரகாசகனான அந்தத் தேவனை மோக்ஷார்த்தியாக நான் சரணமாக ப்ரபதநம் செய்கிறேன்,' என்கிற ச்வேதாச்வதர ச்ருதியை அநுஸரித்து, அஞ்ஜலி கரணமான ப்ரபதநத்தைச் சொல்லுமிடத்தில் ஸமஷ்டி சித்தான ப்ரஹ்மாவை விதானம் செய்யும் ஸமஸ்த ஸ்ருஷ்டியைக் கூறுகிறார். அந்த ச்ருதியிலுள்ள 'விதாந' சப்தம் இங்கேயும் அமைக்கப்பட்டது. 'ஜகத் விசித்ர' என்று இங்கு ப்ரயோகித்ததற்கு இப்படி தாத்பர்யம் பட்டர் திருவுள்ளத்தில் இருந்ததற்கு நிச்சிதமான ப்ரமாணம் உண்டு. 'விதாதா' என்கிற பதத்திற்கு ஸஹஸ்ரநாம பாஷ்யத்தில் "ஸர்வலோகாநாம் ஸர்வ ஸத்த்வஸ்ருஷ்டிஹேதூனாம் வ்ரஹ்மாதீனாம் ஸத்த்வஸ்ருஷ்டிஹேதும் விசிஷ்டாஸக்தம் மஹத்த்வம் ததாதீதி" என்று ஸாதித்தார். இந்த அர்த்தம் ஸ்ரீபாஷ்யத்தில் ஸம்ஜ்ஞா மூர்த்தி க்லுப்த்யதிகாரணத்தில் கண்டு கொள்ளலாம். 'ஜகத்' எல்லாம் என்று அர்த்தம் கொள்ளவேணும். விச்வத்திற்கும் ஸ்ருஷ்டிகாரணத்வம் இங்கே சொல்லுகிறது. "ஜகத்ஸ்ருஷ்டம் யதவாங்மனஸம் ச்ரியம்" என்கிற ஸ்தோத்ர ரத்நச்லோ

245

கம் இங்கே பட்டர் திருவுள்ளத்தில் ஓடுகிறது. இங்கேயும் இவருடைய அபாங்கங்களின் ப்ராதாந்யத்தை வர்ணிக்கிறார். ஸ்ருஷ்டிஸ் ஸர்கம் விவிதம் ஸம்வயம் வ்யாஸம்'' என்கிற வசநமும் இங்கே புத்திஸ்தம். “எல்லாம்” என்கிற அர்த்தமும் இங்கே திருவுள்ளம் தான். ஹரியினுடைய “ஸர்க விவித வ்யாஸநம்” என்பதால் ஹரியோடு ஸமஸ்தமான சிதசித்துக்களின் ஸ்ருஷ்டி என்றும் அர்த்தம். “ ஸஹ ப்ரஹ்மணா விபஸ்சிதா” என்கிறபடிக்கும் “ ஸூக்ஷ்மைரதை: ” என்கிறபடிக்கும் பெருமாளால் அநுப்ரவிஷ்டமான சிதசித்துக்கள் ஸ்ருஷ்டிக்கப் படுகின்றன என்பது விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தின் ப்ரதாநாம்சமாகையால் அதைஇங்கே முதலில் ஸூசிக்கிறார். ‘ஸர்கம்’ என்றால் சிதசித்துக்கள் யாரோடு ஸமஸ்தமாயின என்று ஆகாங்க்ஷை உதிக்கிறது. சாஸ்த்ரத்தை அநுஸரித்துத் ‘தன்னோடு’ என்று பூரணம் செய்து கொள்வது உசிதம். உக்த க்ரமத்தில் இந்த மூன்று அர்த்தங்களையும் கொள்ளவேணும். “ஜீவேநாத்மநாநுப்ரவிஸ்ய” என்பதை நினைக்கவேணும். “விஹாரம்” என்பதால் ஸ்ருஷ்டியின் ஸத்யத்வத்தைக் கூறினார். “ஸங்கல்பயதி” என்கிற ச்ருதிக்கு ப்ராந்தியினால் கல்பநம் செய்ததாக அர்த்தம் கொள்ளக்கூடாது. “விஹாதி”, “ஸ்ருஜத ” என்கிற ச்ருதி பதங்களைப்போல் கல்பநத்தையும் ஸ்ருஷ்டியென்று கொள்ள வேணும். “வ்யஸநம்” என்பதற்கு இரண்டு மூன்று அர்த்தங்களில் இங்கே நோக்கு “வித்யாயாம் வ்யஸநம்” என்ற பர்த்ருஹரி ச்லோகத்தில் போல தீவ்ரமும் பிடிவாதமுமான விடாமுயற்சியையும் தீவ்ரமான ஆசையோடு செய்கிற உத்யோகத்தையும் சொல்லலாம். ஈச்வரன் சேதநர்களை உஜ்ஜீவிக்கச் செய்யவேணு மென்கிற துராசாவசத்தால் மறுபடியும் மறுபடியும் பலபல ஜந்ம மெடுத்து அவதாரம் செய்கிறானென்று ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் வேடிக்கையாய் ஸாதிக்கிறார். சேதநர்கள் உஜ்ஜீவிக்கட்டும் என்று மநோரதம் செய்து எத்தனையோ தடவைகள் அந்தந்த ப்ரயத்நத்துக்குப் பிறகு ஸ்ருஷ்டிகள் செய்தும் பலிக்காமலிருந்தும், இப்பொழுதும் ஆசையினால் விடா முயற்சியாய்க் கரணகளேபரங்களைக் கொடுத்து உஜ்ஜீவநோபாயங்களில் ப்ரவ்ருத்திக்கச் செய்யலாமென்று இந்த ஸ்ருஷ்டி வ்யாபாரத்தைச் செய்திருக்கிறார். இப்படிச் செய்வதில் முன் போல் வீணாய்ப் போகாமல் ஸார்த்தகமாக வேணுமே என்கிற சிந்தா வ்யஸநமும் துக்க வ்யஸநமும் இங்கே விவக்ஷிதம். இவர் கவலை பிராட்டியால் தீர்க்கப்படுகிறது.

‘நான் பார்த்துக் கொள்ளுகிறேன் ; சேதநர்களுக்குத் தாயாகி அவர்களை உபாயங்களில் மூட்டி ப்ரபந்நராகும்படி செய்து நம்மிடம் வந்து சேரும்படி செய்கிறேன்’ என்று தன்னுடைய அங்கீகார கடாக்ஷங்களால் ஆச்வாஸநம் செய்கிறாள். அவளுடைய கடாக்ஷமில்லாவிடில் விடாமுயற்சியாய் வ்யஸநிதயா செய்யும் பெரிய ஸ்ருஷ்டிஸம்ரம்பம் வ்யர்த்தமாய்விடும். வ்யஸநமென்பது த்யூதம் முதலிய விளையாட்டுக்களையும் சொல்லும். ஸ்ருஷ்டியை இந்தத் தம்பதிகளின் விளையாட்டென்று சொல்லுவர். “காமு: காமுக்யாஹ்நவநவ ஸுகே க்ரீடதி ப்ராணிபாஸை:” என்று பர்த்ருஹரி இந்தத் தம்பதிகளின்

246

சொக்கட்டான் சதுரங்க விளையாட்டென்கிறார். த்ரிகுண பலகத்தை மத்தியில் வைத்துக்கொண்டு இவ்விருவரும் செய்யும் விப்ரம த்யூதம் என்று ஸ்ரீஸ்துதியில் வேதாந்தாசார்யர் வார்த்தை. ஸூத்ரகாரர், "ஸ்ருஷ்டி கேவலம் லீலையாகும்; அதற்கு ப்ரயோஜநம் விசாரிக்க வேண்டியதில்லை" யென்று நிர்ணயம் செய்தார். ஸ்ருஷ்டி ஒரு லீலா வ்யஸநமாகும். ப்ரளயாபத்தை ஹரணம் செய்து ஸ்ருஷ்டியில் ப்ரவ்ருத்திக்கிறார். ஸ்ருஷ்டி யென்கிற விளையாட்டினால் லக்ஷ்மியின் எதிரில் விஹரணம் செய்கிறார். ஸ்ரீரங்கராஜ ஸ்தவத்தில், ஆண்மயிலானது சுருங்கியிருந்த தன் தோகையை நன்கு விரித்துப் பெண்மயில் முன்பு அதன் ஸந்தோஷத்துக்காகவும் அதற்கு அடையாளமான அங்கீகார அபாங்க வீக்ஷணங்களைப் பெறவும் ஆடி விளையாடுவது போல், சுருங்கியிருக்கும் இடம் தெரியாமல் ப்ரளய ஸமயத்தில் இருந்த சிதசித்துக்கள் என்கிற தம்முடைய சரீரத்தின் ஒரு பாகத்தை ஸ்ருஷ்டி என்ற வ்யாபாரத்தினால் விஸ்தாரமாக நீட்டி, அநேக வர்ணங்களுடைய தன் விசித்ரமான த்ரிகுண ஸம்ஸ்ருஷ்ட சரீரத்தோடு பிராட்டியின் முன் நர்த்தநம் செய்கிறார் என்று கூறியதை இங்கே நினைக்க வேணும். லோக வ்யஸநத்தை ஹரிக்கும் ஹரியின் வ்யஸநம் இவளுடைய ஆச்வாஸத்தினால் ஹரணம் செய்யப்படுகிறது.

(தொடரும்.)

க்ரந்த விமர்சம்.

(1) ஸ்ரீ பாஷ்யத்தின் இங்க்லிஷ் மொழி பெயர்ப்பு.

திருக்குடந்தையில் ஸ்ரீ ஆராவமுதனுடைய திருவடிவாரத்தில் நித்ய வாஸம் செய்யும் பாக்யத்தைப் பெற்றவர்களுள் ஒருவரான திவான் பஹதூர் ஸ்ரீ. உ.ப.வி, கெ. ராமாநுஜாசார்யர் என்னும் வித்வான், ஸ்ரீ பாஷ்ய க்ரந்தத்தை இங்க்லிஷ் பாஷையில் மொழி பெயர்ப்பதாக ஆரம்பித்த, முதல் அத்யாயம் முதல் பாதம் முதல் மூன்று ஸூத்ரங்களின் பாஷ்யத்தை ஒரு ஸஞ்சிகை யாகவும் முதல் பாதத்தின் அவசிஷ்டாம்சம் முழுவதையும் மற்றொரு ஸஞ்சிகையாகவும் இப்பொழுது வெளியிட்டிருக்கிறார். அதில் ஒரு ப்ரதியை நாம் வரப்பெற்றோம். ஸ்ரீ ராமாநுஜாசார்யரால் வெளியிடப்பட்டு வரும் க்ரந்தங்களெல்லாம் ஆஸ்திகர்களால் ச்லாகிக்கத் தக்கவையாகவே இருக்கின்றன வென்பது அவைகளைப் படிப்பவர்களுக்குத் தெரிந்த விஷயம். பூர்வாசார்யர்களால் ஜகத்தின் ச்ரேயஸ்ஸை உத்தேசித்து அநுக்ரஹிக்கப்பட்டுள்ள தத்வஹித புருஷார்த்த ஸம்பந்தங்களான விஷயங்களை, கேவலம் வித்வஜ்ஜநங்களுடன் சரிதார்த்தமாகப் பரிஸமாப்தியை அடையவொட்டாமல், ஸாமாந்ய ஜநங்களுக்கும் கோசரமாகும்படி, ஜநங்களுக்குள் வழங்கி வரும் பாஷையில் எளிதான நடையில் வெளியிட வேண்டும் என்பது அவருடைய முக்யமான நோக்கம், அந்த விஷயங்களெல்லாம் இக்காலத்தில், அநேக காரணங்களடியாக

பஹுப்ரகாரமான வைபரீத்யத்தை அடைந்து நிற்கின்றன. நமது சாஸ்த்ரங்களின் மீது த்வேஷம் கொண்டிருக்கும் சில அல்ப ச்ருதர்கள், அவைகளில் துராக்ரஹத்துடன் ப்ரவேசித்து, அவைகளின் தாத்பர்யத்தை உள்ளபடி க்ரஹிக்க அசக்தர்களாய் தம்முடைய புத்திக்குத் தோன்றும் அர்த்தத்தையே அவைகளின் உண்மையான அர்த்தமென்று கைக்கொண்டு, அந்த அர்த்தமே நமது பூர்வர்களால் உபதேசிக்கப்பட்டிருக்கின்றது என்று ஜகத்திற்கு அந்தத் தவறுதலான அர்த்தத்தையே வற்புறுத்தி வருகிறார்கள். நமது சாஸ்த்ர விச்வாஸிகளுட் சிலரும், அந்த விஷயங்களின் ப்ரசாரத்தைச் சரிவர செய்யக்கூடிய யோக்யதையைப் பெற்றிருக்கையிலும், சிற்சில விஷயங்களில் சிற்சில ஆக்ரஹ பரவசர்களாய் தமது அபிநிவேசங்களுக்கு அநுகுணமாக அவைகளைப் பரிணயநம் செய்து ஸாமாந்ய ஜநங்கள் ப்ரமிக்குமாறு அவைகளை வெளியிட்டு வருகிறார்கள். இவ்விதம் இரண்டு பக்கங்களிலும் பாதிக்கப்படும் அந்தச் சிறந்த விஷயங்களை, ஸ்வத: ஸித்தமானபடி ஜகத்துக்குத் தெரிவிக்க வேண்டுமென்னும் எண்ணத்துடனே ஸ்ரீ ராமாநுஜாசார்யர் இம்மாதிரியான ப்ரவ்ருத்திகளில் ப்ரவேசிக்கிறபடியால், அவருடைய ப்ரவ்ருத்திகளெல்லாம் ஆஸ்திகர்களால் ஸாது வென்றே ச்லாகிக்கப்பட்டு வருகின்றன. "ஸ்ரீமத் ரஹஸ்யத்ரய ஸாரச் சுருக்கு" என்னும் க்ரந்தத்திலும் "ஸ்ரீ கீதாபாஷ்ய மொழி பெயர்ப்பு" என்னும் க்ரந்தத்திலும் இந்த ஏற்றம் நன்கு ப்ரகாசிக்கின்றது. ப்ரக்ருத ஸ்ரீ பாஷ்ய மொழி பெயர்ப்பிலும் அந்த ஏற்றம் நன்கு தென்படுகின்றதென்பதே நம்முடைய அபிப்ராயம்.

இந்த க்ரந்தத்தை ஒரு மொழி பெயர்ப்பு என்னும் பேயருடன் அவர் வெளியிட்டிருக்கிறார். ஆனால் அதைக் கேவலம் மொழி பெயர்ப் பென்று நாம் சொல்லத் துணியோம். ஸ்ரீ பாஷ்யத்திலுள்ள ப்ரதானமான அர்த்தத்தை, ஸ்ரீ பாஷ்யகர்த்தாவினால் அநுஸரிக்கப்பட்டுள்ள க்ரமத்தை மாத்ரம் அநுஸரித்து ஒருவாறு இவர் விவரித்திருக்கிறாரே தவிர ஸ்ரீ பாஷ்ய பங்க்தியைத் தவறாது அநுஸரித்து ஸ்ரீ பாஷ்யத்தில் வெளியிடப்பட்டுள்ள விஷயங்களெல்லாவற்றையும் ஸமக்ரமாக வெளியிடவில்லை. ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக ஸ்ரீ பாஷ்யகாரரால் செய்யப்பட்டிருக்கும் விசாரங்களெல்லாம் ப்ராயேண விலக்கப்பட்டிருக்கின்றன. தம்மால் நிரூபிக்கப்படும் விஷயங்களுக்கு ப்ரமாணமாக ஸ்ரீ பாஷ்ய கர்த்தாவால் உரைக்கப்பட்டுள்ள ப்ரமாண வாக்யங்களெல்லாம் பிரித்தெடுக்கப்பட்டு க்ரந்தத்துக்கு அநுபந்த ரூபமாக மற்றோரிடத்தில் சிறிய வ்யாக்யாநத்துடன் எழுதப் பட்டிருக்கின்றன. மூல க்ரந்தத்தில் விஷயங்கள் துரூஹங்களாகக் காணப்படுமிடங்களெல்லாவற்றிலும், ஸ்ரீ ச்ருதப்ரகாசிகை யென்னும் வ்யாக்யாநத்தில் தென்படும் விவரணங்களில் சில அம்சங்கள் ஆங்காங்கு உதாஹரிக்கப்பட்டிருக்கின்றன. இம்மாதிரியான காரணங்களால், இந்த க்ரந்தத்தைக் கேவலம் மொழி பெயர்ப்பு என்று சொல்வதற்கு நாம் சங்கிக்கிறோம். ஆனால் அதை எப்படி வ்யவஹரித்தால் என்ன? அதில் சொல்லப்பட்டுள்ள விஷயங்களில் ச்லாகார்ஹமான வைலக்ஷண்யம் இருக்கின்றது என்பதில் விவாதமில்லை.

இந்த க்ரந்தத்திற்கு ஒரு முகவுரையும் அநுரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. அதில், பூர்வ மீமாம்ஸா விஷயங்களெல்லாம் ஸங்க்ரஹமாக அநுவதிக்கப் பட்டிருக்கின்றன. ஸங்க்ரஹத்தால் ஸம்பவிக்கக்கூடிய அவைசத்யம் முதலான சில தோஷங்கள் சிற்சில இடங்களில் தென்பட்ட போதிலும், ப்ராயேண அந்த ஸங்க்ரஹம் நிர்த்துஷ்டமாகவும் ஸாமாந்ய ஜநங்களுக்கு ஸ்ரீ பாஷ்ய விவரணங்களை விளக்குவதில் உபகாரகமாகவும் இருக்கின்றது என்பதில் ஆக்ஷேபமில்லை. ஸ்ரீ பாஷ்யத்தில் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள விஷயங்கள் அநர்க்கங்களான ரத்நங்களே. அவைகளை ஸர்வ ஜந கோசரமாகச் செய்வது பெரியதொரு ஜகதுபகாரம். அந்த உபகாரத்தைச் செய்ய ப்ரவ்ருத்திக்கும் ஸ்ரீ. ராமாநுஜாசார்யர் விஷயத்தில், பகவத் பாஷ்யகாரருடைய திருவடிகளை ஆச்ரயித்திருக்கும் ஸ்ரீவைஷ்ண

வர்களெல்லாரும் அளவற்ற க்ருதஜ்ஞதாநுஸந்தாநம் செய்யவேண்டியது அவச்யமே. இந்த ஸஞ்சிகையின் க்ரயம் ஒரு ரூபாயென்று ப்ரசுரம் செய்யப்பட்டிருக்கின்றது. க்ரந்தத்தை அபேக்ஷிப்பவர்கள் "திவான் பஹதூர் வி. கே. ராமாநுஜாசார்யர், பெரிய வீதி, கும்பகோணம்" என்னும் விலாஸத்துக்கு எழுதி பெற்றுக் கொள்ளலாம்.

(2) பகவத் விஷயம்.

ஸ்ரீ நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்டிருக்கும் திருவாய் மொழி என்னும் க்ரந்தத்தை ஆறாயிரப்படி முதலாய் ஈடு முப்பத்தாறாயிரப்படி வரையிலான ஐந்து வ்யாக்யாநங்களுடன, திருவல்லிக்கேணி ஸ்ரீ. உப. சேட்லூர் க்ருஷ்ணமாசார்யர் என்னும் ஸ்வாமி, சற்றேறக்குறைய ஒன்பது வருஷங்களுக்கு முன் அச்சிட்டு ப்ரசுரம் செய்ய ஆரம்பித்தார் என்னும் விஷயம் நமது ஸுஹ்ருத்துக்களுக்குத் தெரிந்திருக்கலாம். இப்பொழுது அந்தக் கைங்கர்யத்தை ஸ்ரீ சரண்யன் தலைக்கட்டிக் கொண்டுவிட்டான். பத்துப் பத்துக்களும் பத்து ஸம்புடமாக நல்ல காகிதத்தில் அச்சுப் பிழைகள் இராமல் அச்சுப்பதிப்பிக்கப் பெற்று வெளி வந்திருக்கின்றன. எம்பெருமானுடைய திவ்ய கல்யாண குணங்களை அநுஸந்தாநம் செய்வதில் நிரதிசய ப்ரீதியை உடைய ஆஸ்திகர்களெல்லாரும், இம்மாதிரி இந்த க்ரந்தம் வெளி வந்திருப்பதை மிக்க ஆஹ்லாதத்துடன் கொண்டாடுவார்கள் என்பதில் ஆக்ஷேபமில்லை. இதன் விலை முதலிய விஷயங்களைத் தெரிந்து கொள்ள அபேக்ஷிப்பவர்கள், 'ஸ்ரீ வைஷ்ண ஸம்ப்ரதாய புஸ்தகசாலை, 19 தென்னண்டை மாடவீதி, திருவல்லிக்கேணி, மதிராஸ்,' என்னும் விலாஸத்திற்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

(3) லகு ஆஹ்நிகம்

இது, பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யர்களாய் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ கோழியாலம் ஸ்வாமி என்று ப்ரஸித்தரான ஸ்ரீமத் ரங்கராமாநுஜ மஹாதேசிகர்களால் ஸங்க்ரஹிக்கப்பட்டுள்ள ஒரு ஆஹ்நிக க்ரந்தம். இக்காலத்தில் லௌகிக வ்யாபாரங்களில் ப்ரவ்ருத்தித்துள்ள ஆஸ்திகர்களின் ஸௌகர்யத்தையும் அவர்களுடைய ச்ரேயஸ்ஸையும் உத்தேசித்து இது எழுதப்பட்டிருக்கிறதென்று நாம் அறிகிறோம். அவர்கள் இந்த க்ரந்தத்தை அநுஸரித்து ஸ்ரீ ஸ்வாமியால் உத்தேசிக்கப்பட்ட ச்ரேயஸ்ஸைப் பெற ப்ரயத்நப் படவேண்டும் என்பது நமது ப்ரார்த்தனை. இதன் க்ரயம் அணா 5. என். டி. ஸ்ரீராமாசார்யர் வக்கீல் கூடலூர், டி. டி. ஸ்ரீநிவாஸாசார்யர் வக்கீல் மயிலாப்பூர், பண்டிதர், வி. அநந்தாசார்யர் பச்சையப்பன் காலேஜ் மதிராஸ், இவர்களுள் ஒருவருக்கு எழுதி அதைப் பெற்றுக் கொள்ளலாம்.

249

ஸ்ரீ:

|| ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: ||

ஸம்பாதகீயம்

யோ(அ)ந்த: ப்ரவிச்ய மம வாசமிமாம் ப்ரஸுப்தாம்
ஸஞ்ஜீவயத்யகிலசக்திதர: ஸ்வதாம்நா
அந்யாம்ச்ச ஹஸ்தசரணச்ரவணத்வகாதீந்
ப்ராணாந்நமோ பகவதே புருஷாய துப்யம் ||

வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டம்.

“வ்யாஸ ஸித்தாந்த மார்தாண்டம்” என்னும் பெயருடன் ஒரு வேதாந்த க்ரந்தம், மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் ஸ்ரீ உப. தேசிகாசார்ய ஸ்வாமியால் எழுதப் பெற்று, இப்பொழுது ஒரு புஸ்தக ரூபமாக வெளி வந்திருக்கின்றது. ஏற்கெனவே நாம் இந்த க்ரந்தத்தைப் பற்றி நமது தீபிகையில் சென்ற விபவ வருஷம் மாசி மாஸத்திய ஸஞ்சிகையில் ப்ரஸ்தாவித்திருக்கிறோம். ஆனால், அப்பொழுது, அந்த க்ரந்தம் ஸமக்ரமாகவும் புஸ்தக ரூபமாகவும் வெளி வராமல் இருந்தது. இப்பொழுது அது ஸமக்ரமாக வந்திருக்கிறபடியால் அதைப் பற்றி மறுபடியும் இவ்விடத்தில் ப்ரஸ்தாவம் செய்ய நாம் துணிகின்றோம்.

இந்த க்ரந்தத்தின் முக்யமான விஷயம் என்னவென்றால்:—‘பகவத் பாதராயணரால் செய்யப்பட்டுள்ள “சாரீரக மீமாம்ஸை” என்னும் ஸூத்ர ரூபமான க்ரந்தத்தின் ஸித்தாந்தமாவது யாது? என்பதை நிர்ணயம் செய்யவேண்டும்’ என்பதே. அத்வைதிகள் சொல்வது போல ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் தென்படும் பேதம் கேவலம் அவித்யா கல்பிதமென்று அந்த ஸித்தாந்தம் சொல்லுகிறதா? இல்லாவிட்டால், விசிஷ்டாத்வைதிகள் சொல்வது போல, அந்தப் பேதம் ஸ்வாபாவிகமென்று சொல்லுகிறதா? இதை நிர்த்தாரணம் செய்வதே இந்த க்ரந்தத்தின் விஷயம். இந்த நிர்ணயம் ஸுலபமாகச் செய்யக்கூடிய நிர்ணயமன்று. இதற்கு முந்தி அநேக வித்வான்கள் இதே நிர்ணயத்தைச் செய்யவேண்டுமென்று கருதி அநேக க்ரந்தங்களை பஹுவான ந்யாய ஸஞ்சார புரஸ்ஸரமாக எழுதி இருக்கிறார்கள். ஆனால், அந்த க்ரந்தங்களால், இது வரையில், எல்லாராலும் ஒத்துக்கொள்ளக் கூடியதாக ஒரு வித நிர்ணயமும் ஏற்பட வில்லை; இனியும் அம்மாதிரி நிர்ணயம் ஒன்று ஏற்படுமென்று நினைப்

250

பதற்குத் தகுந்த ஹேதுக்களையும் காணேம். அப்படியிருந்த போதிலும், அந்தந்தக் காலங்களில் அந்தந்த வித்வாங்களால், ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்யத்தையும் மற்றை அந்தரங்க பஹிரங்க ஸாக்ஷ்யங்களையும் ஆதாரமாகக் கொண்டு புதிது புதிதாக உபபாதிக்கப்படும் யுக்திகளைப் பார்க்க, ரஸிகர்களுடைய மநஸ் மிகுந்த ஆஹ்லாதத்தை அடைகின்றது என்பதில் ஆக்ஷேபமில்லை. தவிரவும், தம் தமக்கு ருசிக்கும் ஸித்தாந்தத்தையே தத்வமென்று நம்பியிருக்கும் ஆஸ்திகர்களுக்கெல்லாம், இதரர்களாற் செய்யப்படும் யுக்த்யுபபாதநத்துடன் வாதத்தை முடிவு பெறவிடாமல் அவர்களாற் சொல்லப்பட்டுள்ள யுக்திகளில் காணப்படும் தோஷங்களை வெளியிட்டும் அந்த யுக்திகளுக்கு மேற்பட்ட ப்ரபலமான யுக்த்யந்தரங்களை உபபாதித்தும் ஒருவர் க்ரந்தம் எழுதினரேயானல், அந்த க்ரந்தம் அத்யந்தம் ஆச்வாஸகரமாக இருப்பது மாத்ரமன்றிக்கே மநஸ் ஓரிடத்தில் நிலைபெற்று லயிப்பதற்கும் காரணமாகுமன்றோ? ஆகையால் விசிஷ்டாத்வைதிகளாக இருக்கும் நாம் ஸ்ரீ. உப. தேசிகாசார்ய ஸ்வாமியின் க்ருதியைப் போன்ற க்ருதிகளை மிக்க ஆநந்தத்துடன் கொண்டாடுகிறோம்.

ஸ்வல்ப காலத்திற்கு முன் உத்தர தேசத்தில் வஸித்து வந்த ஒரு அத்வைதி வித்வாங், வ்யாஸ ஸித்தாந்த விஷயமான நிர்ணயத்தைச் செய்யக் கருதினவராய், இவ்வளவு காலமாகப் பல வித்வாங்களாற் செய்யப்பட்டு வந்துள்ள ஸூத்ராக்ஷர ஸ்வாரஸ்ய சிந்தநம் முதலிய உபாயங்களை அபர்யாப்தங்களாக நினைத்து, புதிதான மற்றொரு உபாயத்தைக் கைப்பற்றி "வ்யாஸ தத்வ நிர்ணயம்" என்னும் ஒரு க்ரந்தத்தை எழுதி இருக்கிறார். அதில் அவர், 'வ்யாஸருடைய மதம் அத்வைதமே,' என்று நிர்ணயம் செய்திருப்பதை எல்லாரும் பார்க்கலாம். அவரால் உபபாதிக்கப்பட்டுள்ள யுக்தி பின்வருமாறு காணப்படுகின்றது. ஒரு க்ரந்த கர்த்தாவின் உக்திகளுடைய தாத்பர்யம் ஸந்தேஹக்ரஸ்தமாக இருந்ததே யானல், அந்த ஸந்தேஹத்தை நிர்ணயம் செய்து கொள்வதற்கு, நாம், 'அந்த ஸந்தேஹ விஷயமான கக்ஷியொன்றிலும் எவ்வித ஆக்ரஹத்தையும் செய்யாமல் கேவலம் தடஸ்தராக இருக்கும் மற்றொருவர் அந்தத் தாத்பர்யத்தை எவ்விதம் வெளியிடுகிறார்?' என்பதைப் பார்க்க வேண்டும். ப்ரக்ருத விஷயத்தில் அம்மாதிரி ஆக்ரஹமற்ற தடஸ்தர்கள் அநேகருண்டு. அவர்களுள் கபிலர் என்னும் மஹர்ஷி ஒருவர். அவர், வ்யாஸர் ப்ரஹ்ம ஸூத்ரம் செய்திருப்பது போல, ஸாங்க்யம் என்னும் ஒரு ஸித்தாந்தத்தை வெளியிட்டிருக்கிறார். வ்யாஸ ஸித்தாந்தத்தில் அவருக்கு எவ்வித விச்வாஸமுமில்லை யாதலால், அந்த ஸித்தாந்த ஸம்பந்தமான ஒரு கக்ஷியிலும் அவருக்கு எவ்வித பக்ஷபாதமும் இருப்பதற்கு ஹேதுவில்லை. அவர், தமது க்ரந்

த்தில் அநேக விஷயங்களைப் பற்றி விசாரித்து வரும்பொழுது, ஓரிடத்தில், 'ஸம்ஸார பந்தம் முழுவதும் மித்யையென்று சிலர் சொல்லுகிறார்கள்' என்று ஆரம்பித்துச் சில அநுவாதங்களைச் செய்து அவைகளைக் கண்டித்திருக்கிறார். அந்த அநுவாதங்கள் வ்யாஸருடைய மதத்தின் அநுவாதமாக இருக்கவேண்டுமென்று சில ஹேதுக்களால் அநுமாநித்துக்கொண்டு, இந்த அத்வைதி வித்வான், 'வ்யாஸருடைய மதம் சுத்த அத்வைதம் என்பதே கபிலருடைய அபிப்ராயம்' என்று நிர்ணயித்திருக்கிறார். இதுதான் இவர் சொல்லும் யுக்தி.

ஸ்ரீ தேசிகாசார்யர், ப்ரஸ்துத வ்யாஸ ஸித்தாந்த மார்த்தாண்டத்தில், எந்த அம்சங்களில் இந்த அத்வைதி வித்வானுடைய நிர்ணயம் அஸாதுவாக இருக்கின்றது என்றும், வேறு என்ன உபாயத்தைக் கைப்பற்றினால் நிர்த்துஷ்டமான நிர்ணயம் ஏற்படுமென்றும் விவரித்திருப்பதுடன், ஸூத்ரங்களுடைய அக்ஷரஸ்வாரஸ்யத்தைக் கொண்டும் வ்யாஸருடைய மதம் எதுவாக இருக்க வேண்டும் என்பதைத் தெளிவாகவும் த்ருடமாகவும் விவரித்திருக்கிறார். முதலில் அவர் செய்யும் கண்டநம் எந்த ரீதியில் செல்லுகின்றது என்பதைப் பார்ப்போம். இந்த ஸந்தேஹ விஷயத்தில்கபிலர் தடஸ்தர் என்பது உண்மையே. ஆனால் அவரால் அநுவதிக்கப்பட்டுள்ள மதம் வ்யாஸருடைய மதமென்று சொல்வதற்குப்போதுமான ஹேதுக்கள் இல்லை. ஓரிடத்திலாவது அவர், 'வ்யாஸர் இம்மாதிரி ஸித்தாந்தித்திருக்கிறார்' என்று சொல்லவில்லை. 'அப்படிச் சொல்லாவிடினும் விஷயத்தின் ஒற்றுமையைக் கொண்டு வ்யாஸருடைய மதமே இவ்விடத்தில் அநுவதிக்கப்படுகின்றது என்று அநுமாநம் செய்து கொள்ளக் கூடாதோ'? என்றால், வ்யாஸருடைய மதம் நிர்ணீதமாகத் தெரிந்தாலன்றோ நாம், 'அது அநுவாதத்துடன் ஒத்திருக்கின்றது' என்று சொல்லக்கூடும்? ஒற்றுமையை ஹேதுவாகக் கொண்டு வ்யாஸ மத நிர்ணயம் செய்யப் புகும்பொழுது, வ்யாஸ மத நிஷ்க்ருஷ்ட ஜ்ஞாநத்தை ஆதாரமாகக் கொண்டு ஒற்றுமையை ஸாதிக்க ப்ரயத்நப்படுவது அந்யோந்யாச்ரயமாக மாட்டாதோ? 'வ்யாஸமதம் அத்வைதம்; ஆகையால் ஒற்றுமை இருக்கின்றது' என்று அத்வைதிகள் சொல்லும் பக்ஷத்தில், 'வ்யாஸமதம் விசிஷ்டாத்வைதம்; ஆகையால் இவ்விடத்தில் அநுவதிக்கப்படுவது அதைக்காட்டிலும் வேறு' என்று நாம் சொல்வது ச்ரம ஸாத்யமாகுமோ? உண்மையாகவே, அநுவாதத்தில் ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள 'ஸம்ஸார பந்தம் மித்யை' இத்யாதியான விஷயங்கள் வ்யாஸ ஸூத்ரங்களில் ஓரிடத்திலும் சொல்லப்படவில்லை. கபிலருடைய ஸூத்ர க்ரந்தத்திற்கு வ்யாக்யாநம் செய்திருக்கும் விஜ்ஞாநபிக்ஷு என்பவரும், இந்த ப்ரகரண ஸம்பத்தமான வ்யாக்யாநாரம்பத்தில் 'இவ்விடத்

தில் வேதாந்த சாஸ்த்ரத்தில் ஆபாதத: தோன்றும் விஷயங்கள் அநுவதிக்கப் படுகின்றன' என்று மாத்ரம் எழுதி இருக்கிறாரே தவிர, 'வேதாந்திகளுடைய ஸித்தாந்தம் இவ்விடத்தில் அநுவதிக்கப்படுகின்றது' என்று எழுதவில்லை. ஆகையால், கபிலருடைய அநுவாதம் ப்ரக்ருத விஷயத்தில் அவ்யாவர்த்தகமே.

'அந்த அநுவாதம் வ்யாஸ மதத்தையே விவரிக்கின்றது' என்பதை ஒத்துக் கொண்ட போதிலும், அது இஷ்டத்தை ஸாதித்துக் கொடுக்கத் தகுந்த பலத்தை உடையதன்று. ஏனென்றால், ஹேதுக்களின் பலாபல நிர்ணயம் பின்வருமாறு ஒரு ந்யாயத்திற்குக் கட்டுப்பட்டிருக்கவேண்டும் என்பதை எல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். ஒருவருடைய உக்தியின் தாத்பர்ய ஸம்பத்தமான ஸந்தேஹ நிர்ணயத்தைச் செய்யுமிடத்தில் ஸ்தலாந்தரங்களில் அவரே சொல்லி இருக்கும் வேறு உக்திகளைக் கொண்டு அந்த ஸந்தேஹ நிர்ணயத்தைச் செய்ய நாம் முதலில் ப்ரயத்நப்படவேண்டும்; அது அந்தரங்க ஸாக்ஷ்யமானதால் அந்த ஸந்தேஹ நிர்ணயத்தில் அதுவே பலிஷ்டம். அப்படிப் பட்ட உக்திகள் ஒன்றும் இல்லையானால் பிறகு பஹிரங்க ஸாக்ஷ்யமாகிற தடஸ்தர்களுடைய உக்தியைத் தேடிப்போவது ந்யாய்யமாகும். அந்தரங்க ஸாக்ஷ்யம் இருக்கும் காலத்தில் அதை அநாதரித்து பஹிரங்க ஸாக்ஷ்யத்தை பலவத்தாக எடுத்துக் கொள்வது சரியாக மாட்டாது. ப்ரக்ருதத்தில், வ்யாஸர், ப்ரஹ்ம ஸூத்ரத்தைச் செய்திருப்பது போல,மஹாபாரதம் என்னும் ஒரு க்ரந்தாந்தரத்தையும் செய்திருக்கிறார். அதில்,ப்ரஹ்ம ஸூத்ர தாத்பர்ய விஷயமாக ஏற்படும் ஸந்தேஹங்களெல்லாவற்றையும் சமநம் செய்யுமளவு ஸித்தாந்த விஷயங்கள் விவரிக்கப் பட்டிருக்கின்றன. இந்த ஸாக்ஷ்யம் ஜ்வலித்துக் கொண்டிருக்கையில், இதை அநாதரித்து உதாஸீநரான வேறு ஒருவருடைய உக்திகளைக்கொண்டு ஸந்தேஹ நிர்ணயம் செய்யப் புகுவது அப்படிப் புகுமவரின் ந்யாய விஷயமான ஸாமர்த்யக் குறைவையே காண்பிக்குமன்றோ? மஹா பாரதத்தில் ஜீவேச்வர பேதம் ஸ்வாபாவிகமே என்பது வ்யக்தமாக விவரிக்கப் பட்டிருக்கிற படியால், அதே கர்த்தாவின்க்ருதியாயுள்ள ப்ரஹ்ம ஸூத்ரத்திற்கும் அதுவே தாத்பர்யமாக இருத்தல் வேண்டுமென்றே நிர்ணயம் செய்யப் படவேண்டும். இது தான் ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமியின் கண்டநம். இதை விவரிக்குமிடத்தில், கபிலருடைய ஸாங்க்ய ஸூத்ரத்தில் செய்யப்பட்டுள்ள அநுவாதம், அதன் அர்த்தம், வ்யாஸ ஸூத்ரங்களில் அந்த அர்த்தம் ஓரிடத்திலும் காணப்படாமலிருப்பது, இன்னும் இவை போன்ற மற்றை ஸம்பத்தங்களான விஷயங்களை யெல்லாம் இவர் தீர்க்கமாக நிரூபித்திருக்கிறார். மஹா பாரதத்தில் தத்வ நிர்ணயம் எப்படி எந்த ப்ரகரணத்தில் வ்யக்தமாக உபபாதிக்கப்பட்டிருக்

கின்றது என்பதையும் தல ஸ்பர்சம் ஏற்படும்படி விவரித்திருக்கிறார். இந்த விசாரமெல்லாம் அத்யந்தம் அத்புதமாகவே இருக்கின்றது.

இந்தப் புஸ்தகம் நான்கு பரிச்சேதமாகப் பிரிக்கப் பட்டிருக்கின்றது. முதல் பரிச்சேதத்தில், 'ஜகத் காரணத்தைக் குறிப்பிட்டுச் சொல்லும் வேதாந்த வாக்யங்களுக்கெல்லாம், புருஷஸூக்தம் முதலியவைகளில் ப்ரஸித்தனாயிருக்கிற புருஷ விசேஷனான நாராயணனிடத்திலேயே ஸமந்வயம் ஏற்படுகின்றது என்பது தான் ஸூத்ரகாரருடைய ஸித்தாந்தம்; இது, சாரீரக மீமாம்ஸையின் முதல் அத்யாயமாகிற ஸமந்வயாத்யாயத்தில் தென்படும் ப்ரத்யபிஜ்ஞாபக லிங்கங்களினால் நன்கு விளங்குகின்றது' என்றும், இரண்டாவது பரிச்சேதத்தில், 'ப்ரஹ்ம வித்யா நிஷ்டர்களெல்லாரும், சரம சரீரத்திலிருந்து உத்க்ராந்தியை அடைந்த பிறகு அர்ச்சிராதி மார்க்கத்தாலே உயரப்போய் லோக விசேஷத்தில் திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனாக இருக்கும் நாராயணனை அடைந்தவர்களாய் பரமாத்ம யாதாத்ம்யாநுபவ ரூபமான எல்லையற்ற ஆநந்தத்தை அநுபவித்துக் கொண்டு பிறகு ஒருபொழுதும் ஸம்ஸரிக்காமலே இருக்கிறார்கள்; இது தான் மோக்ஷமென்று சொல்லப்படுகின்றது என்பதுதான் ஸூத்ர காரருடைய ஸித்தாந்தம்; இது, நாலாவது அத்யாயமாகிற பலாத்யாயத்தின் உத்க்ராந்தி பாதம் முதலான மூன்று பாதங்களுடைய ஸூத்ராக்ஷரங்களையும் அவைகளிலிருந்து ஸ்வரஸமாகக் கிடைக்கக்கூடிய அர்த்தத்தையும் கவனித்தால் நன்குவிளங்கும்' என்றும், மூன்றாவது பரிச்சேதத்தில், 'கீழ் இரண்டு பரிச்சேதங்களில் ஸூத்ர காரருடைய ஸித்தாந்தமென்று ஸாதிக்கப்பட்ட விஷயங்களே அந்த ஸூத்ர காரராற் செய்யப்பட்டுள்ள மஹாபாரதமென்னும் க்ரந்தத்தில் மோக்ஷ தர்ம பர்வாவிலும் நாராயணீயத்திலும் ஸ்புடமாக ப்ரதிபாதிக்கப்படுகின்றது' என்றும், நான்காவது பரிச்சேதத்தில் 'இவ்விதம் ப்ரஹ்ம ஸூத்ரங்களின் அக்ஷர ஸ்வாரஸ்யத்தையும் அந்த ஸூத்ர காரராற் செய்யப்பட்ட மஹா பாரத வாக்யங்களில் தென்படும் ஸம்வாதத்தையும் பார்க்கும்பொழுது, ஸகல ப்ரஹ்ம வித்யா நிஷ்டர்களுக்கும் இந்தச் சரீரத்தை விட்டு லோகாந்தரம் போன பிறகே மோக்ஷம் கிடைக்கின்றது என்பது ஸூத்ர காரருடைய ஸித்தாந்தம் என்று ஸித்திக்கிறபடியால், உதாஸீந புருஷர்களின் அநுவாதத்தை ஆதாரமாகக் கொண்டு ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு வேறு விதமாக தாத்பர்யம் கல்பிப்பது அயுக்தம்' என்றும் நிரூபிக்கப் படுகின்றது.

நமது ஸித்தாந்தத்திற்கு ப்ரஹ்ம ஸூத்ரங்களே முக்யமான ஆதாரமாகையால் அவைகளின் உண்மையான தாத்பர்யத்தை மற்றவர்களால் கலுஷிதமாக

வொட்டாமல் நாம் பாது காத்து வரவேண்டியது அவச்யம். அப்படி அதைத் பாது காத்து வருவதற்கு ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமியைப் போன்ற மஹாங்களே தகுந்த அதிகாரிகள். நிஷ்க்ருஷ்டமான சாஸ்த்ர ஜ்ஞாநமும் ருஜுவான பகவப் பக்தியும் ஸ்ரீ தேசிகாசார்யரிடம் குடிகொண்டிருக்கின்றன. தத்வார்த்தத்தை உள்ளபடி ஜகத்திற்கு உபதேசிக்க வேண்டும் என்னும் அபிநிவேசமும் அவரிடம் பூர்ணமாக இருக்கின்றது. ஆனால், இம்மாதிரியாக க்ரந்தங்களை எழுதி அவைகளை ப்ர்சாரம் அடையும்படி செய்வதற்குப் போதுமான த்ரவ்ய ஸம்பத் அவரிடம் இல்லையாதலால், ஆஸ்திகர்களாயுள்ள சக்தர்களெல்லாரும் இந்த விஷயத்தில் கொஞ்சம் ஸஹாயம் புரிவார்களேயானால், உத்திஷ்டமான வ்யாபாரம் த்ருப்திகரமாக நிறைவேறும் என்பதில் ஆக்ஷேபமில்லை. இதை அறிந்துள்ள சில ப்ரபுக்கள் ஏற்கெனவே உதாரமாக உதவி புரிந்திருக்கிறார்களென்று நாம் அறிகின்றோம். அம்மாதிரியான ப்ரபுக்களின் உதவியைக் காட்டிலும், மிதமான சக்தியை உடைய ஆஸ்திக ஜநங்களிடமிருந்து புஸ்தக விக்ரயத்தால் கிடைக்கும் த்ரவ்ய ஸஹாயம் பல ப்ரகாரங்களில் சிறந்ததானதால், விசிஷ்டாத்வைத விச்வாஸியான ஒவ்வொருவரும் இப் புஸ்தகத்தை க்ரயத்துக்குப் பெற்றுக்கொண்டு அதனால் தம்மையும் ஸ்ரீஸ்வாமியையும் க்ருதார்த்தர்களாகச் செய்து கொள்வார்களென்று நாம் நம்புகிறோம். காருணிகனான பகவானால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள சாஸ்த்ரத்தில் நாம் செய்யும் விச்வாஸம் உண்மையாக இருக்கும் பக்ஷத்தில், இந்த க்ரந்தத்தின் ஒரு ப்ரதியை க்ரயம் கொடுத்து வாங்குவதைப் பெரியதொரு அஸஹ்யமான பாரமாக நாம் எண்ணமாட்டோம் என்பது திண்ணம். ஸ்ரீ தேசிகாசார்ய ஸ்வாமி இப்பொழுது ஸூத்ர தாத்பர்யத்தை நிர்ணயம் செய்திருப்பது போல, உபநிஷத்துக்களின் தாத்பர்யத்தை நிர்ணயிப்பதாக வேறு ஒரு க்ரந்தத்தையும் எழுதி வருகிறார். அதை அச்சுப்பதிப்பித்துப் புஸ்தக ரூபமாக வெளியிடுவதற்கும் இந்தப் புஸ்தகத்தின் விக்ரயத்தால் கிடைக்கும் த்ரவ்யம் மிக உபகாரகமாக இருக்கும்.

இந்தப் புஸ்த்தகத்தின் விலை ரூ 4-0-0. இதை அபேக்ஷிப்பவர்கள், ஸ்ரீ உப. மஹாமஹோபாத்யாயர் கபிஸ்தலம் தேசிகாசார்யர், திருப்பதி, சித்தூர் ஜில்லா என்னும் விலாஸத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

* * * *

விவாஹச் சீர்திருத்த மசோதாவின் ஸ்திதி

“தேவோऽயஃ ஸர்வஸ்ருஷ்டிஸ்திதிஸம்ஹாரக: ஸர்வஶக்திர் வ்யாபீ । விசித்ரசேஷ்டிதோ ஜ்ஞாதும் ந ஶக்யதே தஸ்ய ஸங்கல்ப: ॥” ஸர்வ வ்யாபியாயும் ஸர்வ சக்தனுயும் விசித்ர ஸ்ருஷ்டி ஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்கிறவனுயுமிருக்கும் ஸர்வேச்வரனுடைய விசேஷ்டிதங்கள் அத்யாச்சர்யங்கள். அவனுடைய ஸங்கல்பத்தை யார் தான் அறிய சக்தராவார்? நிச்சயம் நடைபெறுமென்று நம்மால் எதிர்பார்க்கப்படும் கார்யம் நடைபெருமல் நின்று விடுவதையும், ஒருகாலும் நடைபெறமாட்டாதென்று நாம் நினைத்திருக்கும் கார்யம் நடைபெற்று விடுவதையும் நாம் அடிக்கடி காண்கிறேமன்றே? “தைவம் தைவாத் ப்ரபலம்” என்கிறபடி கார்யங்களின் நிஷ்பத்தி அநிஷ்பத்திகளில் தைவத்திற்கும் ஒரு அதிகாரமுண்டு. அந்தத் தைவத்தின் ஸங்கல்பம் எவ்வழியில் ப்ரவஹிக்கின்றது என்பது நமக்கு ஸர்வதா அகோசரம்! அந்தத் தைவத்தின் ஸங்கல்பமின்றிக்கே நாம் கார்யங்களை ஸாதித்துக்கொள்ளக் கூடும் என்று நினைப்பதும் அஜ்ஞாந விஜ்ரும்பிதமே.

நமது தேசத்தில் தேசோத்தாரகர்களென்று சொல்லிக் கொண்டு நமது தர்மத்திற்குப் பெருத்த ஹாநியை விளைவித்து வரும் சில ப்ராந்தர்களின் தூண்டுதலின் பேரில், ‘இந்தியன் லெஜிஸ்லெடிவ் அஸெம்ப்ளி’ என்று வ்யவஹரிக்கப்படும் பெரிய சட்ட நிர்மாண ஸபையார், சென்ற புரட்டாசி மாஸத்தில், பாலர்களின் விவாஹ வயஸ் விஷயமாகச் சில நிர்பந்தங்களை ஒரு சட்டமாக ஏற்படுத்தினர் என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அந்த நிர்பந்தங்களை ராஜப்ரதி நிதியும் ஆமோதித்து நிகழும் பங்குனி மாஸம் 19உ (ஏப்ரில்மீ 1உ) முதலாக அந்தச் சட்டம் அநுஷ்டாநத்துக்குக் கொண்டு வரப்படு மென்றும் அதை மீறி நடப்பவர்கள் ராஜ தண்டனைக்கு உள்ளாவார்க ளென்றும் நாடு முழுவதும் அறியும்படி உத்கோஷித்திருக்கிருர். குறிப்பிட்ட அந்தத் தேதிக்கு இன்னும் ஐந்தாறு தினங்கள் மாத்ரம் இருக்கின்றன. அநேக ஸாது ஜனங்கள், சாஸ்த்ர விதிகளுக்கு விருத்தமான கார்யத்தைச் செய்வதிலிருந்து பயந்தவர்களாய், தாத்காலிக ஸம்ரக்ஷணத்தைச் செய்து கொள்வோமென்னும் எண்ணங்கொண்டு விவாஹார்ஹ வயஸ்ஸை அடையாமலிருக்கும் பாலர்களுக்குக் கூட விவாஹத்தைச் செய்து வருகிருர்கள். மற்றும் பலர், அநுரூபமான வதூவார்களைத் தேடியும் அவர்களைப் பெருதவர்களாய், ‘மஹத்தான ஆபத் ஸமீபித்து விட்டதே; நாம் என்ன செய்யப் போகிறேம்?’ என்று அளவற்ற சோகத்திற்குப் பாத்ரமாக இருக்கிருர்கள். இந்த ஆபத்துக்கு முக்ய காரணமாக இருக்கும் தேசோத்தாரகர்களும், தமது அபீஷ்டம் சீக்ரத்தில் நிறைவேறப்

போகிறதென்று மிகவும் ஸந்துஷ்டர்களாய், இனி இந்தச் சட்டத்தை மீறி நடப்பவர்களைத் தண்டனைக்கு உள்ளாக்குவதில் தாம் எவ்விதத்தில் ராஜாங்கத்தாருக்கு உதவியைச் செய்யக்கூடுமென்று பலவித உபாயங்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஸந்தர்ப்பத்தில் ஸாது ஜனங்களின் ப்ரார்த்தனையின் பலமாகவோ, இல்லாவிட்டால் அத்யந்தம் ஆச்சர்யாவஹங்களான ஸம்பவங்களின் கர்த்தாவாயிருக்கும் ஸ்ரீபகவானுடைய ஸங்கல்பத்தின் பலமாகவோ, அந்தச்சட்டத்திற்குக் கொஞ்சம் உபரோதம் நேரப்போகின்றதென்று நாம் கேள்விப்படுகின்றோம். ஆனால் வஸ்து ஸ்திதி இன்னும் வ்யக்தமாகத் தெரியவில்லை.

ஸ்வல்ப தினங்களுக்குமுன், சட்ட நிர்மாண ஸபையாருள் ஒருவராயிருக்கும் ஸ்ரீ. எம். கே. ஆசார்யர் என்பவர், ராஜ ப்ரதி நிதியையும் அவருக்கு அடுத்த அதிகாரத்தை வஹிக்கும் மந்த்ரி ஒருவரையும் ஸந்தித்ததாகவும், அப்பொழுது அந்த அதிகாரிகள், 'ஸநாதந தர்மத்தில் விச்வாஸமுள்ள பல ஆஸ்திகர்களுக்கு இந்தச் சட்டம் மிக்க ஸங்கடத்தை ஜநிப்பிக்கின்றது என்பதை நாம் அறிகிறோம். அப்படி அவர்களுக்கு ஸங்கடம் ஜநிப்பது உண்மையானால், அதைப் பற்றி நாம் வருந்துகிறோம்' என்று அவரிடம் சொன்னதாகவும் ஒரு வார்த்தை வெளிவந்திருக்கின்றது. இந்த வார்த்தையை ஆதாரமாக வைத்துக்கொண்டு எம். கே. ஆசார்யர் என்பவர், அடுத்து வரும் ஸபையாரின் ஸங்கத்தில் வயஸ்ஸின் எல்லையைக்குறைக்க வேண்டுமென்று ஸபையார்களைக் கேட்டுக் கொள்ளப்போகிறாராம். ராஜாங்கத்தைச் சேர்ந்த ஸபையாரெல்லாரும் அதற்கு இணங்குவாரேயானால், அது ஸாதிதமாகிவிடும் என்பதில் ஆக்ஷேபமில்லை. இதன் உண்மை இன்னும் இரண்டு மூன்று தினங்களுக்குள் வெளிவர வேண்டும். ஏனென்றால், ராஜங்கத்தார் இவ்விதம் அபிப்ராயப்படுவது உண்மையானால், பங்குனி மீ 19 உக்கு முன்னதாகவே, 'இப்பொழுது ஏற்பட்டிருக்கும் சட்டத்தைக் குறிப்பிட்ட தேதியில் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவரப்போகிறதில்லை' யென்று அவர்கள் ஜனங்களுக்கு ப்ரசுரம் செய்யவேண்டுவது அவச்யமன்றோ ?

ஆனால், இது ஸ்வல்ப ஆச்வாஸமே. 'மத விஷயங்களில், தர்ம சாஸ்த்ரங்களுக்கு விருத்தமாக நாங்கள் சட்டம் ஏற்படுத்த மாட்டோம்' என்று ஒரு உறுதி மொழி நமக்கு ராஜங்கத்தாரிடமிருந்து கிடைத்தாலன்றோ, பூர்ண ஆச்வாசம் என்பது நமக்கு ஜநிக்கும்? மஹம்மதியர்கள் அம்மாதிரி உறுதி மொழியையே அபேக்ஷிக்கிறார்களென்றும் அது கிடையாமலிருக்கும் வரையில் அவர்கள் சாந்தராக மாட்டார்களென்றும் நாம் அறிகிறோம். நாமும் அவர்களுடன்

சேர்ந்து அம்மாதிரியே நம்முடைய வேண்டுகோளை வெளியிடும் பக்ஷத்தில், ஒரு கால், ஸந்தர்ப்பங்கள் அநுகூலங்களாக இருக்கிறபடியால் நமது மனோரதம்பூர்த்தி அடைந்தாலும் அடையலாம். நம்முடைய த்ருப்தி அத்ருப்திகள் ராஜாங்கத் தாருக்கு அவ்யாவர்த்தகங்களானாலும் மஹம்மதியர் விஷயத்தில் அவர்கள் அவ் விதம் ஔதாஸீந்யம் வஹிக்க மாட்டார் என்பது நிச்சயம். எம். கே. ஆசார்யர் முதலியவர்கள் இந்த அம்சத்தைச் சற்று கவனித்தல் வேண்டும்.

'இதற்கு முன் தீவ்ரமாய் ஸநாதந தர்ம விச்வாஸிகளை அநாதரித்த ராஜாங்கத்தார், இப்பொழுது என்ன காரணத்தால் அப்படி அநாதரியாமல் கொஞ்சம் ஆதரிப்பது போல பாவிக்கிறார்கள்?' என்பதை விசாரிப்பதில் சில ருக்கு ஸ்வல்ப குதூஹலம் உண்டாகலாம். ஆனால், நாம், அது விஷயமாகச் சிற்சில ஹேதுக்களைக் கொண்டு ஒரு வித அநுமானத்தை மாத்ரம் செய்யக் கூடுமே தவிர அவர்களுடைய அந்தர்க்கதமான கருத்து இப்படிப்பட்டது தானென்று நிஷ்க்ருஷ்டமாகச் சொல்வதற்கு அசக்தர்களே. இப்பொழுது வடதேசத்தில் மஹாத்மா காந்தியின் உத்போதநத்தின் பேரில், கணக்கற்ற ஜநங்கள், தமக்கு ந்யாய விருத்தமாகத் தோன்றும் ராஜாங்கத்தியச் சட்டங்க ளுள் சிலவற்றை, 'அவை ந்யாய விருத்தங்களாக இருக்கிறபடியால் ஒரு காலும் ஆதரிக்கத்தக்கவையாக மாட்டா. அவைகளை மீறி நடப்பதால் ராஜ தண்டனை ஸம்பவித்தாலும் வேறு என்ன ஆபத் நேர்ந்தாலும் நாம் அவைகளிலிருந்து பயப் படமாட்டேம்' என்று உறுதிகொண்டு, மீறி நடந்து வருகிறார்கள் என்பது எல்லா ருக்கும் தெரிந்த விஷயம். அநேக க்ராம அதிகாரிகளும், இந்த ராஜாங்கத்திய ஸம்பந்தம் தமக்கு வேண்டுவதில்லையென்று தம் தம் அதிகாரங்களை ராஜீனமா கொடுத்து வருகிறார்களாம். தென்தேசத்திலும் இன்னும் வேறு ஸ்தலங்களி லும் ஜநங்கள் இம்மாதிரியே நடப்பதற்கு உத்யுக்தராகி வருகிறார்களாம். இவர்களை யெல்லாம் ராஜ புருஷர்களைக் கொண்டு சிறையில் போடுவது ராஜாங்கத்தாருக்கு ஸுலபமாக ஸாதிக்கக்கூடியதானாலும், பலவிடங்களில் கணக்கற்ற ஜநங்கள் இவ்விதம் உபத்ரவிக்க ப்ரவ்ருத்தித்தால், அது ராஜாங்கத் துக்குக் கொஞ்சம் ச்ரமத்தை உண்டு பண்ணும் என்பதில் ஆக்ஷேபமில்லை. தவிரவும், இப்பொழுது நமது தேசத்திற்கு ராஜப்ரதி நிதியாக இருப்பவர் அபந்யாயத்திலிருந்து பயந்தவர்; இந்தத் தேசத்திய ஜனங்களுக்குத் தம்மால் இயன்றவரையில் அநுகூலத்தைச் செய்யவேண்டும் என்பதில் நோக்கமுள்ளவர். தம்மால் உத்தேசிக்கப் பட்டுள்ள அநுகூலாம்சங்களை ஸாதித்துக் கொடுப்பதற்கு இம்மாதிரி இந்திய ஜநங்களை துஷ்ட அதுஷ்ட வாசியின்றிக்கே சிறைச்சாலையில் அடைப்பது மிகவும் பாதகமாகுமென்று

258

அவர் நினைத்திருப்பதால், 'இப்பொழுது இம்மாதிரியான ஆதங்கத்தைக் காந்தி ஜநிப்பித்து விட்டாரே? என்று அவர் மஹத்தான சோகத்தை அடைந்திருக்கிறார் என்றும் நாம் அறிகிறோம். இந்த ஸந்தர்ப்பத்தில் ஸநாதந தர்ம விச்வாஸிகளையும் விரோதித்துக் கொள்வது அத்யந்தம் அநுசிதமாகு மாகையால், அவரும் அவருக்கு உள்பட்டிருக்கும் அதிகாரிகளும் நம்மை ஸாந்த்வப்படுத்துவதில் ப்ரயத்நப்படுகிறார்களென்று நாம் நினைக்கிறோம். எது காரணமாக இருந்த போதிலும், ராஜாங்கத்தார் நமது தர்ம சாஸ்த்ரத்தை ஆதரிக்கிறார்கள் என்பது உண்மையானால், அது நமக்குப் போதுமானது. எதற்கும் பகவத் ஸங்கல்பமே ப்ரமாணம்.

*　　　　*　　　　*　　　　*

ஸபையின் வார்ஷிக மஹாஸங்கம்

நமது ஸபையின் உபாத்யக்ஷர்களுள் ஒருவரான ஸ்ரீ உப. டி. கோதண்டராம ஐயங்கார் ஸ்வாமியின் ஸஹாயத்தின் பேரில், இவ்வர்ஷத்திய மஹா ஸங்கம், நிகழும் பங்குனி மீ 24, 25-உ களில் தஞ்ஜாவூருக்கு ஸமீபத்திலிருக்கும் திருக்கண்டியூரில் நடைபெறுகின்றதென்று நாம் அறிகிறோம். யதா பூர்வம் பண்டித உபந்யாஸங்களும் பண்டித ஸம்மாநமும் நடைபெறும். ஆஸ்திகர்களாயுள்ள நமது ஸுஹ்ருத்துக்களெல்லாரும் அப்பொழுது அவ்விடத்தில் ஸந்நிஹிதர்களாய் இருந்து ஸங்கத்தை த்ருப்திகாமாக நடத்தி வைப்பார்களென்று நாம் நம்புகிறோம்.

"அநேந ஜீவேநாத்மநாநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி" (சாந்தோக்யம்)

"ப்ருதகாத்மாநம் ப்ரேரிதாரம் ச மத்வா ஜுஷ்டஸ்ததஸ்தேநாம்ருதத்வமேதி" "போக்தா போக்யம் ப்ரேரிதாரம் ச மத்வா ஸர்வம் ப்ரோக்தம் த்ரிவிதம் ப்ரஹ்மமேதத்" (ச்வேதாச்வதரோபநிஷத்)

"நித்யோ நித்யாநாம் சேதநச்சேதநாநாமேகோ பஹூநாம் யோ விததாதி காமாந்" [கடோபநிஷத்)

"ப்ரதாநக்ஷேத்ரஜ்ஞபதிர்குணேஶ:"

"இப்படி நிர்விகாரனான சேதநனாகவும் விகாராஸ்பதமான அசேதநமாகவும் அவன் ஆகையிலும், அவன் தனக்கு இயற்கையாயுள்ள நிர்விகாரத்வ லக்ஷணத்தை விடாமலே இருந்தான்".

"இந்த ஜீவனுக்குள் ஆத்மாவாக அநுப்ரவேசித்து தேவாதி விசித்ர ஸ்ருஷ்டியையும் அவைகளுக்குப் பெயர்களையும் செய்வேன்" "ஸம்ஸாரமாகிற சக்ரத்தில் தன்னைச் சுழற்றுகிறவன் பரமாத்மா வென்றும், அப்படிச் சுழற்றப்படுகிறவன் அவனைக் காட்டிலும் வேறுபட்டவனென்றும் உணர்ந்து, அந்த உணர்ச்சியால் ப்ரீதனான பரமாத்மாவுக்கு ப்ரீதி பாத்ரனாய், ஜீவன், முக்தியை அடைகிறான்".

"அநுபவிக்கிறவன் அநுபவிக்கப்படுவது ஏவுகிறவன் இவர்களை உள்ளபடி அறிந்துகொண்டு" "இந்த மூன்று வகைப்பட்ட வஸ்துக்களெல்லாம் என்னால் உனக்குச் சொல்லப்பட்டன".

"அநேக நித்யர்களான சேதநர்களுடைய இஷ்டங்களை, எந்த நித்ய சேதநன் பூர்த்திசெய்து வைக்கிறானோ",

---

"ஸத்யம் சாந்ருதம் ச" என்னும் வாக்யம் ப்ரஹ்மம் அநுப்ரவேசித்திருக்கையிலும் அது தோஷங்களால் அஸ்ப்ருஷ்டமாகவே இருக்கின்றது என்பதை வ்யக்தமாகச் சொல்லுகின்றது.

"ததஃ அம்ருதத்வமேதி" ஜீவாத்மாவும் பரமாத்மாவும் வெவ்வேறு என்பதை அறிவதால் ப்ரமம் நீங்கி மோக்ஷம் கிடைக்கின்றது என்பதை இந்த வாக்யம் சொல்லுகின்றது.

'போக்தா' என்னும் சப்தம் 'போக்தாரம்' என்னும் இரண்டாம் வேற்றுமை அர்த்தமுள்ளது.

"ஜ்ஞாஜ்ஞௌ த்வாவஜாவீஶநீஶௌ" (ஶ்வேதாஶ்வதரோபநிஷத்)

இத்யாதி ஶ்ருதிஶதை:, ததுபப்ரும்ஹணை:

"ஜகத்ஸர்வம் ஶரீரம் தே ஸ்தைர்யம் தே வஸுதாதலம்।"

"யத்கிஞ்சித் ஸ்ருஜ்யதே யேந ஸத்த்வஜாதேந வை த்விஜ। தஸ்ய ஸ்ருஜ்யஸ்ய ஸம்பூதௌ தத்ஸர்வம் வை ஹரேஸ்தநு:॥" (விஷ்ணுபுராணே)

"ப்ரக்ருதி தத்வத்திற்கும் ஜீவதத்வத்திற்கும் பதியாகவும் குணங்களுக்கு ஈசனாகவுமிருக்கும்",

"இரண்டு ஆத்மாக்களும் பிறப்பற்றவர்கள்; ஆனால் ஒருவன் அஸங்குசிதமான ஜ்ஞாந முடையவன், மற்றொருவனுடைய ஜ்ஞாநம் ஸங்குசிதம்; ஒருவன் நியமிக்கிறவன், மற்றொருவன் நியமிக்கப்படுகிறவன்."

இவை முதலிய கணக்கற்ற ச்ருதிவாக்யங்களாலும், இவைகளுக்கு உபப்ருஹ்மணங்களாயுள்ள

"ஜகத் முழுவதும் உன்னுடைய சரீரம்; பூமியின் ஸ்திரத்தன்மை உன் அதீநம்".

"எந்த எந்த வஸ்து ஸ்ருஷ்டிக்கப்படுகின்றதோ, அந்தந்த வஸ்துவுக்கெல்லாம் பகவானே காரணம்; அப்படி ஸ்ருஷ்டிக்கப்படும் வஸ்துவெல்லாம் பகவானுடைய சரீரம்,"

'நித்யோ நித்யாநாம்' இந்த ச்ருதி ஆத்ம வஸ்துக்கள் நித்யங்கள் என்பதையும், அவை கணக்கற்றவை யென்பதையும் சொல்லுகின்றது.

ஈஶாநீஶௌ—ஈசன் அநீசன்; அதாவது நியமிக்கிறவன், நியமிக்கப்படுகிறவன். இவ்விடத்தில் 'ஈஶாநீஶௌ' என்று இருக்கவேண்டிய சப்தம் 'ஈஶநீஶௌ' என்று இருப்பது சாந்தஸம்.

வஸுதாதலம் தே ஸ்தைர்யம்—பூதலமானது உன்னுடைய ஸ்தைர்யமே. அதாவது, 'பூமியின் ஸ்திர ஸ்வபாவமானது உன் ஸங்கல்பாதீநம்' என்று சொன்னதாயிற்று. இது ஒரு நிதர்சநமாகச் சொல்லப்பட்டது. 'ஸகல ப்ரபஞ்சத்தின் உத்பத்தி ஸ்திதி ப்ரவ்ருத்திகளெல்லாம் பகவததீநம்' என்பது இதன் கருத்து.

அஹமாத்மா ஸம்ஸ்தித:—பூதேஷு ஸம்ஸ்தித: இத்யர்த்த:. 'ஆத்மா எப்படி சரீரத்துக்கு நியமேந ஆதாரமாயும் நியந்தாவாயும் சேஷியாயும் இருக்கிறதோ, அப்படியே நானும் ஸர்வ பூதங்களுக்குள்ளும் இருந்து கொண்டு ஆதாரமாயும் சேஷியாயும் இருப்பதுடன் ப்ரவர்த்தந ரூபமான நியமநத்தையும் செய்கிறேன்' என்பது குறிப்பு.

"𑌅𑌹𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌗𑍁𑌡𑌾𑌕𑍇𑌶 𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌶𑌯𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।" "𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌚𑌾𑌹𑌂 𑌹𑍃𑌦𑌿 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑍋 𑌮𑌤𑍍𑌤𑌃 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍍𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑌪𑍋𑌹𑌨𑌂 𑌚 ।" (𑌭𑌗𑌵𑌦𑍍𑌗𑍀𑌤𑌾)

𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑍇𑌦𑌵𑌿𑌦𑌗𑍍𑌰𑍇𑌸𑌰𑌵𑌾𑌲𑍍𑌮𑍀𑌕𑌿𑌪𑌰𑌾𑌶𑌰𑌦𑍍𑌵𑍈𑌪𑌾𑌯𑌨𑌵𑌚𑍋𑌭𑌿𑌶𑍍𑌚

"ஹே அர்ஜுந! நான் எல்லா பூதங்களுக்கும் ஆத்மா; எல்லா பூதங்களுடைய ஹ்ருதயத்திலும் நான் இருக்கிறேன்,"

"எல்லாருடைய ஹ்ருதயத்திலும் நான் ஆத்மாவாக இருக்கிறேன்; என்னிடத்திலிருந்தே எல்லா ஜீவன்களுக்கும் ஜ்ஞாநம் முதலானவை ஏற்படுகின்றன," இவை முதலான, வேதத்தின் அர்த்த மறிந்தவர்களுள் அக்ரேஸரர்களாக இருக்கும் வால்மீகி பராசரர்

𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯𑌚𑌾𑌹𑌮𑍍—இந்த வாக்யத்துக்கும் கீழ்ச் சொல்லிய கருத்துதான். '𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃' என்பதற்கு '𑌆𑌤𑍍𑌮𑌤𑌯𑌾 𑌸𑌨𑍍𑌨𑌿𑌵𑌿𑌷𑍍𑌟𑌃' என்பது பொருள். அதாவது 'கேவலம் ஆகாசம் போல் ப்ரவேசித்திருக்கவில்லை; ஆனால், ஆத்மாவாக ப்ரவேசித்து என்னுடைய ஸங்கல்பத்தாலேயே எல்லாவற்றையும் நியமநம் செய்துகொண்டு வருகிறேன்' என்று சொன்னதாயிற்று. '𑌸𑍍𑌮𑍃𑌤𑌿' என்பதற்கு 'நினைவு' என்பது அர்த்தம். முன் அநுபவிக்கப்பட்ட விஷய ஸம்பந்தமாக பின் அதன் ஜ்ஞாநம் ப்ரத்யக்ஷமின்றிக்கே கேவலம் அநுபவ ஸம்ஸ்காரத்தால் மாத்ரம் உண்டாகும் பக்ஷத்தில், அந்த ஜ்ஞாநத்தை 'ஸ்ம்ருதி' என்று சொல்வார்கள். '𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍍' என்றால் 'அறிவு'; இவ்விடத்தில் இந்த்ரியம் முதலானவைகளால் ஏற்படும் வஸ்து நிச்சயரூபமான ஜ்ஞாநமே சொல்லப்படுகின்றது. '𑌅𑌪𑍋𑌹𑌨𑌮𑍍' என்பதற்கு 'நிவ்ருத்தி' என்பது பொருள். இவ்விடத்தில் அது ஜ்ஞாந நிவ்ருத்தியைக் குறிக்கின்றது. இந்தப் பதத்திற்கு, தர்க்கம் செய்து அதனால் ஏற்படும் ஜ்ஞாநத்தையும் பொருளாகக் கொள்ளலாம். ஸர்வமும் பகவானுடைய நியமநத்தாலேயே ஏற்படுகின்றது என்பது கருத்து.

𑌵𑌚𑍋𑌭𑌿𑌶𑍍𑌚—வார்த்தைகளாலும். கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ச்ருதிகளாலும் இந்த மஹர்ஷி வாக்யங்களாலும், 'ப்ரஹ்மம் எல்லாவற்றிற்கும் ஆத்மா' 'எல்லாம் ப்ரஹ்மத்திற்குச் சரீரம்' என்பது அறியப்படுகின்றது. '𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿 𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌶𑌤𑍈𑌃 𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌚𑍋𑌭𑌿𑌶𑍍𑌚 𑌅𑌵𑌗𑌮𑍍𑌯𑌤𑍇' என்பது அந்வயம். இது '𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇' என்பதற்கு ஹேது. ச்ருதிகளும் மஹர்ஷி வாக்யங்களும் இப்படிச் சொல்லுகிறபடியால், 'ஸாமாநாதிகரண்யம் சொல்லப்படும் இடங்களெல்லாவற்றிலும் ஸமஸ்த சேதநா சேதநங்களையும் ப்ரகாரமாகவுடைய ப்ரஹ்மமே சொல்லப்படுகின்றது' என்பது வ்யக்தமாகின்றது.

ஸ்ய ப்ரஹ்மண: ஸர்வாத்மத்வாபிதாநாத், சிதசிதாத்மகஸ்ய வஸ்துந: தச்சரீரத்வாபிதாநாத், சரீரஸ்ய சரீரிணம் ப்ரதி ப்ரகாரதயைவ தத்த்வாவஸ்திதத்வாத் சரீரசரீரிணோஶ்ச தர்மபேதேऽபி தயோரஸம்

வ்யாஸர் இவர்களுடைய ஸூக்திகளாலும், 'பரப்ரஹ்மம் எல்லாவற்றிற்கும் ஆத்மா; ஸகல சேதநாசேதந ரூபங்களான வஸ்துக்களும் பரப்ரஹ்மத்தின் சரீரம்' என்று நாம் அறிகிறோம். சரீரம் ஆத்மாவை விட்டுத் தனித்து நிற்காததாலால் அது ஆத்மாவுக்கு ப்ரகாரமே என்பதும், அந்தக் காரணத்தால் அந்தச் சரீரத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் அதற்குள் இருக்கும் ஆத்மாவைக் குறிக்கின்றனவென்பதும் வ்யக்தம். சரீரத்திற்கும் அதற்குள் இருக்கும் ஆத்மாவுக்கும் தர்மபேதம் இருக்கையிலும், ஒன்றின் லக்ஷணம் மற்றொன்றுக்கு நேராமல் அவை அஸங்கீர்ணங்களாகவும் இருக்கின்றன. இப்படியெல்லாம் வஸ்து ஸ்திதி இருக்கிறபடியால், 'ப்ரஹ்மம் ஸகலத்தையும் சரீரமாக உடைத்தாயிருக்கின்றது' என்று ப்ரஹ்மத்தின் பெருமையைச் சொல்லும் முக்ய வ்ருத்தங்களாக இருக்கும் ஸாமாநாதிகரண்யங்க

'இந்த வாக்யங்களெல்லாம் ப்ரஹ்மத்திற்கும் மற்றவைகளுக்குமுள்ள ஆத்ம சரீர பாவத்தை மாத்ரமே சொல்லுகின்றன. அதனால் ஸாமாநாதிகரண்யம் சொல்லக் கூடுமோ? சரீரத்தைச் சொல்லும் சப்தத்தால் ஆத்மாவைக் குறிக்கக் கூடுமோ?' என்னும் சங்கையை 'சரீரஸ்ய சரீரிணம் ப்ரதி' இத்யாதியான வாக்யத்தால் பரிஹரிக்கிறார். ப்ரகாரமாகிற சரீரத்தைச் சொல்லும் சப்தங்களெல்லாம் ப்ரகாரியாகிற ஆத்மாவைக் குறிக்கக்கூடுமாதலால் ஸாமாநாதிகரண்யம் உபபந்நம் என்பது ஸமாதாநம்.

வைபவம் ப்ரதிபாதயதி:—இப்படி ப்ரஹ்மமும் மற்றை வஸ்துக்களும் ஆத்மாவாகவும் சரீரமாகவும் கலந்து நிற்கையிலும், மற்றை வஸ்துக்களின் லக்ஷணம் ப்ரஹ்மத்திற்கு நேர்வதில்லை என்பதே ப்ரஹ்மத்தின் பெருமை. அந்தப் பெருமையை விளக்குகின்றது இந்த ஸாமாநாதிகரண்யம்.

தர்மபேதேऽபி— ப்ரஹ்மத்திற்கும் மற்றை வஸ்துக்களுக்கும் வெவ்வேறு தர்மங்கள் இருக்கையிலும், அவை இரண்டும் அஸங்கீர்ணங்களாகவே நிற்கின்றன. 'லோகத்தில் வெவ்வேறு தர்மங்களை உடைய பொருள்களுக்கே பரஸ்பர ஸம்பந்தத்தால் ஸாங்கர்யம் உண்டாவதை நாம் பார்க்கிறோம். ஒரு கட்டையை உப்பளத்தில் ஸ்வல்ப காலம் ஸம்பந்தப்படும்படி வைத்தால், அந்தக் கட்டை உப்புப் பூத்து விடுகின்றது. அது போல வெவ்வேறு தர்மங்களையுடைய ப்ரஹ்மத்திற்கும் மற்றை வஸ்துக்களுக்கும் பரஸ்பர ஸம்பர்க்கத்தால் ஏன் லக்ஷண ஸாங்கர்யம் நேரவில்லை?' என்று கேட்டால், அப்படி தர்ம பேதம் இருக்கையிலும் அது நேரவில்லை என்பதே ப்ரஹ்மத்தின் பெருமை என்பது இதன் தாத்பர்யம்.

𑌜𑌗𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌶𑌰𑍀𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍇𑌤𑌿 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍋 𑌵𑍈𑌭𑌵𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌯𑌦𑍍𑌭𑌿𑌃 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌾𑌦𑌿𑌭𑌿𑌶𑍍𑌚 𑌵𑍍𑌯𑌪𑌦𑍇𑌶𑍈𑌃 𑌸𑌰𑍍𑌵𑌚𑍇𑌤𑌨𑌾𑌚𑍇𑌤𑌨𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑍈𑌵𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।

𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌹𑌿 𑌦𑍍𑌵𑌯𑍋𑌃 𑌪𑌦𑌯𑍋𑌃 𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌦𑍍𑌵𑌯𑌮𑍁𑌖𑍇𑌨 𑌏𑌕𑌾𑌰𑍍𑌥𑌨𑌿𑌷𑍍𑌠𑌤𑍍𑌵𑌮𑍍 । 𑌤𑌸𑍍𑌯 𑌚 𑌵𑍇𑌦𑌾𑌨𑍍𑌤𑌵𑌾𑌕𑍍𑌯𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑌚𑍁𑌰𑌤𑌾 । 𑌤𑌥𑌾𑌹𑌿, ‘𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿’ 𑌇𑌤𑌿 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇, ‘𑌤𑌤𑍍’ 𑌇𑌤𑍍𑌯𑌨𑍇𑌨 𑌜𑌗𑌤𑍍𑌕𑌾𑌰𑌣𑌂 𑌸𑌰𑍍𑌵𑌕𑌲𑍍𑌯𑌾𑌣𑌗𑍁𑌣𑌾𑌕𑌰𑌂 𑌨𑌿𑌰𑌵𑌦𑍍𑌯𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇; ‘𑌤𑍍𑌵𑌮𑍍’ 𑌇𑌤𑌿 𑌚 𑌤𑌤𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌵𑌰𑍍𑌤𑌿𑌨𑌾 𑌪𑌦𑍇𑌨 𑌜𑍀𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑍍𑌯𑌾𑌮𑌿𑌰𑍂𑌪𑌿 𑌤𑌚𑍍𑌛𑌰𑍀𑌰𑌂 𑌤𑌦𑌾𑌤𑍍𑌮𑌤𑌯𑌾𑌵𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌂 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌭𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 । 𑌇𑌤𑌰𑍇𑌷𑍁 𑌪𑌕𑍍𑌷𑍇𑌷𑍁 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌹𑌾𑌨𑌿𑌃 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑌃 𑌸𑌦𑍋𑌷𑌤𑌾 𑌚 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ।

ளெல்லாம் ஸமஸ்த சேதநா சேதந வஸ்துக்களையும் ப்ரகாரமாக உடைத்தாயிருக்கும் ப்ரஹ்மத்தையே சொல்லுகின்றன.

இரண்டு பதங்கள் இரண்டு ப்ரகாரங்களின் வழியாக ஒரே அர்த்தத்தைக் குறிப்ப தன்றோ ஸாமாநாதிகரண்ய மென்று சொல்லப்படுகின்றது? அப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்யம் நமது ஸித்தாந்தத்தில் மாத்ரம் முக்யமாக இருக்கும். இதை ‘𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌮𑌸𑌿’ (நீ அதுவாக இருக்கிறாய்) என்னும் வாக்யமே விளக்கும். இந்த வாக்யத்தில் ‘𑌤𑌤𑍍’ (அது) என்னும் பதம், ஜகத்திற்கெல்லாம் காரணமாகவும் ஸகல கல்யாண குணங்களுக்கும் இருப்பிடமாகவும் எவ்வித தோஷமு மற்றதாகவும் இருக்கும் ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது; அந்த ‘𑌤𑌤𑍍’ என்னும் சப்தத்துடன் ஸமாநாதிகரணமாகச் சொல்லப்பட்டுள்ள ‘𑌤𑍍𑌵𑌮𑍍’ (நீ) என்னும் பதம், ஜீவனுக்கு அந்தர்யாமியாகவும் அந்த ஜீவனைச் சரீரமாக உடையதாகவும் அந்த ஜீவனுகிற சரீரத்திற்கு ஆத்மாவாகவும் அந்தச் சரீரத்தை ப்ரகாரமாக உடையதாகவும் இருக்கும் ப்ரஹ்மத்தைக் குறிக்கின்றது. மற்றை ஸித்தாந்த மொன்றிலும் இப்படிப்பட்ட ஸாமாநாதிகரண்யம் கிடைக்கமாட்டாது; ப்ரஹ்மத்திற்குத் தோஷத்துடன் கூடியிருக்கும் தன்மையும் ப்ரஸங்கிக்கும்.

𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌂 𑌹𑌿—இப்படி ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடுமோனாலும், அதற்கு முக்ய வ்ருத்தத்வம் எப்படி ஸம்பவிக்கும் என்பதை விசாரிக்கிறார். இவ்விடத்தில், ஏற்கெனவே ஸாமாநாதிகரண்யத்திற்கு “𑌭𑌿𑌨𑍍𑌨𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌶𑌬𑍍𑌦𑌾𑌨𑌾𑌮𑍇𑌕𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑌰𑍍𑌥𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌿𑌃 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌹𑌿 𑌤𑌦𑍍𑌵𑌿𑌦𑌃” [81-வது பக்கம் பார்க்க] என்று சொல்லப்பட்டிருக்கும் லக்ஷணம் அநுஸந்தேயம்.

𑌤𑌥𑌾 𑌹𑌿—ஸாமாநாதிகரண்யத்தின் முக்ய வ்ருத்தத்வம் உபபாதிக்கப்படுகின்றது. இந்த உபபாதநம் 58-வது பக்கத்தில் விஸ்தாரமாகச் செய்யப்பட்டிருக்கிறபடியால் இவ்விடத்தில் அதன் ஸங்க்ரஹமே செய்யப்படுகின்றது.

𑌇𑌤𑌰𑍇𑌷𑍁 𑌪𑌕𑍍𑌷𑍇𑌷𑍁—மற்றை சாங்கர யாதவ பாஸ்கர பக்ஷங்களில். அந்தப் பக்ஷங்களில் எப்படி ஸாமாநாதிகரண்ய லக்ஷண ஹாநியும் ப்ரஹ்மத்திற்குத்

ஸர்வமுபபந்நம் பவதி । 'ப்ரஹ்மைவமேவாவஸ்திதம்' இத்யத்ர 'ஏவம்' ஸர்வாவஸ்தமேதத் ப்ரகாரதயைவ ஸ்தித்வா சேதநாசேதநாத்மக ப்ரபஞ்சம்

ஸர்வமுபபந்நம் பவதி—ஸுஸங்கதமிதி. இதன் தாத்பர்யமாவது:—ச்ருதிகளிலும் புராணங்களிலும் 'ப்ரஹ்மம் இவ்விதமாக இருக்கின்றது' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதில் 'இவ்விதம்' என்று எந்த ப்ரகாரம் நிர்த்தேசிக்கப் படுகின்றதோ அந்த ப்ரகாரத்துடன் கூடியதாகவே ஸகல அவஸ்தைகளிலும் அந்த ப்ரஹ்மம் இருக்கிறபடியால், அந்த அவஸ்தைக ளெல்லாவற்றிலும் சேதநாசேதநங்க ளடங்கியுள்ள ப்ரபஞ்சம் ஸ்தூலமாகவும் ஸூக்ஷ்மமாகவும் இருக்கின்றது என்பது ஸித்தம். அப்படி இருந்

தோஷமும் ஏற்படுகின்றன என்பதை அந்தந்தப் பக்ஷத்தைக் கண்டிக்கும் அவஸரத்தில் செய்யப்பட்டுள்ள உபபாதநத்தில் கண்டுகொள்க.

ஸர்வமுபபந்நம் பவதி—'இந்தச் சரீர சரீரி பாவமெல்லாம் ஸ்ருஷ்டிக்குப் பிறகே உபபந்நமாகும். ஸ்ருஷ்டிக்குமுன் ப்ரஹ்ம மொன்றே இருந்தபடியால் அப்பொழுது எதற்கும் ப்ரஹ்மத்திற்கும் சரீர சரீரி பாவம் சொல்வது ஸாத்யம்?' என்று செய்யக்கூடிய சங்கைக்கு ஸமாதாநம் சொல்லுகிறார். 'ஸ்ருஷ்டிக்குப் பிறகு இந்தச் சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சம் ஸ்தூலாவஸ்தையில் இருக்கின்றது; ஸ்ருஷ்டிக்கு முன் அது ஸூக்ஷ்மாவஸ்தையிலிருந்தது; இதுதான் விசேஷம். ஸ்ருஷ்டிக்கு முன் சேதநாசேதந வஸ்துக்களே இல்லை என்று சொல்வது பிசகு' என்பது தான் ஸமாதாநம். ஆகையால் எப்பொழுதும் சரீர சரீரி பாவம் சொல்லக்கூடும் என்பது தாத்பர்யம்.

'ப்ரஹ்மைவ மவஸ்திதம்' [ப்ரஹ்மம் இவ்விதம் இருக்கின்றது] என்று ச்ருதி ஸ்ம்ருதிகள் சொல்லுகின்றன. 'ஸர்வம் கல்விதம் ப்ரஹ்ம' 'ஜ்யோதீம்ஷி விஷ்ணு:' இவை முதலிய வாக்யங்கள் விவக்ஷிதங்கள். இந்த வாக்யங்களில் ப்ரஹ்மம் எவ்விதம் இருக்கின்றது என்று சொல்லப்படுகின்றதோ, அந்தந்த விதங்களைக் குறிக்கும் விசேஷணங்களை உடையதாகவே ப்ரஹ்மம் எல்லா அவஸ்தைகளிலும் இருக்கின்றதென்று நாம் அறிகிறோம். ஆகையால் ஸ்ருஷ்டிக்கு முன்னும் ஸ்ருஷ்டிக்குப் பிறகும் இரண்டு அவஸ்தைகளிலும், ப்ரஹ்மத்தின் விசேஷணமாக இருக்கும் இந்தச் சேதநாசேதநாத்மகமான ப்ரபஞ்சம் இருத்தல் வேண்டும். ஆகையால் ஸர்வாவஸ்தைகளிலும் சரீர சரீரிபாவம் சொல்வதில் எவ்வித அநுபபத்தியும் இல்லை.

அஸ்ய ஸூக்ஷ்மஸ்ய ஸூக்ஷ்மஸ்ய ச ஸத்பாவ: । ததா ச "பஹுஸ்யாம் ப்ரஜாயேய" இத்யாதயோ(அ)பி ஸம்பன்னோ பவதி । ததேவ்யேவஸ்துவஸ்ய காயத்தயா காரணதயா ச நாநாஸம்ஸ்தாநஸம்ஸ்திதஸ்ய ஸம்ஸ்தாநதயா அப்ருதக்ஸித்தவிசேஷணத்வமிதி ।

நநு ஸம்ஸ்தாநரூபேண ப்ரகாரதயா 'ஸவதா' ஸம்பந்தித்வம் ஜாதிகுணயோரேவ த்ருஷ்டம் ந த்ரவ்யஸ்ய; ஸ்வதந்த்ரஸித்தியோக்யஸ்ய

தால் தான், 'பஹுஸ்யாம் ப்ரஜாயேய' [நான் பஹுவாக ஆவேன்] என்னும் பஹுபவநமும் உபபந்நமாகும். ஆகையால் சேதநாசேதந வஸ்துக்களெல்லாம், கார்ய வஸ்துவாகவும் காரண வஸ்துவாகவும் இம்மாதிரி பற்பல அமைப்புக்களுடன் இருக்கும் ப்ரஹ்மத்துடனேயே எப்பொழுதும் சேர்ந்து அந்த ப்ரஹ்மத்திற்கு விசேஷணங்களாக இருக்கின்றன என்பது ஏற்படுகின்றது.

நநு ச............த்ரவ்யஸ்ய —'அப்படி, ஒரு பதார்த்தத்துடன் எப்பொழுதும் சேர்ந்தே அதற்கு விசேஷணமாக இருக்கும் தன்மையானது ஜாதி குணம் இவைகளின் விஷயத்தில் மாத்ரம் காணப்படுகின்றதே தவிர, த்ரவ்யத்தின் விஷயத்தில்

"பஹுஸ்யாம் ப்ரஜாயேய" இத்யாதயோ(அ)பி ஸம்பன்னோ பவதி— இப்படி ஸ்ருஷ்டிக்குப் பூர்வ காலத்திலும் சேதநாசேதந வஸ்துக்கள் இருந்தால் மாத்ரம், 'நான் பஹுவாக ஆகக்கடவேன்' என்று ப்ரஹ்மம் ஸங்கல்பிக்க உபபத்தி உண்டு. அப்படி அவைகள் இல்லாமலே ப்ரஹ்மம் பஹுவாக ஆவதற்கு ஸங்கல்பித்தால், ப்ரஹ்மமே மாறுதல் அடையவேண்டி வரும். அப்படி அது மாறுதல் அடைகின்றது என்று சொல்வது, 'ப்ரஹ்மம் விகாரமற்றது' என்று சொல்லும் ச்ருதி வாக்யத்திற்கு விருத்தம். தவிரவும், ப்ரஹ்மம் சேதநாசேதந வஸ்துக்களைப் புதிதாக ஸ்ருஷ்டித்து அம்மாதிரி அது பஹுவாக ஆகின்றது என்று சொல்லும் பக்ஷத்தில், அது, 'சேதநனாகிற ஜீவனும் அசேதநமாகிற ப்ரக்ருதியும் இரண்டும் உத்பத்தியற்றவை' என்று சொல்லும் ச்ருதி வாக்யத்திற்கு விருத்தம். ஸ்ருஷ்டிக்கு முன்னும் இவை இருந்தன வென்று சொல்லும் பக்ஷத்தில் இம்மாதிரியான விரோதங்கள் வரமாட்டா என்பது தாத்பர்யம்.

ஸம்ஸ்தாநதயா அப்ருதக்ஸித்த— அப்ருதக் ஸித்த தர்மமாக இருக்கின்றது. அதாவது, ப்ரஹ்மத்தை விட்டுத் தனித்து ஸ்வதந்த்ரமாக நிற்கக் கூடாததாக இருக்கின்றது என்பது தாத்பர்யம்.

'ஜாதி குணயோரேவ த்ருஷ்டம்'—'பசு' என்பது வ்யக்தி; 'பசுத்தன்மை' (கோத்வம்) என்பது ஜாதி. 'வெண்மை' என்பது குணம்; 'வெண்மையை உடைய பொருள்' என்பது குணி. இவைகளுக்கன்றோ தனித்து நிற்கக் கூடாமை லோகத்தில்

வஸ்துந: 'தண்ட' ஶப்தாபிதேயதயா ஸம்ஸ்தாநஸ்ய ப்ரகாராந்தரஸ்ய அயோக்யத்வ | உச்யதே | த்ரவ்யஸ்யாபி தண்டகுண்டலாதே: த்ரவ்யாந்தர ப்ரகாரத்வம் த்ருஷ்டமேவ | நநு ச, தண்டாதே: ஸ்வதந்த்ரஸ்ய த்ரவ்யாந்தர ப்ரகாரத்வே மத்வர்தீயப்ரத்யயோ த்ருஷ்ட:, யதா தண்டீ குண்டலீதி; அதோ கோத்வாதிதுல்யதயா சேதநாசேதநஸ்ய த்ரவ்யஸ்ய ஸதோ வஸ்துந: ஸ்வரூப ப்ரகாரதயா ஸாமாநாதிகரண்யேந ப்ரதிபாதநம் ந யுஜ்யதே | அத்ரோச்யதே | கௌ:, அஶ்வ:, மநுஷ்ய:, தேவ இத்யாதி பூதஸங்காதரூபாணாம் த்ரவ்யாணாமேவ, 'தேவதத்தோ மநுஷ்யோ ஜாத: புண்யவிஶேஷேண' 'யஜ்ஞதத்தோ கௌர் ஜாத: பாபேந கர்மணா' 'அந்யஶ்ச புண்யாதிரேகேண தேவோ ஜாத:' இத்யாதி

காணப்படவில்லை. மற்றொரு த்ரவ்யத்துடன் சேர்ந்தே இருக்கவேண்டும் என்னும் நியமமின்றிக்கே தனித்து இருப்பதற்கு யோக்யமாயுள்ள த்ரவ்யத்திற்கு, அந்த மற்றொரு த்ரவ்யத்துடன் ஸாமாநாதிகரண்யம் சொல்லும்படி ப்ரகாரத்தன்மையை ப்ரதிபாதிப்பது யுக்தமாகுமோ?' என்று ஒரு ப்ரச்நம் கேட்கலாம். 'யுக்தமாகும்' என்பதே நம்முடைய ப்ரத்யுத்தரம். தண்டம் குண்டலம் முதலிய த்ரவ்யங்களுக்கு அம்மாதிரியான ப்ரகாரத் தன்மையை நாம் காண்கிறோமல்லவா? ஆனால், 'தண்டம் முதலிய ஸ்வதந்த்ர த்ரவ்யங்கள் மற்றொரு த்ரவ்யத்திற்கு ப்ராகாரங்களாக இருக்கும் பொழுதெல்லாம், 'தண்டம் முதலியவைகளுடன் கூடியிருக்கின்றது அந்த மற்றொரு த்ரவ்யம்', என்று நாம் வ்யவஹரிக்கிறோமே தவிர, அந்த த்ரவ்யம் தண்டமே என்று ஸாமாநாதிகரண்யம் நாம் சொல்லவில்லை. ஆகையால், த்ரவ்யமாயிருக்கும் சேதநாசேதந வஸ்துக்களை, த்ரவ்யமின்றிக்கு ஜாதியாக இருக்கும் பசுத்தன்மைக்குத் துல்யமாக பாவித்து, அவைகளுக்கு ஈச்வரனுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்லுமளவு ப்ரகாரத் தன்மையை ப்ரதிபாதிப்பது யுக்தமாக மாட்டாது' என்று ஒரு ஆக்ஷேபம் செய்யலாம். இதற்கு ஸமாதாநம் சொல்லுகிறோம். ஸ்ம்ருதியிலும் வேதத்திலும் நாம் இம்மாதிரியான ஸாமாநாதிகரண்ய ப்ரதிபாதநத்தைப் பார்க்கிறோம். 'தேவதத்தன் ஒரு புண்ய விசேஷத்தால் மநுஷ்யனானான்' என்றும், 'யஜ்ஞதத்தன் ஒரு பாப விசேஷத்தால் மாடானான்' என்றும், 'மற்றொருவன்

காணப்படுகின்றது. ஒரு த்ரவ்யத்திற்கும் மற்றொரு த்ரவ்யத்திற்கும் அப்படிப்பட்ட ஸ்திதி காணப்பட வில்லையே. இது இவ்விடத்தில் செய்யப்படும் ஆக்ஷேபம்.

மத்வர்தீயப்ரத்யயோ த்ருஷ்ட:—'தண்டீ' (தண்டத்தை உடையவன்) என்னும் சப்தத்தில் 'தண்டம்' என்பது பகுதி; அதற்கு மேல் இருக்கும் ப்ரத்யயம் விகுதி. இதை 'மத்வர்தீயப்ரத்யய:' என்று சொல்வார்கள். அந்த விகுதி 'அதை உடையது' என்பதைக் குறிக்கும். தண்டம் போன்ற ஒரு த்ரவ்யம் அதை உடைய புருஷன்

267

𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌦𑌿 𑌶𑌰𑍀𑌰𑌾𑌣𑌾𑌂 𑌦𑍇𑌵𑌤𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑌯𑌾 𑌲𑍋𑌕𑌵𑍇𑌦𑌯𑍋𑌃 𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑌮𑍍 । 𑌉𑌭𑌯𑌤𑍍𑌰𑌃—𑌜𑌾𑌤𑌿𑌰𑍍𑌵𑌾 𑌗𑍁𑌣𑍋 𑌵𑌾 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌨 𑌤𑌤𑍍𑌰𑌾𑌦𑌰𑌃; 𑌕𑌿𑌂𑌤𑍁 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌵𑌿𑌶𑍇𑌷𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌣𑌤𑌯𑍈𑌵 𑌯𑌸𑍍𑌯 𑌸𑌦𑍍𑌭𑌾𑌵𑌃, 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑍇𑌃 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑌯𑌾 𑌤𑌤𑍍𑌸𑌾𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍; 𑌯𑌸𑍍𑌯 𑌵𑌾 𑌪𑍁𑌨𑌃 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑍍𑌯 𑌪𑍃𑌥𑌕𑍍𑌸𑌿𑌦𑍍𑌧𑌸𑍍𑌯𑍈𑌵 𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 𑌕𑍍𑌵𑌚𑌿𑌤𑍍 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑍍𑌵𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇, 𑌤𑌤𑍍𑌰 𑌮𑌤𑍍𑌵𑌰𑍍𑌥𑍀𑌯𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌯 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍇𑌷𑌃 । 𑌏𑌵𑌮𑍇𑌵 𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌜𑌙𑍍𑌗𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌸𑍍𑌯 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌵𑌸𑍍𑌤𑍁𑌨𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑌶𑌰𑍀𑌰𑌤𑍍𑌵𑍇𑌨 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌤𑌯𑍈𑌵 𑌸𑍍𑌵𑌰𑍂𑌪-

---

ஒரு புண்ய ஆதிக்யத்தால் தேவனானன்' என்றும் ப்ரயோகங்கள் இல்லையா? 'மநுஷ்யன்' 'மாடு' 'தேவன்' என்னும் பதங்கள் அசேதந த்ரவ்யங்களாக இருக்கும் அந்தந்தச் சரீரங்களைக் குறிக்கின்றன; 'தேவதத்தன்' 'யஜ்ஞதத்தன்' 'மற்றொருவன்' என்னும் பதங்கள் சேதந த்ரவ்யங்களாக இருக்கும் ஜீவன்களைக் குறிக்கின்றன. இப்படி, கேவலம் பஞ்ச பூத ஸங்காதங்களாக இருக்கும் த்ரவ்யங்களுக்கு வேறு த்ரவ்யங்களாக இருக்கும் சேதநன்களுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்லுகிறோமன்றோ? உண்மை என்னவென்றால், ஸாமாநாதிகரண்யம் ப்ரதிபாதிக்கும் பொருட்டு ஒன்று த்ரவ்யமாகவும் மற்றொன்று அதன் ஜாதி குணங்களுள் ஒன்றாகவும் இருக்கவேண்டுமென்னும் நியமம் இல்லை; ஒரு த்ரவ்யத்தைக் குறித்து, மற்றொன்று ஜாதி குண த்ரவ்யங்களுள் எதுவாக இருந்தபோதிலும், அது தனித்து நிற்கக் கூடாததாயிருக்குமளவு விசேஷணமாக இருக்கும் பக்ஷத்தில், அதற்கு, அப்படித் தனித்து நிற்கக் கூடாமல் இருக்கும் தன்மையையே ஆதாரமாகக் கொண்டு அந்த த்ரவ்யத்துடன் ஸாமாநாதிகரண்யத்தை நாம் சொல்லக் கூடும். மற்றொன்றுக்கு விசேஷணமாக இல்லாமலே ஸ்வதந்த்ரமாக நிற்கக் கூடிய

போன்ற மற்றொரு த்ரவ்யத்திற்கு விசேஷணமாக வந்தால், அப்பொழுது இம்மாதிரி ப்ரத்யயம் வரவேண்டுமே தவிர, ஸாமாநாதிகரண்யம் சொல்லக்கூடாது என்பது ஆக்ஷேபம்.

𑌲𑍋𑌕𑌵𑍇𑌦𑌯𑍋𑌃—இவ்விடத்தில் '𑌲𑍋𑌕𑌃' என்னும் பதத்திற்கு 'ஸ்ம்ருதி' என்று அர்த்தம் கொள்வது உசிதம். ஸாமாநாதிகரண்ய ப்ரதிபாதநத்திற்கு ப்ரமாணம் சொல்லும் இடத்தில் லௌகிக வாக்யத்தை ப்ரமாணமாகச் சொல்வதைக்காட்டிலும் ஸ்ம்ருதி வாக்யத்தை ப்ரமாணமாகச் சொல்வது உபபந்நமன்றோ? தவிரவும் அது வேதத்துடன் கூடப்படிக்கப் பட்டிருக்கின்றது.

“ 𑌅𑌤𑍋𑌽𑌸𑍍𑌮𑌿 𑌲𑍋𑌕𑍇 𑌵𑍇𑌦𑍇 𑌚 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ” என்னும் பகவத் கீதா வாக்யத்தின் பாஷ்யத்தில் “ 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌾𑌵𑌲𑍋𑌕𑌨𑌾𑌤𑍍 𑌲𑍋𑌕 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌿𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ” [வேதார்த்தத்தை விளக்குகிறபடியால் ஸ்ம்ருதியை 'லோகம்' என்று சொல்லக்கூடும்] என்னும் வாக்யத்தைக் காணலாம். '𑌲𑍋𑌕𑍍𑌯𑌤𑍇 𑌅𑌨𑍇𑌨 𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌃' என்பது அதற்கு வ்யுத்பத்தி.

𑌸𑍍𑌥𑌾𑌵𑌰 𑌇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑌾𑌰 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨 𑌏𑌵 𑌤𑌤𑍍𑌤𑌚𑍍𑌛𑌬𑍍𑌦𑌾𑌭𑌿𑌧𑍇𑌯𑌤𑌾 𑌇𑌤𑌿 𑌤𑌤𑍍𑌸𑌾
𑌮𑌾𑌨𑌾𑌧𑌿𑌕𑌰𑌣𑍍𑌯𑍇𑌨 𑌪𑍍𑌰𑌤𑌿𑌪𑌾𑌦𑌨𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑍍 । 𑌤𑌦𑍇𑌤𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌂 𑌸𑌰𑍍𑌵𑌤𑍍𑌰𑍈𑌵
𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑌣𑍇 𑌪𑍍𑌰𑌪𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ।

𑌅𑌤𑌃 𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿𑌪𑍁𑌰𑍁𑌷𑌮𑌹𑌦𑌹𑌙𑍍𑌕𑌾𑌰𑌤𑌨𑍍𑌮𑌾𑌤𑍍𑌰𑌭𑍂𑌤𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌤𑌦𑌾
𑌰𑌬𑍍𑌧𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌭𑍁𑌵𑌨𑌾𑌤𑍍𑌮𑌕 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌣𑍍𑌡𑌤𑌦𑌨𑍍𑌤𑌰𑍍𑌵𑌰𑍍𑌤𑌿𑌦𑍇𑌵𑌤𑌿𑌰𑍍𑌯𑌙𑍍𑌮𑌨𑍁𑌷𑍍𑌯
𑌸𑍍𑌥𑌾𑌵𑌰𑌾𑌦𑌿𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌕𑌾𑌰𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌕𑌾𑌰𑍍𑌯𑌮𑌪𑌿 𑌸𑌰𑍍𑌵𑌂

ஒரு த்ரவ்யம், எப்பொழுதாவது எவ்விடத்திலாவது மற்றொரு த்ரவ்யத்திற்கு ப்ரகாரமாக இருக்கும்படி சேர்ந்தால், அப்பொழுது அதற்கு ஸாமாநாதிகரண்யம் சொல்லக் கூடாது; அப்பொழுது தான் 'அந்த த்ரவ்யத்துடன் கூடிக்கொண்டிருக்கிறது அந்த மற்றொரு த்ரவ்யம்' என்று நாம் வ்யவஹரிக்க வேண்டும். இது தான் உண்மை. ப்ரக்ருதத்தில், ஸ்தாவரங்களாகவும் ஜங்கமங்களாகவும் வஸ்துக்களெல்லாம் எப்பொழுதும் ஈச்வரனுக்குச் சரீரமாகவே இருக்கின்றன; அவை ஒருபொழுதும் ஸ்வதந்த்ரங்களாக நிற்கக்கூடியவை யல்ல; அவைகளுக்கு ஸ்வரூபம் நிலைப்பது முழுவதும் ஈச்வரனுக்கு அவை ப்ரகாரங்களாக இருப்பதனாலேயே. ஆகையால் அவைகளுக்கு அந்த ஈச்வரனுடன் ஸாமாநாதிகரண்யம் சொல்வது யுக்தமே. அதாவது, அவைகளைச் சொல்லும் சப்தங்களெல்லாவற்றாலும் ஈச்வரனே சொல்லப்படுகிறான் என்று சொன்னதாயிற்று. இந்த விஷயம் முழுவதும் முன்னமேயே நாம ரூப வ்யாகரண ச்ருதி வாக்யங்களை விவரிக்கும் ப்ரகரணத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆகையால், சேதந தத்வ மாகிற ஜீவன், அசேதநங்களாகிற ப்ரக்ருதி மஹத் அஹங்காரம், தந்மாத்ரங்கள், பூதங்கள், இந்த்ரியங்கள், இவைகளுடைய பரஸ்பர சேர்க்கையால் உண்டாகும் பதினாலு லோகங்களடங்கிய ப்ரஹ்மாண்டம், அந்த ப்ரஹ்மாண்டத்தினுள் இருக்கும் (தனது) அப்ருதக் ஸித்த விசேஷணமான ஸுர நர திர்யக் ஸ்தாவராத்மக

𑌨𑌾𑌮𑌰𑍂𑌪𑌵𑍍𑌯𑌾𑌕𑌰𑌣𑌶𑍍𑌰𑍁𑌤𑌿𑌵𑌿𑌵𑌰𑌣𑍇—ஸத் வித்யா விவரணத்தை உபஸம்ஹரிக்கும் இடத்தில் இதைக் காண்க.

𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑌿—தத்வங்கள் இருபத்தைந்து. அவையாவன:— ஜீவன் ஒன்று, ப்ரக்ருதி மஹத் அஹங்காரம் இவை மூன்று, தந்மாத்ரங்கள் ஐந்து, பூதங்கள் ஐந்து, இந்த்ரியங்கள் பதினொன்று, இந்த இருபத்தைந்து தத்வங்களிலிருந்தே ப்ரபஞ்சத்தின் உத்பத்தி ஏற்படுகிறது என்பது நமது கொள்கை.

ப்ரஹ்மைவேதி காரணபூத ப்ரஹ்மவிஜ்ஞாநாதேவ ஸர்வம் விஜ்ஞாதம் பவதீத்யேக விஜ்ஞாநேந ஸர்வ விஜ்ஞாந முபபந்நதரம்। ததேவம் கார்யகாரண பாவாதிமுகேந க்ருத்ஸ்நஸ்ய சிதசித்வஸ்துந: பரப்ரஹ்ம ப்ரகாரதயா தாதாத்ம்ய முக்தம்।

அநேந பரஸ்ய ப்ரஹ்மண: ஸ்வரூபேண பரிணாமாஸ்பதத்வம்

"ஜந்மாத்யஸ்ய யத" :—இது ப்ரஹ்ம ஸூத்ரங்களில் இரண்டாவது ஸூத்ரம். காரண வாக்யங்களை உதாஹரிக்கப்புகும்பொழுது ஸூத்ரத்தை முன்னிட்டுக்கொண்டு லக்ஷண வாக்யத்தைச் சொல்லுகிறார். இந்த ஸூத்ரத்தின் பொருள் :—அஸ்ய-விவித விசித்ர போக்த்ரு போக்ய பூர்ணமான இந்த ஜகத்துக்கு, யத :—எதனிடமிருந்து, ஜந்மாதி - உத்பத்தி முதலியவை உண்டாகின்றனவோ, தத்—அது, ப்ரஹ்ம - ப்ரஹ்மம். "யதோ வா இமானி..." இத்யாதியான ச்ருதி வாக்யம், ஜகஜ் ஜந்மாதி காரணரூபமான லக்ஷணத்தைக்கொண்டு ப்ரஹ்மத்தை ப்ரதிபாதிக்க சக்தமா இல்லையாவென்று ஸம்சயம் வர, அப்படி ப்ரதிபாதிக்க அது சக்தமென்று இந்த ஸூத்ரம் சொல்லுகின்றது. அப்படி அந்த ச்ருதிவாக்யம் சக்தம் என்பதைக் குறிப்பதற்காகவே இவ்விடத்தில் இந்த ஸூத்ரம் உதாஹரிக்கப்பட்டிருக்கின்றது.

"யதோ வா......"—இது ப்ருகு வல்லி வாக்யம். இதன் பொருள் :—எதனிடமிருந்து இந்த பூதங்களெல்லாம் உண்டாகின்றனவோ, எதை அந்தராத்மாவாகக்கொண்டு அவை ஜீவிக்கின்றனவோ, எதில் அவையெல்லாம் லயத்தை அடைகின்றனவோ அதை ப்ரஹ்மமென்று அறி.

ஜகஜ்ஜந்மாதிகாரணம் ப்ரஹ்மேத்யவகம்யதே। தத்ர ஜகத்ஸ்ருஷ்டிப்ரளயப்ரக ரணேஷ்வவகந்தவ்யம் ஜகதுபாதாநதாநிமித்ததாந்தர்யாமித்வாதி ஸம்பந்ந ஜகத்காரணம், "ஸதேவ ஸோம்யேதமக்ர ஆஸீத்" இதி ஸச் ச்சப்தாபிஹிதமேவேத்யவகம்யதே। சாகாந்தரே "ப்ரஹ்ம வா இதமேகமே வாக்ர ஆஸீத்" இதி காரணவாசிநா ப்ரஹ்மசப்தேந வ்யபதிஷ்ட:; ததா ச,

---

ப்ரஹ்மமென்றே அறியப்படுகின்றது. அப்படி ஜகத்துக்கு உபாதான காரணமாகவும் நிமித்த காரணமாகவும் அந்தர்யாமியாகவும் இருக்கிறவும், ச்ருதி வாக்யங்களுள் ஜகத் ஸ்ருஷ்டி ப்ரளய ப்ரகரணங்களில் காணப்படும் வாக்யங்களிலிருந்தே அறியப்பட வேண்டியதுமான அந்த ஜகத்காரண வஸ்து, "ஸதேவ" இத்யாதி வாக்யத்தில் 'ஸத்' என்னும் சப்தத்தால் சொல்லப்படும் வஸ்துவே என்று அந்த "ஸதேவ" இத்யாதியான வாக்யத்திலிருந்து அறியப்படுகின்றது. வேறொரு சாகையில் காணப்படும் "ப்ரஹ்ம" இத்யாதியான வாக்யமும் ஜகத்துக்குக் காரணம் யாது என்னும் அர்த்தத்தையே விவரிக்கிறபடியால், 'ஸத்' என்னும் சப்தத்தால் சொல்லப்படும் அந்தக் காரண வஸ்து

தத்ர - 'ஜகத்காரணம் எதுவோ அது ப்ரஹ்மமாக இருக்கட்டும். அந்த ஜகத்காரண வஸ்து எதுவென்பது தெரியவில்லையே' என்று உண்டாகக் கூடிய சங்கையைப் பரிஹரிக்கிறார். அதை அறிவதற்கு ஜகத் ஸ்ருஷ்டி ப்ரளய ப்ரகரணங்களில் இருக்கும் வாக்யங்களையே பார்க்கவேண்டு மென்று அந்த வாக்யங்களை உதாஹரிக்கிறார். "ஸதேவ ஸோம்ய...". இது சாந்தோக்யம் 6-வது அத்யாயத்தில் காணப்படுகின்றது. இதன் பொருளை 51, 52-வது பக்கங்களில் காண்க.

ஜகதுபாதாநதா......ஜகத்துக்கு உபாதான காரணமும் நிமித்த காரணமும் எல்லாம், 'ஸத்' என்று சொல்லப்படும் வஸ்துவே. அது, ஜகத்துக்கு அந்தர்யாமியாகவும் இருந்துகொண்டு பரம காரணமுமாகின்றது என்பது இந்த ச்ருதிவாக்யத்தின் தாத்பர்யம். [உபாதான காரணம் நிமித்த காரணம் இவைகளின் அர்த்தம் கீழே விளக்கப்பட்டிருக்கின்றது.]

இவ்விடத்தில் வேறு சில சங்கைகளும் செய்யக்கூடும். "நஸந் சாஸச் சிவ ஏவ கேவல:" (முதலில் ஸத்தும் இல்லை அஸத்துமில்லை, சிவன் ஒருவனே இருந்தான்) என்னும் வாக்யம் சிவனுக்கு ஜகத் காரணத்வத்தைச் சொல்லுகின்றதே; இதை அநாதரிக்கக் கூடுமோ? என்பது ஒரு சங்கை. இதற்குப் பரிஹாரம் :—'இவ்விடத்தில் 'சிவன்' என்னும் சப்தம் அந்தப்

ஸத்ஶப்தேந ப்ரஹ்மஶப்தாபிஹிதமேவ மஹ்யதே। ஸ்வயமேவாத: ஶாகாந்தரே 'ஆத்மா வா இதமேக ஏவாக்ர ஆஸீத்'' இத்யாத்மஶப்தேநாபிஹித:; ததா ச ஸத்ப்ரஹ்மஶப்தாப்யாமபிஹிதமேவாபிஹித இத்யவகம்யதே। ஶாகாந்தரே அபரமேவாத: ''ஏகோ ஹ வை நாராயண ஆஸீந் ந ப்ரஹ்மா நேஶாநோ நேமே த்யாவாப்ருதிவீ ந நக்ஷத்ராணி'' இதி நாராயணஶப்தேநாபிஹித:; ததா ச ஸத்ப்ரஹ்மாத்மாதிஶப்தைர்ஜகத்காரணதயாபிஹித: ஶப்தை: நாராயண ஏவாபிஹித இதி நிஶ்சீயதே।

இந்த வாக்யத்தில் 'ப்ரஹ்ம' என்னும் சப்தத்தால் சொல்லப்படும் வஸ்துவே என்று அறியப்படுகின்றது. மற்றும் ஒரு சாகையில் காணப்படும் ''ஆத்மா வா'' இத்யாதியான வாக்யமும் அந்த ஜகத்காரண அர்த்தத்தையே விவரிக்கிறபடியால், 'ஸத்' 'ப்ரஹ்ம' என்னும் சப்தங்களால் சொல்லப்படும் அந்தக் காரண வஸ்து, இந்த வாக்யத்தில் 'ஆத்மா' என்னும் சப்தத்தால் சொல்லப்படும் வஸ்துவே என்று அறியப்படுகின்றது. இன்னும் வேருெரு சாகையில் காணப்படும் ''ஏகோ ஹ வை நாராயண:'' இத்யாதியான வாக்யமும் கீழ்க் கூறப்பட்டுள்ள அர்த்தத்தையே விவரிக்கிறபடியால், 'ஸத்' 'ப்ரஹ்ம' 'ஆத்மா' என்னும் சப்தங்களால் சொல்லப்படும் அந்தக் காரண வஸ்து, இந்த வாக்யத்தில் 'நாராயண' என்னும் சப்தத்தால் குறிக்கப்படும் வஸ்துவே என்று நிச்சயிக்கப்படுகின்றது.

பெயருள்ள தேவதையைக் குறிக்கவில்லை; ஆனல் அதற்கு 'ஸுகத்தைக் கொடுப்பவன்' என்பது பொருள்; ஆகையால் அது ஸுகப்ரதனகிற நாராயணன் பக்கலிலே சென்று சேரும்' என்பதுதான். 'சிவ' என்னும் சப்தத்தை நாராயண சப்த வாச்யனுக்கு விசேஷணமாக்கி யோஜிப்பது போல, நாராயண சப்தத்தை சிவ சப்தவாச்யனுக்கு விசேஷணமாக்கி வாக்ய யோஜனை செய்யக் கூடாதோ? என்னில், நாராயண சப்தம் யோகரூடி (காரணவிடுகுறிப் பெயர்), ஆகையாலே அம்மாதிரி சேர்க்கவொண்ணுது என்று ஸமாதாநம் சொல்வார்கள். 'ரூடிர்யோகமபஹரதி' என்பது ந்யாயம். 'சிவ' என்னும் சப்தம் யோகரூடி யன்ருே வென்ருல், அது ஸாதாரண யோகரூடி என்றும் நாராயண சப்தம் அஸாதாரண யோகரூடி யென்றும் சொல்வார்கள். இன்னும் இதுபோன்ற மற்றை பல சங்கைகளுண்டு. அவையெல்லாம் ப்ராப்த காலங்களில் விசாரிக்கப்படும்.

''ஸதேவ ஸோம்ய இதம்.............'' ''ஆத்மா வா.............'' ''ஏகோ ஹ வை நாராயண.............''. இவை ஸ்பஷ்டம்.

334

“யஸ்ஞ: ஸமுத்ரே கவயோ வயந்தி” இத்யாதிஷு “நைநமூர்த்வம் ந திர்யஞ்சம் ந மத்யே பரிஜக்ரஹத் ந தஸ்யேஶே கஶ்சந தஸ்ய நாம”

“யஸ்ஞ:............ஹேத்வாதயதி”:—தவிரவும், நாராயணோபநிஷத்தில், “யஸ்ஞ: ஸமுத்ரே கவயோ வயந்தி” என்று ஆரம்பிக்கும் வாக்யம்,

---

“யஸ்ஞ:...........” கீழில் ஜகத் காரணத்தைக் குறிக்கும் ‘ஸத்’ ‘ப்ரஹ்ம’ ‘ஆத்மா’ இவை முதலிய சப்தங்களெல்லாம் நாராயணனையே சொல்லுகின்றன வென்று ந்யாயத்தை முன்னிட்டு உபபாதிக்கப்பட்டது. இப்பொழுது அந்த உபபாதநத்துக்கு மற்றுமொரு ப்ரமாணம் கூறப்படுகின்றது. “யஸ்ஞ: ஸமுத்ரே” இத்யாதியான வாக்யம், தைத்திரீய உபநிஷத்தில் காணப் படுகின்றது. இது, இவ்விடத்தில் ப்ரதிபாதிக்கப்படும் வஸ்து மற்ற ஸகல வஸ்துக்களைக் காட்டிலும் பரமென்றும், இதைக்காட்டிலும் பரமான வஸ்து ஒன்றும் இல்லையென்றும் முக்யமாகச் சொல்லுகின்றது. அந்த வஸ்து எது வென்று அறிவதற்கு வேண்டுவனவான அடையாளங்களும் இந்த வாக்யங்களில் தென்படுகின்றன. முதலில் “யஸ்ஞ: ஸமுத்ரே” (ஸமுத்ரத்தினுள் இருக்கும்) என்னும் ஸமுத்ர சாயித்வமான லிங்கம், ‘அந்த வஸ்து நாராயணனே’ என்பதை ஸூசிப்பிக்கின்றது. இரண்டாவது “வித்யுத: புருஷாதபி” (மின்னல் வர்ண முள்ள புருஷன்) என்பதும், “நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ” என்னும் வாக்யம் போல அந்த நாராயணனையே குறிக்கின்றது என்பது வ்யக்தம். இந்த வாக்யத்திற்கு நாராயண பரத்வம் சொல்வதற்கு இவையெல்லாம் லிங்கங்கள்.

தவிரவும், இந்த “யஸ்ஞ:” இத்யாதியான வாக்யம், இதற்குப் பின் வரும் “அத்ப்ய: ஸம்பூத:” இத்யாதியான வாக்யத்துடன் ஒரே வாக்யமாகிறபடியால், அதற்குக் குறிப்பாக நிற்கும் நாராயணனே இதற்கும் குறிப்பாக இருத்தல் வேண்டும் என்பதும் இவ்விடத்தில் சொல்லப்படும் ஹேதுக்களுள் ஒன்று. இவை இரண்டும் ஒரே வாக்யம் என்பது இவ்விடத்திற் சொல்லப்படும் க்ரமத்தால் விளங்கும். அந்த க்ரமமாவது—“யஸ்ஞ: ஸமுத்ரே கவயோ வயந்தி” என்று ஆரம்பித்து, “யஸ்மிந் இதம் ஸம் ச வி சைதி ஸர்வம்” என்று முடிந்தவுடன், “அத்ப்ய: ஸம்பூதோ ஹிரண்யகர்ப இத்யஷ்டௌ” என்னும் வாக்யம் கூறப்பட்டிருக்கின்றது. இதன் பொருள்—‘ஹிரண்யகர்ப: என்று ஆரம்பிக்கும் எட்டு ருக்களும் இவ்விடத்தில் “யஸ்ஞ:” இத்யாதியுடன் சேர்த்துப் படிக்கப்பட வேண்டும்’ என்பது தான். ஆகையால் ஒரே வாக்யமாகின்றன என்பது ஸ்பஷ்டம். அப்படி இவை

மஹத்யஶ: । ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய ந சக்ஷுஷா பஶ்யதி கஶ்சனைனம் । ஹ்ருதா மனீஷா மனஸாபிக்லுப்தோ ய ஏனம் விதுரம்ருதாஸ்தே

"நைனமூர்த்வம்" இத்யாதியான வாக்யங்களால், உபாஸ்ய வஸ்துவானது மற்றை எல்லா வஸ்துக்களைக் காட்டிலும் பரமென்பதை விளக்கி,

---

ஒரே வாக்யமாகிறபடியால் இவைகளால் நிர்த்தேசிக்கப்படும் வஸ்துவும் ஒன்றாகவே இருத்தல் வேண்டும். ஹிரண்யகர்ப: இத்யாதியான அநுவாகம் நாராயண பரம் என்பதற்கு அதில் தென்படும் "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்பது ஸூசகமானதால் "அத்ப:" இத்யாதியும் நாராயண பரமென்று சொல்வதற்கு ஸந்தேஹ மில்லை.

இப்படி "அத்ப:" இத்யாதியான வாக்யம், ஸமுத்ர சாயித்வம் வித்யுத் வர்ண புருஷத்வம் ஆகிய இவ்விரண்டு லிங்கங்களாலும், லக்ஷ்மீ பதித்வத்தை லிங்கமாக உடைய உத்தர அநுவாகத்துடன் ஏக வாக்யமாகிறபடியாலும் நாராயணனையே ஜகத் காரணமாக ப்ரதிபாதிக்கின்றது என்பது ஸித்தம். "ஹிரண்யகர்ப:" என்னும் பதம், "ஹிரண்யகர்போ ஹேமகர்ப:" என்கிறபடி நாராயணனையும் குறிக்குமாகையால் அதற்கு 'ப்ரஹ்மா' என்று பொருள் கொள்ளவேண்டிய நிர்பந்தமில்லை.

அபர ஏஷா நாராயணாநுவாகே வ்யவஸ்தித:—இவ்விடத்தில் 'நாராயண அநுவாகம்' என்பதால் "ஸஹஸ்ரஶீர்ஷம் தேவம்" இத்யாதியான அநுவாகம் சொல்லப்படுகின்றது. "அம்பஸ்யபாரே" என்று ஆரம்பிக்கும் ப்ரச்நம் முழுவதற்குமே நாராயண உபநிஷத் என்று பெயர். இதில் முன் இருப்பதை பூர்வ நாராயண உபநிஷத்தென்றும் பின் இருப்பதை உத்தர நாராயண உபநிஷத்தென்றும் சொல்வார்கள். இந்த உத்தர நாராயண உபநிஷத் இந்த ப்ரச்நத்தில் 11-வது அநுவாகம். 10-வது அநுவாகத்தின் முடிவில்

"தஹ்ரம் விபாபம் பரவேஶ்மபூதம் யத்புண்டரீகம் புரமத்யஸம்ஸ்தம் । தத்ராபி தஹ்ரம் ககனம் விஶோகஸ்தஸ்மின் யதந்தஸ்ததுபாஸிதவ்யம் ॥ யோ வேதாதௌ ஸ்வர: ப்ரோக்தோ வேதாந்தே ச ப்ரதிஷ்டித: । தஸ்ய ப்ரக்ருதிலீனஸ்ய ய: பரஸ்ஸ மஹேஶ்வர: ॥"

भवन्ति" इतीदं सर्वस्योत्पत्तिं प्रतिपाद्य, तस्योत्पत्तिं किंचिन्न विद्यत इति च प्रतिषिध्य, "अद्भ्यः संभूतो हिरण्यगर्भ

"न तस्येशे" இத்யாதியால் அதைக்காட்டிலும் பரமான வஸ்து ஒன்றுமில்லை என்றும் ப்ரதிஷேதிக்கின்றது. அதற்குப் பிறகு வரும் "अद्भ्यः संभूतो हिरण्यगर्भ इत्यष्टौ" என்னும் வாக்யம், இதனுடன்

என்னும் வாக்யங்கள் காணப்படுகின்றன. இதற்குப் பிறகு 11-வது அநுவாகம் 'सहस्रशीर्षं देवम्" இத்யாதியாக ஆரம்பிக்கின்றது. இவ்விடத்தில் ஸங்கதி என்னவென்றால்—'10-வது அநுவாகத்தில், "தஹர வித்யை" என்னும் ஒரு ப்ரஹ்ம வித்யையைக் குறிப்பிட்டு, அதனால் உபாஸிக்கப்படும் தேவதை நாராயணனே என்று சொன்னபிறகு, 11-வது அநுவாகத்தில், ஸாமாந்யமாகப் பரவித்யா ப்ரகரணங்களெல்லாவற்றிலும் பரவஸ்துவை நிர்த்தேசிப்பதாகக் காணப்படும் 'பரப்ரஹ்மம்' 'பரஞ்ஜ்யோதிஸ்' 'பரதத்வம்' பரமாத்மா' இத்யாதியான சப்தங்களெல்லாம் நாராயணனையே நிர்த்தேசிக்கின்றனவென்று சொல்லப் படுகின்றது' என்பதுதான்.

இதைச் சற்று கவனித்துப் பார்போம். உபநிஷத்துக்களில் அநேக ப்ரஹ்மவித்யைகள் உபதேசிக்கப்படுகின்றன. அவைகளுள் சிலவற்றில், உபாஸிக்கப்படும் வஸ்து 'ஸத்' என்றும், மற்றும் சிலவற்றில் 'பரப்ரஹ்மம்' என்றும், மற்றும சிலவற்றில் 'பரமாத்மா' என்றும் இம்மாதிரி, உபாஸிக்கப்படும் வஸ்து பலவிதமாக வ்யவஹரிக்கப்பட் டிருக்கின்றது. இப்படிப் பல வித்யைகளில் பல பெயர்களால் நிர்த்தேசிக்கப்படும் வஸ்து நாராயணன் ஒருவனே என்பது நமது ஸித்தாந்தம். இவ்விதம் ஸித்தாந்தம் செய்வதற்குப்பல ப்ரமாணங்கள் உண்டு. அவைகளுள் இந்த உத்தர நாராயண அநுவாகத்தை நாம் ஒரு பெரிய ப்ரமாணமாக க்ரஹித்திருக்கிறோம். அதாவது, ஸகல பரவித்யைகளிலும் உபாஸ்யமாக நிர்த்தேசிக்கப் பட்டுள்ள வஸ்துவின் நிர்த்தாரணத்தைச் செய்வதற்கு இந்த அநுவாகத்தில் அநேக லிங்கங்கள் காணப்படுகின்றன என்பதே அப்படி க்ரஹிப்பதற்கு முக்ய காரணம். இதில், 'பரப்ரஹ்மமும் நாராயணனே; பரதத்வமும் நாராயணனே, பரஞ்ஜ்யோதிஸ்ஸும் நாராயணனே, பரமாத்மாவும் நாராயணனே' என்று, இம்மாதிரி பரவித்யைகளில் ச்ருதங்களாயுள்ள சப்தங்களை அநுவதித்து, அந்தச் சப்தங்களெல்லாவற்றாலும் நிர்த்தேசிக்கப்படும் வஸ்து நாராயணனே என்று தனித்துத் தனித்துச் சொல்லப்பட் டிருக்கின்றது. ப்ரஹ்ம ஸூத்ரகாரரான பகவாந் பாதராயணரும் இம்மாதிரியே அபிப்ராயப் பட்டிருக்கிறாரென்று, அவருடைய ப்ரஹ்ம ஸூத்ரம் 3-வது அத்யாயம் 3-வது பாதம் 43-வது ஸூத்ரமாகிற "लिङ्गभूयस्त्वात्तद्धि बलीयस्तदपि" என்னும் ஸூத்ரத்திற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் பாஷ்யம் அநுக்ரஹித்திருக்கிறார். அந்த அர்த்தமே இவ்விடத்திலும் சொல்லப்படுகின்றது.

इत्यादौ" इत्यस्य ऐकवाक्यतां दर्शयति। तद्वत् उत्तरानुवाकस्य प्रकरणं "ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ" इति नारायणस्यैवेति

அந்த வாக்யம் ஒரே வாக்யமாக இருப்பதை அறிவிக்கின்றது. அந்த अद्भ्यः संभूतः இத்யாதியான மஹா புருஷனைப்பற்றிப் பேசும் ருக்குக்கள் நாராயணனையே ப்ரதி பாதிக்கின்றன என்பது அவ்

இந்த அநுவாகத்திற்கு இவ்விதம் ஸகல வித்யோபாஸ்ய நிச்சாயகத்வத்தை ஒத்துக்கொள்வதில் சிற்சில ஆக்ஷேபங்களை சிற்சிலர் செய்வதுண்டு. (1) இந்த அநுவாகத்துக்கு முன், பத்தாவது அநுவாகத்தின் முடிவில் தஹர வித்யை ப்ரஸ்துதமாக இருக்கின்றபடியால், இதுவும் அந்த வித்யையை ஸம்பந்தப்பட்டதென்பதும், ஆகையால் அந்த வித்யை ஸம்பந்தப்பட்ட வரையில் மாத்ரம் இந்த அநுவாகம் உபாஸ்ய நிச்சயம் செய்யக்கூடும் என்று நாம் க்ரஹிக்கவேண்டும் என்பதும் முதல் ஆக்ஷேபம். இந்த அநுவாகத்தில் காணப்படும் "पद्मकोश प्रतीकाशम्" [தாமரஸ புஷ்பம் போன்ற] என்னும் வாக்யம், 'தஹர வித்யையில் காணப்படும் "यत्पुण्डरीकम्" இத்யாதியான வாக்யத்தை ப்ரத்யபிஜ்ஞைப் படுத்துகிறது என்பதும் இந்த ஆக்ஷேபத்திற்கு பலம் கொடுக்கின்றது. இதற்கு ஸமாதாநம் ஸ்ரீ பாஷ்யகாரர் பின்வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார். தஹரவித்யா ப்ரகரணத்தில் இந்த அநுவாகம் காணப்பட்ட போதிலும், ஆகையால் அந்தத் தஹரவித்யையுடன் இது ஏக வாக்யமாவது யுக்தமானாலும், ஸகல பரவித்யைகளிலும் ச்ருதங்களான சப்தங்கள் இதில் அநுவதிக்கப்பட்டு " 'அவைகளால் நிர்த்தேசிக்கப்பட்டுள்ள வஸ்து நாராயணனே' என்று விதிக்கப்பட்டிருக்கிற படியால், இதை ஸகல வித்யைகளுக்குமே ஸாதாரணமாக எடுத்துக் கொள்வதுதான் உசிதமாகும். இது தஹரவித்யை ஒன்றுக்கே ஸமர்ப்பகமாக இருக்கும் பக்ஷத்தில், 'பரப்ரஹ்மமும் நாராயணனே, பரதத்வமும் நாராயணனே' இத்யாதியாக பரப்ரஹ்ம பரதத்வம் முதலான சப்தங்களின் ப்ரயோகமும், நாராயண பதத்தின் ஆவ்ருத்தியும் செய்யப்பட்டிருக்கக் கூடா. வாக்யங்களின் தாத்பர்யத்தை நிர்ணயிப்பதில் இம்மாதிரியான லிங்கங்கள், ப்ரகரணத்தைக் காட்டிலும் பலீயஸ்ஸுக்கள் என்று மீமாம்ஸகர்களெல்லாரும் ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். 'पद्मकोशप्रतीकाशम्' இத்யாதியான தஹர வித்யா ப்ரத்யபிஜ்ஞாபகமான சப்தங்கள் காணப்பட்ட போதிலும், அது, 'இந்த அநுவாகத்திற்கு ஸகல வித்யோபாஸ்ய நிச்சாயகத்வமில்லை' என்பதை ஸூசிப்பிக்கவேண்டும் என்னும் நிர்பந்தமில்லை. முதலில் ஸாமாந்யமாக நிர்த்தேசிக்கப்பட்ட விஷயம் பிறகு தஹர வித்யையாகிற விசேஷத்தில் உபஸம்ஹாரம் செய்யப்படுகின்றது என்று தாத்பர்யம் சொல்லக்கூடும். "सदेव सोम्येदमग्र आसीत्" என்பதை "तत्त्वमसि" என்பதில் உபஸம்ஹரிப்பதுபோல. இதைப்போன்ற மற்றை ஆக்ஷேபங்களை வேறு ப்ரகரணங்களில் கண்டு கொள்ளலாம்.

ஶோதயதி। ஸர்வஶேஷீ நாராயணாத்மவாகேவ வ்யவஸ்தித:। "ஸஹஸ்ரஶீர்ஷம் தேவம் விஶ்வாக்ஷம் விஶ்வஶம்புவம் - விஶ்வம் நாராயணம் - விஶ்வமேவேதம் புருஷஸ்தத்விஶ்வமுபஜீவதி - நாராயண பரம் ப்ரஹ்ம தத்த்வம் நாராயண: பர:-

---

விடத்தில் தென்படும் "ஹ்ருத்ய தே முமுக்ஷுர்வை வதந்தி" என்னும் வாக்யத்தால் த்யோதிப்பிக்கப் படுகின்றது. இந்த அர்த்தத்தையே நாராயண அநுவாகமும் ஸ்புடமாக விளக்குகின்றது. "ஸஹஸ்ர ஶீர்ஷம்

"வ்யவஸ்தித:" வ்யக்தமாகச் சொல்லப்பட் டிருக்கின்றது. "யஜ்ஞ: ஸம்பூ" இத்யாதியான வாக்யத்திற் போல, கேவலம் ஸமுத்ர சாயித்வம் முதலிய லிங்கங்களால் கண்டுகொள்ள வேண்டியதில்லை; கண்டோக்தமாகக் காணப்படுகின்றது என்பது தாத்பர்யம். 'ஸஹஸ்ர ஶீர்ஷம்'—இதுபோன்ற இரண்டாவது வேற்றுமையை உடைய சப்தங்களுக்கு, இவ்விடத்தில், முதல் வேற்றுமை அர்த்தமே செய்துகொள்ளப் படவேண்டும். "விஶ்வமேவேதம் புருஷ:" என்று, மேலும், முதல் வேற்றுமையே காணப்படுகின்றது. இம்மாதிரி ப்ரயோகம் வேதத்தில் உண்டு. "யேநாவ்ருதம் கம் ச திவம் ச மஹீம் ச" என்னும் இடம் இதற்கு ஒரு நிதர்சநம். தவிரவும், இரண்டாவது வேற்றுமையின் அர்த்தத்தை எடுத்துக் கொண்டால் 'அந்தத் தேவனை [உபாஸித்தல் வேண்டும்]' என்று ஒரு க்ரியா பதம் அத்யாஹாரம் செய்துகொள்ளும்படி ஸம்பவிக்கும். அது கௌரவமாகுமாதலால், அத்யாஹாரம் செய்துகொள்ளாமல் அந்வயிப்பதே யுக்தமாகும்.

'விஶ்வாக்ஷம்' 'ஸகல விஷயங்களையும் ஸாக்ஷாத்கரிக்கும் தன்மையை உடையவன்' என்பது பொருள். 'விஶ்வஶம்புவம்" - ஸகல ஜகத்துக்கும் க்ஷேமத்தைச் செய்யக்கூடிய.

'விஶ்வம் நாராயணம் —ஸகல ஜகத்துக்கும் ஆத்மாவாக இருக்கிறபடியால் நாராயணன் விச்வமென்று சொல்லப்படுகிறான். ஸ்வரூபத்தாலேயே விச்வம் நாராயணன் என்பது அர்த்தமன்று. இந்த அர்த்தம், பின்வரும், 'விஶ்வமேவேதம் புருஷஸ்தத்விஶ்வமுபஜீவதி' என்னும் வாக்யத்தால் விவரிக்கப் படுகின்றது.

நாராயணபரம்ப்ரஹ்ம'—இதை 'நாராயண: பரம்ப்ரஹ்ம' என்று எடுத்துக்கொள்ளவேண்டும். 'பரம் ப்ரஹ்மம் நாராயணனே' என்பது பொருள். ஸமஸ்த பதமாக எடுத்துக்கொண்டு 'நாராயணாத் பரம்ப்ரஹ்ம [நாராயணனைக் காட்டிலும் பரமான ப்ரம்ஹம்] என்று அர்த்தம் செய்வது பூர்வாபர விருத்தம்.

நாராயணபரோ ஜ்யோதிராத்மா நாராயண: பர: - அநந்தமவ்யயம் கவிம்
ஸமுத்³ரே(அ)ந்தம் விஶ்வஶம்பு⁴வம் - பத்³மகோஶப்ரதீகாஶம்" இத்யாரப்⁴ய,
"ஸ ப்³ரஹ்மா ஸ ஶிவ: ஸேந்த்³ர: ஸோ(அ)க்ஷர: பரம: ஸ்வராட்" இத்யந்தே-
ந, ஸர்வஶாகா²ஸு பரதத்த்வப்ரதிபாத³நபரதயா "அக்ஷர, ஶிவ, ஶம்-
பு⁴, பரப்³ரஹ்ம, பரஞ்ஜ்யோதி:, பரதத்த்வ, பராயண, பரமாத்மா" இ-
த்யாதி³ ஸர்வஶப்³தா³ந் தத்³கு³ணயோகே³ந நாராயண ஏவ ப்ரத்யாஹ்ருத்ய
தத்³வ்யதிரிக்தஸ்ய ஸமஸ்தஸ்ய ததா³யத்ததாம் தத்³வ்யாப்யதாம் ததா³தா⁴ரதாம்
தந்நியாம்யதாம் தச்சே²ஷதாம் ததா³த்மகதாம் ச ப்ரதிபாத்³ய, ப்³ரஹ்மஶிவயோ-
ரபி இந்த்³ராதி³ஸமாநாகாரதயா தத்³விபூ⁴தித்வம் ச ப்ரதிபாதி³தம் | இத³ம் ச

தே³வம்" என்று ஆரம்பித்து "ஸோ(அ)க்ஷர: பரம: ஸ்வராட்" என்னும் வரையில் காணப்படும் வாக்யங்களில், ஸகல சாகைகளிலும் பரதத்வத்தை நிர்த்தேசிப்பனவாகக் காணப்படும் "அக்ஷர, சிவ, சம்பு, பரப்ரஹ்ம, பரஜ்யோதிஸ், பரதத்வ, பராயண, பரமாத்மா' முதலான சப்தங்கள் எல்லாம் தம் தம்பக்கல் குறிக்கப்படும் குணங்களின் வழியாக நாராயணனைக் குறித்தே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கிறபடியால் அவைகளால் நிர்த்தேசிக்கப்படும் வஸ்து அந்த நாராயணனே என்றும், அவனைத் தவிர்த்த மற்றை வஸ்துக்களெல்லாம் அவன் அதீநங்களாயும், அவனுக்கு வ்யாப்யங்களாயும், அவனை ஆதாரமாக உடைத்தா யிருப்பனவாயும், அவனுக்கு நியாம்யங்களாயும், அவனுக்கு சேஷங்களாயும், அவனை ஆத்மாவாக உடைத்தா யிருப்பனவாயும் நிற்கின்றனவென்றும், ப்ரஹ்மா சிவன் இவர்களும் இந்த்ரனைப் போலவே அவனுடைய விபூதிக்குள் அகப்பட்டவர்கள் என்றும் ப்ரதி பாதிக்கப்பட்டிருக்கின்றது.

'ஸமுத்³ரே(அ)ந்தம்'-ஸமுத்³ரே ஸ்தா²நம் யஸ்ய (ஸமுத்ரத்தை ஸ்தாநமாக உடைய) என்பது அர்த்தம். 'அந்த:' என்பதற்கு 'ஸ்தாநம்' என்று பொருள் உண்டு. 'அந்த: ஸமாப்தௌ ஸ்தா²நே ச' என்பது நிகண்டு.

'ஸ ப்³ரஹ்மா ஸ ஶிவஸ்ஸேந்த்³ர: ஸோ(அ)க்ஷர: பரம: ஸ்வராட்' அந்த நாராயணனே சதுர்முக ப்ரஹ்மா, அவனே சிவன், அவனே இந்த்ரன், அவனே முக்தஜீவன்;' இப்படிச் சொல்லப்படும் ஸாமாநாதிகரண்யம் 'நாராயணனுக்கு, மற்ற சேதந அசேதந வஸ்துக்களெல்லாம் விபூதிகள்' என்பதை ஆதாரமாகக் கொண்டது. இந்த்ரன்போல, ப்ரஹ்மாவும் சிவனும் அவனுடைய விபூதிகளுக்கு உட்பட்டவர்கள் என்பது தாத்பர்யம். இவ்விதம் ச்ருதி சொல்லுகையில், ப்ரஹ்மா சிவன் முதலானவர்களை ஜகத் காரணமென்றும், எல்லாரையும் காட்டிலும் பரமென்றும் எப்படிச் சொல்லக்கூடும்? என்பது குறிப்பு.

'அக்ஷர:—என்பது முக்தனைக் குறிக்கின்றது. 'ஸ்வராட்' என்பதற்கு 'கர்மபந்தத்திற்கு உட்படாமல் இருப்பவன்' என்பது பொருள்.

வாகூ௵ கெவஞுவாரதக்ஷவ்ருதிவாஊநெகவாரழ ; அநகூஷ கிஂதிஊவதூ௫
ந வியீயதெ । சுஷிூநாகெூ வ்ருதிவாஷிதஷூ ஸவருஷாதூரஷெவநாவஷி-
தஷூ ஸ்ருஹூண: உவாஸநாஷிதூ, “ஸ்ருஹூவிஊாவெூாதிவாழ” ஊதூாஷி-
ஷூ வாகூாஞரெஷூ வியீயதெ ।

இந்த அநுவாகத்தில் காணப்படும் வாக்யம் பரதத்வத்தை நிர்ணயிப்பதற்காகவே ஏற்பட்டது ; ஆகையால் அதைத் தவிர்த்த வேறு உபாஸநம் முதலியதொன்றும் விதிக்கப்படவில்லை. இவ்விதம், மற்றை எல்லாவற்றையும் காட்டிலும் பரமென்று இந்த வாக்யத்தில் ப்ரதிபாதிக்கப்படும் ப்ரஹ்மத்தின் உபாஸநம் முதலியவை, ஸ்ருஹூ விஊாவெூாதி வாழ” என்னும் வாக்யாந்தரங்களில் விதிக்கப்படுகின்றன.

ஊஷ௦ அ வாகூழ—இந்த “ஸஹஸ்ரஶீஷ௦ தெவழ” இத்யாதியான வாக்யத்தின் குறிப்பை விளக்குகின்றார். “இந்த வாக்யத்திற்கு ஏன் ப்ரஹ்மா சிவன் முதலான தேவதைகள் பரமாக அர்த்தம் செய்யக்கூடாது ?” என்று ஒரு சங்கையைச் செய்து கொண்டு, ‘இந்த வாக்யத்தில் தேவதைகளின் உபாஸநத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை ; எந்த வஸ்து ஸர்வகாரணம் என்பது மாத்ரம் சொல்லப்படுகின்றது’ என்று பரிஹாரம் சொல்லுகிறார். ‘புருஷஸூக்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட புருஷ தத்வமே ஸர்வ காரணம்’ என்பதுதான் இந்த வாக்யத்தின் குறிப்பு.

சுஷிூநாகெூ—இந்த வாக்யத்தில் நிர்ணயிக்கப்பட்ட பரமகாரண வஸ்துவின் உபாஸநம், “ஸ்ருஹூவிஊாவெூாதி வாழ” இது முதலான வாக்யங்களால் விதிக்கப்படுகின்றது.

இதுவரையில், தமது பக்ஷத்திற்கு ஸாதகங்களான ப்ரமாணத்தை சொல்ல உபக்ரமித்து, முதலில் காரண வாக்யங்கள், பிறகு ஸ்ரீ புருஷ ஸூக்தம், பிறகு நாராயண அநுவாக வாக்யம் என்னும் க்ரமத்தில் ப்ரமாணங்கள் உதாஹரிக்கப்பட்டன. ஸ்ரீ ஆளவந்தாரும்,

“நாவெக்ஷஸெ யதி ததொ ஹூவநாநூ௨௵நி
நாஞ௦ வ்ருஹொ ஹவிதூெவ கூூத: வ்ருவதூ:”

என்பதால் காரண வாக்யங்களையும், பிறகு

“ஷாஹாவிகாநவயிகாஶயெஶிதூக்ஷ௦
நாராயண ! க்ஷயி நஊஷூதி வெஷிகூ: கு: ?”

என்பதால் ஸ்ரீ புருஷ ஸூக்தத்தையும், பிறகு

“ஸ்ருஹூா ஶிவஶூதஊவ: வரஊ: ஷராஷிதி”

என்பதால் நாராயண அநுவாகத்தையும் விவக்ஷித்து ஸ்வபக்ஷத்தை ஸ்தாபித்திருக்கிறார்.

அத:, “ப்ராணம் மநஸி ஸஹ கரணை:” இத்யாதி வாக்யம், ஸர்வகாரணே பரமாத்மநி கரணப்ராணாதி ஸர்வம் விகாரஜாதம் உபஸம்ஹ்ருத்ய தஸ்யைவ பரமாத்மந: ஸர்வேசாநம் த்யாயீத இதி பரப்ரஹ்மபூதநாராயணஸ்யைவ த்யாநம் விததாதி । “பதிம் விச்வஸ்ய” இதி,

---

“அத: .....”—இவ்விதம் நாராயணனே பரமகாரணமென்று ப்ரதிபந்நமாயிருக்கிறபடியால், “ப்ராணம் மநஸி” இத்யாதியான வாக்யம் பரப்ரஹ்மமாயிருக்கும் நாராயணனுடைய த்யாநத்தையே விதிக்கின்றது என்று சொல்லவேண்டும். ஏனென்றால், அந்த வாக்யம், ‘இந்த்ரியங்கள் ப்ராணன் இவை முதலிய விகார வஸ்துக்களை விகாரவஸ்து அன்றிக்கும் ஸர்வ காரணமாயும் இருக்கும் பரமாத்மாவினிடத்தில் உபஸம்ஹாரம் செய்யப்பட்டவையாக அநுஸந்தாநம் செய்துகொண்டு, ஸர்வத்துக்கும் ஈசாநனாக (ப்ரபுவாக) இருக்கும் அந்தப் பரமாத்மாவையே த்யாநம் செய்யவேண்டும்’ என்றன்றோ சொல்லுகின்றது? ஸர்வ காரணமான வஸ்து நாராயணனே என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறபடியால், இந்தவாக்யத்துக்கு நாராயணனிடத்திலேயே நோக்கு

அத:—இவ்விதம் ஸ்வபக்ஷத்தை விவரித்துவிட்டு, கீழ்ல் பூர்வ பக்ஷியால் உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதி வாக்யங்களின் அர்த்தத்தை விவரிக்கப் புகுகிறார். 277-279 பக்கங்களைப் பார்க்க.

அத:—ஆகையால். காரண வாக்யங்களாலும் ஸ்ரீ புருஷ ஸூக்தத்திலும் நாராயண அநுவாகாதிகளாலும் ‘நாராயணனே பரமகாரண வஸ்து’ என்பது ஸித்திக்கிறபடியால். இது மாத்ரமன்று ; ‘ப்ரஹ்மா சிவன் முதலான வேறு தேவதைகள் நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டு அவனால் ஸம்ஹரிக்கப்படும் வருகிறார்கள் என்பது ஸித்திக்கிறபடியாலும்’ என்றும் ஸூசிக்கப்படுகின்றது. ‘நாராயணனே பரம காரணம் ; மற்றை ப்ரஹ்மா முதலானவர்கள் அவனுடைய விபூதியுள் அடங்கினவர்கள்’ என்பது ஸித்தித்து விட்டால், பூர்வபக்ஷியால் உதாஹரிக்கப்பட்டுள்ள ச்ருதிவாக்யங்களுக்கு அர்த்தம் சொல்வது அதிஸுகரம் என்பது குறிப்பு.

“ப்ராணம் மநஸி ....” இது, பூர்வபக்ஷியால் உதாஹரிக்கப்பட்டவைகளுள் முதலான வாக்யம். இது “ஈசாநம் த்யாயீத” என்று முடிகின்றது. இவ்விடத்தில் ‘ஈசாந’ என்னும் சப்தம் சிவனைக் குறிக்கின்றதன்றோ என்பது சங்கை. இதற்கு ஸமாதாநம்:—‘இந்த வாக்யம் த்யாநத்தை விதிக்கின்றது ; த்யாநிக்கப்படவேண்டிய வஸ்துவோ ஸர்வகாரணமாயுள்ள வஸ்துவே; அந்த வஸ்து புருஷ ஸூக்தாதிகளில் ப்ரதிபாதிக்கப்படும் நாராயணனுகிற புருஷ தத்வமே; ஆகையால் இந்த வாக்யத்தில் ‘ஈசாந’ சப்தத்தால் குறிக்கப்படும் வஸ்து நாராயணனாகவே இருத்தல் வேண்டும்’ என்பதுதான். தவிரவும் ‘ஈசாந’ என்னும் சப்தம் நாராயணனையே முக்யமாகக் குறிக்கின்றது என்பதும் பரிஹாரம். இதற்கு ப்ரமாணம்

‘‘ந தஸ்யேஶே கஶ்சந’’ இதி ச தஸ்யைவ ஸர்வேஶ்வரதா ப்ர-திபாதிதா ।

அத ஏவ, ‘‘ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஶம்பு: ஆகா-ஶமத்யே த்யேய:’’ இதி, நாராயணஸ்யைவ பரமகாரணஸ்ய ஶம்பு-ஶப்தவாச்யஸ்ய த்யாநம் விதீயதே । ‘‘கஶ்ச த்யேய: ?’’ இத்யாரப்ய, ‘‘காரணம் து த்யேய:’’ இதி கார்யஸ்யாத்யேயதாவகமேந காரணைகத்யேயதாவகமாத், தஸ்யைவ நாராயணஸ்ய பரம காரணதா ஶம்புஶப்தவாச்யதா ச பரமகாரணப்ரதிபாதநைகபரே

என்பது வ்யக்தம். ஸர்வத்துக்கும் ஈசானனும் நாராயணனே என்பது, ‘‘பதிம் விஶ்வ-ஸ்ய’’ ‘‘ந தஸ்யேஶே கஶ்சந’’ இத்யாதியான ச்ருதி வாக்யங்களால் விளங்கும்.

‘‘அத ஏவ .....’’—இந்தக் காரணத்தினலேயே, ‘‘ஸர்வைஶ்வர்யஸம்பந்ந:’’ இத்யாதி வாக்யமும் நாராயணனுடைய த்யாநத்தையே விதிக்கின்றது என்பது விளங்குகின்றது. நாராயணனே பரம காரணமன்றோ ? ‘ஶம்பு’ என்னும் சப்தத்தாலும் அவனே சொல்லப்படுகிறானன்றோ ? ‘‘கஶ்ச த்யேய:? காரணம் து த்யேய:’’ இத்யாதியான ப்ரச்ந ப்ரதிவசநங்களால், ‘காரணவஸ்துவே த்யாநம் செய்யத் தகுந்தது ; கார்யவஸ்து த்யாநத்திற்கு அநர்ஹம்’ என்பது ஏற்படுகின்றபடியாலும் ‘அப்படிப்பட்ட பரமமான காரணவஸ்துவும் நாராயணனே; ஶம்பு என்னும் சப்தத்திற்கு வாச்யனும் அவனே’ என்பது பரமகாரணத்தையே ப்ரதிபாதிக்கும் நாராயண அநுவாகத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியாலும், அவைகளுக்கு விருத்தமாக இந்த

‘‘பதிம் விஶ்வஸ்ய’’ ‘‘ந தஸ்யேஶே கஶ்சந’’ என்னும் வாக்யங்கள். இந்த வாக்யங்கள் நாராயணனையே ஜகத்துக்கெல்லாம் பதியென்றும், அவனுக்கு மேற்பட்டு ஒருவனும் இல்லையென்றும் சொல்லுகின்றன.

அத ஏவ—‘‘ஸர்வைஶ்வர்யஸம்பந்ந: ஸர்வேஶ்வர: ஶம்பு-ராகாஶமத்யே த்யேய:’’ என்பது இரண்டாவது வாக்யம். கீழ்க்கூறப்பட்டுள்ள காரணத்தாலேயே இந்த வாக்யமும் நாராயணனுடைய த்யாநத்தையே விதிக்கின்றது என்று அறியவேண்டும். ‘ஶம்பு’ என்பது சிவனுடைய பெயர் அன்றோ ?’ என்னும் சங்கைக்கு, ‘‘விஶ்வாக்ஷம் விஶ்வஶம்புவம்’’ என்று நாராயணனைக் குறிப்பதாக ஶம்பு சப்தம் ப்ரயோகிக்கப்பட்டிருப்பது ஒரு ஸமாதாநம். தவிரவும், ப்ரகரணமும் ‘இந்த வாக்யம் நாராயணபரம்’ என்பதை விளக்குகின்றது. ‘‘கஶ்ச த்யேய:?’’ [யார் த்யாநிக்கத் தகுந்தவன் ?] என்னும் கேள்விக்கு, ‘காரணம் து த்யேய:’ [ஸர்வகாரணமே த்யாநிக்கத் தகுந்தது] என்று ப்ரதிவசநம் சொல்லி யிருக்கிற படியால் பிறகுவரும் ப்ரக்ருத த்யாந விதி வாக்யங்கள் ஸர்வ காரணத்தைப் பற்றியே இருத்தல் வேண்டுமென்றோ ? ‘ஸர்வைச்வர்ய ஸம்பந்நன்’ என்றும் ‘ஸர்வேச்வரன்’ என்றும் ஸர்

நாராயணாதந்யஸ்ய ஸர்வ ப்ரதிபாதநேந தத்விரோதாயாம் வாக்யாந்தரவ-
ர்ணநம் காரணஸ்யைவ த்யேயதாம் விதிவாக்யஸ்ய ந யுஜ்யதே ।

யதபி “ ததோ யதுத்தரதரம் ” இத்யுத்தர புருஷாத் பர-
தரத்வம் ப்ரதீயத இத்யுக்தம், ததபி ப்ரத்யுக்தம் । ததாஹி—
“யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித் யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கஶ்சித்”
இத்யுக்த்வா “ யஸ்மாதபரம் கிஞ்சிதபி பரம் நாஸ்தி ” இத்யஸ்ய ‘ யஸ்மாதந்ய-
ஸ்ய கேநாபி ப்ரகாரேண பரத்வநிஷேதாத் பரஸ்ய தத்த்வம் நாஸ்தி ’
இத்யர்த: । அணீயஸ்த்வம்—ஸௌக்ஷ்ம்யம் ; ஜ்யாயஸ்த்வம் ஸ்வேஶ்வரத்வம், ஸர்வ

வாக்யத்திற்கு வேறு அர்த்தம் கல்பிப்பது, காரணவஸ்துவின் த்யேயத்வத்தையே விதிக்கும் இந்த வாக்யத்திற்கு யுக்தமாகமாட்டாது.

“ யதபி........”—“ ததோ யதுத்தரதரம்...” இத்யாதியான வாக்யத்தில் ‘நாராயணனைக்காட்டிலும் பரதரமான வஸ்து ஒன்று உண்டு’ என்பது தோன்றுகின்றதே என்னும் சங்கையும் இதனாலேயே பரிஹரிக்கப்பட்டதாகி விடுகின்றது. எப்படியெனில்:—நாராயணனைக் காட்டிலும் பரதரமான வஸ்து ஒன்று உண்டு என்று சொல்வது,“ யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்” இத்யாதியான வாக்யத்திற்கு அத்யந்தம் விருத்தமாகும். “ யஸ்மாத் பரம் ” இத்யாதியான வாக்யத்தின் அர்த்தம் என்னவென்றால், ‘ எவனைக்காட்டிலும் வேறுபட்ட ஒரு வஸ்துவும், பரமான வஸ்துவன்றோ ’ என்பதுதான். ‘அதாவது இந்தப் புருஷனைக்காட்டிலும் எந்த ப்ரகாரத்தாலும் வேறுபட்டதான ஒரு வஸ்துவுக்கும், பரத்வம் என்பது இல்லை ’ என்று சொன்னதாயிற்று. ‘அணீய: ’ என்பதற்கு ‘ ஸௌக்ஷ்மம் ’ என்பதும், ஜ்யாய: ’ என்பதற்கு ‘ஸர்வேச்வரன்’

வகாரணத்தைக் குறிக்கும் அநுவாதமும் இந்த வாக்யத்தில் காணப்படுகிறபடியால், எது ஸர்வகாரண வஸ்துவென்று பூர்வம் நிர்த்தாரிக்கப் பட்டிருக்கின்றதோ அதுவே இவ்விடத்தில் த்யாநிக்கப்பட வேண்டுவதாகச் சொல்லப்படவேண்டும் என்பதும் வ்யக்தம். அதற்கு விருத்தமாக வேறு அர்த்தம் சொல்வது யுக்தமாகமாட்டாது.

யதபி “ ததோ யதுத்தரதரம்—”. இது மூன்றுவது வாக்யம். இந்த வாக்யத்தில் தோன்றும் சங்கை என்னவென்றால்—இந்த வாக்யத்திற்கு ஆபாதத: பின் வருமாறு ஒரு அர்த்தம் தோன்றும் :—தத:—அதைக்காட்டிலும், யதுத்தரதரம்-யாதொரு பரதரமான வஸ்து உண்டோ, அதுதான் அரூபம், அதுதான் அநாமயம். இந்த அர்த்தத்தைப் பார்த்தால், புருஷஸூக்தத்தில் ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள புருஷ தத்வத்தைக் காட்டிலும் பரதரமாக ஒரு வஸ்து உண்டென்று ச்ருதி சொல்வது போலத் தோன்றும். இந்தத் தோற்றம் தவறுதல் என்பதற்கு ஸமாதாநம் சொல்லி, இந்த வாக்யத்தின் உண்மையான அர்த்தத்தையும் விளக்குகிறார்.

முதலில், ஆபாதத: தோன்றும் அர்த்தம் அஸம்பத்தமாகும் என்பது பின்வருவதால் விளங்கும். “ யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித் ” [எதைக்காட்டிலும் வேறு

வ்யாபித்வாத் ஸர்வேச்வரத்வாச்ச । அத ஏதத்வ்யதிரிக்தஸ்ய கஸ்யாப்யணீயஸ்த்வம் ஜ்யாயஸ்த்வம் ச நாஸ்தீத்யர்த்த: । “யஸ்மாந்நாணீயோ ந ஜ்யாயோऽஸ்தி கச்சித்” இதி பூர்வவாக்யாதேதஸ்ய கஸ்யாபி ஜ்யாயஸ்த்வம் நிஷித்தமிதி, தஸ்மாதேதஸ்ய பரத்வம் ந யுஜ்யதே ।

கதமிதம் தஸ்ய வாக்யஸ்யார்த்த இதி சேதுச்யதே । அஸ்ய ப்ரகரணஸ்யோபக்ரமே, ‘தமேவ விதித்வாऽதிம்ருத்யுமேதி ... நாந்ய: பந்தா வித்யதேऽயனாய” இதி புருஷவேதநஸ்யைவாம்ருதத்வஹேதுதாம் தத்வ்யதிரிக்-

---

என்பதும் பொருள். இந்தப் புருஷன் ஸர்வத்தையும் வ்யாபித்து நிற்கிறவனுகவும், ஸர்வத்திற்கும் ஈச்வரனுகவும் இருக்கிறபடியால், இவனைத் தவிர்த்த மற்ற ஒரு வஸ்துவுக்கும் அணீயஸ்ஸாக இருக்கும் தன்மையும் ஜ்யாயஸ்ஸாக இருக்கும் தன்மையும் இல்லை என்பது வ்யக்தம். இப்படி மற்றை எல்லா வஸ்துவுக்கும் அணீயஸ்த்வமும் ஜ்யாயஸ்த்வமும் நிஷேதிக்கப்படுகிறபடியால், எவ்விதம் இவனைக்காட்டிலும் மற்றொன்றுக்கு பரத்வம் சொல்வது யுக்தமாகும்?

‘அப்படியானல் ப்ரக்ருத வாக்யத்தின் அர்த்தம் என்ன?’ என்று கேட்கக்கூடும். வாக்யத்தின் அர்த்தமாவது—இந்த ப்ரகரணத்தின் ஆரம்பத்தில், “**தமேவ விதித்வாऽதிம்ருத்யுமேதி**” இத்யாதியால் ‘அந்தப் புருஷனை வேதநம் செய்வதே அம்ருதத்வத்திற்கு ஹேது; மற்ற எதுவும் அந்த அம்ருதத்வத்திற்கு வழியாகமாட்டாது’ என்று ப்ரதிஜ்ஞை செய்துவிட்டு, பிறகு “**யஸ்மாத்பரம்**” இத்யாதியான வாக்யத்தால் ‘அந்தப் புருஷனே எல்லாவற்றைக் காட்டிலும் பரதரமான வஸ்து’ என்று ப்ரதிபாதிக்கப்பட்டிருக்கின்றது. அதற்குப் பிறகு “**ததோ யதுத்தரதரம்**” என்னும் ப்ரக்ருத வாக்யம். ‘**தத:**’=இப்படி புருஷதத்வமே பரதரமென்று கீழில் ப்ரதி

ஒன்றும் பரமான வஸ்து அன்றோ] என்று புருஷதத்வத்தைக் காட்டிலும் பரதரமான தத்வமொன்றுமில்லை என்று நிஷேதித்துவிட்டு, அடுத்த வாக்யத்தில் ‘**ததோ யதுத்தரதரம்**’ [அந்தப் புருஷதத்வத்தைக் காட்டிலும் யாதொரு பரதரமான வஸ்து உண்டோ] என்று சொல்வது முன்னுக்குப் பின் விருத்தமன்றோ? இந்த விஷயத்தை ஈட்டில் பின்வருமாறு விவரித்திருப்பது அதிமாத்ரம் ரஞ்ஜகம். “யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித் என்று ஓதிவைத்து, ‘அதுக்கு மேலே ஒன்று உண்டு காண்’ என்னும்போது, அஜ்ஞனுய்ச் சொல்லுமத்தனை; முதலிலே ஓதாதவன் வார்த்தை யாமத்தனை.” [ஈடு 4-ம் பத்து, 10-ம் திருவாய்மொழி.]

கதமிதம் தஸ்ய வாக்யஸ்யார்த்த:—வாக்யத்தின் உண்மையான அர்த்தம் என்னவென்றல்—**தத:**=கீழ்ச் சொல்லப்பட்டுள்ள ஹேதுவினல், **உத்தரதரம்**=ஸர்வோதக்ருஷ்டமான, **யத்**=பூர்வோக்தமான யாதொரு புருஷதத்வமுண்டோ, **தத்**=அந்த ஸர்வஸ்மாத் பரமான புருஷதத்வம், **அரூபம்**=கர்மக்ருதமான ப்ராக்ருத ரூப

ஶ்ராவயிதாம் ச ப்ரதிஜ்ஞாய, "யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" இத்யநேந புருஷஸ்ய ஸர்வஸ்மாத் பரத்வம் ப்ரதிபாத்ய । யத: புருஷதத்வமேவோத்தரம், ததோ, 'யதுத்தரதரம் புருஷதத்வம் ததேவாரூபமநாமயம்; ய ஏதத்விதுரம்ருதாஸ்தே பவந்தி, அதேதரே து:கமேவாபி

பாதிக்கப் பட்டிருக்கிறபடியால், '**யதுத்தரதரம்**' = அப்படி உத்தரதரமென்று ப்ரதிபாதிக்கப்பட்டுள்ள யாதொரு புருஷதத்வமுண்டோ, '**ததேவாரூபம்**' = அதுவே ரூபமற்றது, '**ததேவாநாமயம்**' = அதுவே ஆமயமற்றது; '**ய ஏதத்விது:...**' = இதை எவர்கள் அறிகிறார்கள் அவர்களே அம்ருதத்வத்தை அடைகிறார்கள்; '**அதே**

மற்றது; **அநாமயம்** = கர்மத்தால் ஏற்படும் ஸுக துக்காதிகளற்றது. **ய ஏதத்விது: அம்ருதாஸ்தே பவந்தி**-எவர் இந்தப் புருஷ தத்வத்தை உத்தரதரமென்று அறிகிறார்களோ, அவர்களே அம்ருதத்வத்தை அடைகிறார்கள். **அதேதரே து:கமேவாபியந்தி** அப்படி யறியாதவர்கள் ஸம்ஸாரத்தையே அடைகிறார்கள். '**ஸர்வாநந ஶிரோக்ரீவ:**" இத்யாதி வாக்யமும், "**ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:**" இத்யாதி வாக்யத்துடன் ஒரே அர்த்தத்தை உடையதாதலால், பரமபுருஷனென்கிற நாராயண விஷயமே. இந்த வாக்யத்திற்கு இப்படி அர்த்தம் சொல்வதற்கும் **பூர்வபக்ஷி:** தோன்றும் அர்த்தத்திற்கும் பேதம், வாக்யத்தின் முதலில் உள்ள '**தத:**' என்னும் சப்தத்தின் அர்த்தத்தைக் சார்ந்து நிற்கின்றது. '**தத:**' என்பது பூர்வோக்த புருஷதத்வத்தைப் பராமர்சிக்கின்றது என்பதும், '**உத்தரம்**' என்பது ருத்ரபரமென்பதும் பூர்வபக்ஷம்; '**தத:**' என்பது ஹேது பரமென்பதும் '**உத்தரம்**' என்பது ஸர்வஸ்மாத் பரனான புருஷ பரமென்பதும் ஸித்தாந்தம்.

அந்யதா உபக்ரமப்ரதிஜ்ஞாவிரோதாத்—இப்படி ஸித்தாந்தம் செய்வதற்கு ஹேதுவென்? என்றால், 'இவ்விதம் அர்த்தம் கொள்ளாவிட்டால் உபக்ரமத்தில் செய்யப்பட்டுள்ள ப்ரதிஜ்ஞைகளுக்கு விரோதம் ஏற்படும்' என்கிறார்

இந்த ப்ரகரணம் எப்படி இருக்கின்றது எனறால்—முதலில்,

"**ததேவ விதித்வாதிம்ருத்யுமேதி, நாந்ய: பந்தா அயநாய வித்யதே**"

பிறகு ""**யஸ்மாத் பரம் நாபரமஸ்தி கிஞ்சித்...தேநேதம் பூர்ணம் புருஷேண ஸர்வம்**",

முடிவில் "**ததோ யதுத்தரதரம்....**"

இது வாக்யங்களின் க்ரமம். இவைகளுள் முதல் வாக்யத்தில் புருஷதத்வத்தை வேதநம் செய்வது அம்ருதத்வத்திற்கு ஹேது' என்றும், 'அதைத் தவிர்த்த மற்றை எதுவும் அம்ருதத்வத்திற்கு வழி ஆமமாட்டாது' என்றும் இரண்டு ப்ரதிஜ்ஞைகள் செய்யப்படுகின்றன. நடுவில் வரும் வாக்யத்தில், 'அந்தப் புருஷதத்வமே ஸர்வஸ்மாத் பரம்' என்று சொல்லப்படுகின்றது. முடிவில் காணப்படும் வாக்யத்தில் '**ததோ யதுத்தரதரம்** என்பது அரூபம் அநாமயம்; இதை இவ்விதம்

யந்தி' இதி வாக்யார்த்த:. ஏவமுபக்ரமே அம்ருதத்வஹேதுத்வம் தத்வவேதநஸ்ய ஆவேத்ய.
த்வம் ப்ரதிஜ்ஞாதம் ஸஹேதுகமுபஸம்ஹரதி । ஸ ந்யாயோபக்ரமப்ரதிஜ்ஞா

தரே........'=மற்ற எல்லாரும் துக்கத்தையே அடைகிறார்கள். இதுதான் வாக்யத்தின் அர்த்தம். இவ்விதம் அர்த்தம் சொன்னால் மாத்திரம், கீழ் ப்ரதிஜ்ஞாதமாயுள்ள

அறிகிறவர்களே அம்ருதத்வத்தை அடைகிறார்கள், மற்றவர்கள் அம்ருதத்வத்தை அடையார்' என்று சொல்லப்படுகின்றது. இதைப் பார்த்தால் உபக்ரமத்தில் சொல்லப்பட்டுள்ள ஹேதுவே முடிவில் ஹேது புரஸ்ஸரமாக உபஸம்ஹரிக்கப்படுகின்றது என்பது வ்யக்தமாகவில்லையா? முதலில் சொல்லப்படடுள்ள அம்ருதத்வ ஹேது, புருஷதத்வ வேதநம்; ஆகையால் முடிவில் சொல்லப்படும் அம்ருதத்வ ஹேதுவும் அந்தப் புருஷதத்வ வேதநமாகவே இருத்தல் வேண்டும். ஆகையால் "ததோயதுத்தரதரம்" என்பதற்கு ஸித்தாந்திகள் சொல்லும் மாதிரி அர்த்தம் சொல்வதுதான் ஸங்கதமாகும். முதலில் புருஷதத்வ வேதநத்தை அம்ருதத்வ ஹேதுவென்று சொல்லிவிட்டு, முடிவில் 'அந்தப் புருஷதத்வத்தைக் காட்டிலும் பரமான வஸ்து ஒன்று உண்டு; அதை அறிவதுதான் அம்ருதத்வ ஹேது' என்று சொல்வது பூர்வாபர விருத்தமே ஆகும். இதுதான் இவ்விடத்தில் செய்யப்படும் உபபாதநம்.

யஸ்மாத்பரம் நாபரமஸ்தி கிஞ்சித்" என்னும் ச்ருதி வாக்யத்திற்கு ஸ்ரீ பாஷ்யகாரர் செய்துள்ள அந்வயம் கவனிக்கத்தகுந்தது. "யஸ்மாதபரம் கிஞ்சிதபி பரம் நாஸ்தி" என்பது அவர் செய்துள்ள அந்வயம். உள்ளபடி "யஸ்மாத் பரம் கிஞ்சிதபி அபரம் நாஸ்தி" என்று அந்வயம் செய்யும் பக்ஷத்தில் 'எதைக்காட்டிலும் உத்க்ருஷ்டதரமாக வேறு ஒரு வஸ்துவும் இல்லையோ' என்று மாத்ரம் அர்த்தம் கிடைக்கும். அப்படி அர்த்தம் கொண்டால், 'உத்க்ருஷ்டதரமானது ஒன்றுமில்லை' என்று அப்யதிக நிஷேதம் மாத்ரம் செய்ததாகும்; 'அவனுக்கு ஸமமானது ஒன்றுமில்லை' என்று ஸம நிஷேதம் செய்யப்பட்டதாக மாட்டாது. ஸ்ரீ பாஷ்யகாரர் செய்துள்ள அந்வயத்திலோ வென்றால், அவனைக்காட்டிலும் உயர்ந்த வஸ்துவுமில்லை, அவனுக்கு ஸமமும் இல்லை, என்று ஸம அப்யதிக உபய நிஷேதம் செய்யப்பட்டதாகின்றது. பகவான் நிஸ்ஸமாப்யதிகனானதால், உபய நிஷேதத்தைக் காண்பிக்கும் அர்த்தம் கொள்வதே ச்லாக்யம்.

'அணீய:'-இதற்கு 'ஸூக்ஷ்மமாக இருக்கும் தன்மை' என்பது பொருள். அதாவது, 'எல்லாவற்றினுள்ளிலும் வ்யாபிக்கும் தன்மை' என்று சொன்னதாயிற்று. ஸகல அசேதந தத்வத்தையும் வ்யாபித்து நிற்கின்றது ஜீவாத்மா; அந்த ஜீவாத்மாவையும் இந்தப் புருஷதத்வம் வ்யாபித்து நிற்கிறபடியால், இது ஸூக்ஷ்மமே. 'ஜ்யாய:'-இதற்கு 'ஸர்வத்துக்கும் ஈச்வரனாக இருக்கும் தன்மை' என்பது பொருள். இதில் அணீய:, ஜ்யாய: இரண்டு சப்தங்களும் நபும்ஸக லிங்க சப்தங்கள்; வ்ருக்ஷ: என்பது புல்லிங்க சப்தம். இப்படி ப்ரயோகம் செய்வது வேதத்தில் உண்டு.